உள்ளே:

அப்பனுக்குச் சாராயம்; குழந்தைக்குச் சத்துணவு!

— ஸ்பெஷல் ரிப்போர்ட்



கல்கி

KALKI 29.9.85 ரூ. 1.50

மங்கையின் எழிலின் நிறைவிற்கே
மனங்கவரும் பட்டுக்கு இணையுண்டோ!



மங்கையின் மனதிற்கு மகிழ்ச்சியூட்டுவதில் பட்டுப் புடவைகளுக்கு ஈடேதுமில்லை. லக்ஷ்மி சில்க் ஹவுஸ்"க்கு விஜயம் செய்தாலன்றி உங்கள் பட்டுப் புடவைகளின் தேர்வு நிறைவு பெறுவதில்லை. வாருங்கள், 30,000க்கும் மேலான அரிய படைப்புகளிலிருந்து தேர்ந்தெடுங்கள்.

லக்ஷ்மி சில்க் ஹவுஸ்
மாடியில்
பனகல் பார்க் எதிரில்,
தி. நகர், சென்னை 600 017.
உரிமையாளர்: லக்ஷ்மி சில்க் ஹவுஸ்
(சென்னை) & கோ.

market movers/LSH/585/85

ஸ்பெஷல் ரிப்போர்ட்

அப்பனுக்குச் சாராயம்; குழந்தைக்குச் சத்துணவு!



"தெருவெங்கும் சாராயத்தை ஆறாக ஓடவிட்டு, அதில் வரும் வருமானத்தில்தான் குழந்தைகளுக்குச் சத்துணவு போடப்படுகிறது என்பது மக்களிடையே பரவலாகப் பேசப்படும் ஒன்று. நீங்கள் அரசாங்கத்தில் பெரிய பதவியில் இருந்திருக்கிறீர்கள். சாராய வருமானமும், சத்துணவுக்காகச் செலவிடப்படும் பணமும், மற்றும் இது சம்பந்தப்பட்ட விஷயங்களும், உங்களுக்குத் தெரிந்திருக்குமே!" என்று பெரிய்ய பதவியில் இருந்து ஓய்வு பெற்ற அந்த அதிகாரியைக் கேட்டோம்.

அந்த அதிகாரி சுற்றும் முற்றும் ஒரு தடவை பார்த்துக் கொண்டார். "தயவு செய்து தப்பா நினைக்காதீங்க. இந்த சப்ஜக்டை மட்டும் நாம் தொட வேண்டாம்" என்றார்.

"என்ன ஸார்... அப்படி அதில் என்ன இருக்கிறது?"

''வேண்டாம்ஸார். தொட்டால்ஷாக்கடிக்கும் சப்ஜெக்ட் இது?!''

பெரிய பதவியில் இருந்து ஓய்வு பெற்ற ஒருவர் இப்படி நடுங்குவதைப் பார்த்து வியப்பாக இருந்தது. இவர்கள் போலுள்ளவர்கள், அவ்வப்போது தமது கருத்துக்களை (அரசு கேட்கிறதோ — இல்லையோ) சொல்லி அரசைச் சரியான பாதையில் செயல்பட வைக்க வேண்டும். 'அறிவுரை சொல்பவர்கள் எல்லாம் வாயை மூடிக் கொண்டு விட்டால்...?

உண்மை என்னவெனில், 'சத்துணவுத் திட்டம் என்பது முதல்வரின் செல்லத் திட்டம்; அதைக் குறை கூறினால் அவர் பொறுக்கவே மாட்டார்' என்பது பரவலாக உள்ள கருத்து. இதனால்தான் வாய்திறக்கப்பயப்படுகிறார்கள். தாய்மார்களைக் கவர்வது போல் ஒரு திட்டம் கொண்டு வர வேண்டும். அப்படிக் கொண்டு வரும் திட்டத்தை எதிர்க்கட்சிகளும் எதிர்க்க முடியாதபடி இருக்க வேண்டும். அப்படி எதிர்த்தால் ஏழைகளின் வயிற்றில்அடிக்கிறார்கள்என்றகெட்டபெயர் தான் எதிர்ப்பவருக்கு வந்து சேர வேண்டும். யோசித்தார் — முதல்வர்; அல்ல — ஒரு பெரிய அதிகாரி! மறைந்து விட்ட அந்த அதிகாரி சொன்ன திட்டம்தான் சத்துணவுத் திட்டம். அந்த அதிகாரிக்கு வேண்டியவர்கள் கோயமுத்தூரில் இருந்து ஆலோசனை சொல்லவே அது சத்துணவுத் திட்டம் என்று பெயரிடப்பட்டது — இல்லையேல் அது மதிய உணவுத் திட்டம் என்றுதான் பெயரிடப்பட்டிருக்கும்.

தமிழ்நாட்டின் பட்ஜெட் 2000 கோடியைத் தாண்டி விட்டது. சாராய வருமானம் 250 கோடி ரூபாய். தற்போது சத்துணவுக்காகச் செலவிடப்படும் பணம் 200 கோடி. ஆக, சாராய வருமானத்திலிருந்துதான் குழந்தைகளுக்குச் சத்துணவு போடப்படுகிறது என்று முடிவு கட்டினால் அதில் தவறில்லை. சிலர் கேட்கக் கூடும்: சாராய வருமானத்திலிருந்துதான் — அதாவது அந்தப் பணத்தில்தான் சத்துணவு போடுகிறார்கள் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? சரி, அப்படி இல்லையென்றால் ஒவ்வொரு வருடமும் அடுத்த செப்டம்பர் பதினைந்தாம் தேதியிலிருந்து மதுவிலக்கை அமுல் படுத்தப் போகிறேன் என்று சொல்லும் முதல்வர், ஏன் அதைச் செய்வதில்லை? இந்தக் கேள்வியை அமைச்சர் சௌந்தர்ராஜனிடம் கேட்ட போது அவர் சொன்னார்: ''இரண்டையும் தயவு செய்து ஒற்றுமைப்படுத்திப் பார்க்காதீர்கள்.''

எப்படிப் பார்க்காமல் இருக்க முடியும்? சென்னையில் உள்ள ஒரு ரிக்ஷாக்காரர் மூன்று குழந்தைகள். மூன்றுமே சத்துணவுதான் சாப்பிடுகின்றன. அப்பா ரிக்ஷா மூலம் சம்பாதிப்பது பன்னிரண்டு ரூபாய். வாடகை கொடுத்தது போகத் 'தண்ணி' அடிக்க ஆறு ரூபாய்க்கு மேல் செலவாகிறது. ஒரு குழந்தைக்குச் சத்துணவு போட அரசாங்கத்துக்கு 60 பைசா செலவாகிறது. ∴ மூன்று குழந்தைகளுக்கு இரண்டு ரூபாய்க்கு மேல் அரசுக்குச் செலவாவதில்லை. ஆனால் அப்பன் சாராயத்துக்குக் கொடுத்த பணம் ஆறு ரூபாய்! யார் ஏமாளி?

சாராயக்கடை இல்லாவிட்டால் கள்ளச் சாராயம் சாப்பிட்டுக் கெட்டுப் போவார்கள் என்று சொல்கிறார்கள். மதுவிலக்குத் தோல்வியடைந்ததெனில் அதற்குக் காரணம் மதுவிலக்குக் கொள்கையின் மீதுள்ள குறைபாடு அல்ல! அதைச் செயல்படுத்த முடியாதவர்களின் கையாலாகாத்தனமே! உண்மையைச் சொல்லப் போனால் ஒரு வேதனையான சரண்டல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரசாங்கத்தாலேயே ஏழைகள் கொள்ளையடிக்கப்படுகிறார்கள். வெளிநாட்டில் 750 மில்லி மதுவின் விலை ஏழு ரூபாய்



* சாராயக்கடை வாசலில்...

தான். அதில் கிடைக்கிற லாபம் நான்கு ரூபாய் என்கிறார்கள். இங்கே அதே அளவு மதுவின் விலை இருபத்தைந்து ரூபாய். ஆனால் அதன் உண்மையான அடக்க விலை ரூ 1.50 தான். புட்டியின் விலை ஒரு ரூபாய் என்று வைத்துக் கொண்டால்கூட இரண்டரை ரூபாய்க்கு விற்க வேண்டும். ஆனால் இருபத்தைந்து ரூபாய்க்கு விற்கிறார்கள்., நூறு சதவீதம் லாபம். இடையில் புரளும் பணம் உடையவர்களுக்குப் போய்ச் சேருகிறது. என்ன ஏமாற்று வேலை! அறுபத்தாறாயிரம்சத்துணவுக்கூடங்களில்84லட்சம் குழந்தைகள், முதியோர்கள் சாப்பிடுகிறார்கள். சத்துணவுத் திட்டத்தால் கிட்டத்தட்ட இரண்டு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்கிறார்கள். மாதச் சம்பளம் 175 ரூபாய்தான்.

''நீங்கள் செலவழிக்கும் பணத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சிறு தொழில் தொடங்கி அதன் மூலம் வேலை வாய்ப்பை உண்டு பண்ணலாமே!' என்று சத்துணவு அமைச்சரிடம் கேட்டதற்கு, ''இது வீண் செலவு இல்லை. எதிர்காலத்துக்கான ஒரு முதலீடு. நமது குழந்தைகள் நன்றாக இருந்தால்தானே எதிர்காலம் ஏற்றமாக இருக்கும்'' என்றார்.





இதை அப்படியே ஒதுக்கித் தள்ள முடியவில்லை. அமைச்சர் கூறும் இந்தக் கருத்தில் உண்மை இருக்கிறது. புரதச் சத்துக் குறைந்தால் ஏழைக்குழந்தைகளின் அறிவு வளர்ச்சி, உடல் வளர்ச்சி பாதிக்கப்படவே செய்யும். ஆனால் அதே சமயம் இன்னொரு கேள்வி எழாமலும் இல்லை. அப்பனுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து அதன் மூலம் அவன் பெண்டு, பிள்ளைகளைத் தன் மானத்துடன் காப்பாற்றும் நிலைக்கு அவனைக் கொண்டு செல்ல வேண்டும். அதை விட்டு விட்டு... வோட்டுக்காகத் திட்டத்தைத் தீட்டினால்? வேண்டுமானால், எதிர்காலத்திலும் எங்கள் ஆட்சியே நீடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கொண்டு வரப்பட்டது என்று சொல்லி விடலாமே!

''சத்துணவுக் கூடத்தில் வேலை செய்பவர்கள் பெரும்பாலும் அ. தி. மு. க. ஆட்கள்தான் — அங்கு அரிசி, பருப்பு, எண்ணெய் முதலியன அமைப்பாளர்களால் களவாடப் படுகிறது. இது அ. தி. மு. க. வினருக்கு

'சத்து' அளிக்கும் திட்டம்'' என்பது போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமந்து கொண்டுதான் செயல்படுகிறது இந்தத் திட்டம். ஆனால் அமைச்சர் சொல்கிறார்: ''இவ்வளவு பெரிய திட்டத்தை அமுல்படுத்தும்போது ஓரளவுக்கு ஊழல்கள் இருக்கத்தானே செய்யும்? அதுபற்றிப் புகார் வந்தால் நானே சென்று விசாரித்து நடவடிக்கை எடுக்கிறேன்.''


இன்று அந்தக் குழந்தையின் பசியைத் தீர்த்துவிடலாம். இதை எத்தனை நாட்களுக்குத் தொடர்ந்து போட்டுக் கொண்டிருப்பார்கள்? நாட்டில் சோம்பேறிகள்தான் பெருகிக் கொண்டிருப்பார்கள். பொறுப்பற்ற அப்பன்களும், பகல் சினிமாவுக்குப் போகும் அம்மாக்களும்தான் நாட்டில்இருப்பார்கள்... சத்துணவுக்காகச் செலவிடப்படும் பணத்தைக் கிராமத்துக்குக் கிராமம் சிறு தொழில்களைத் துவங்கினால் தமிழ்நாட்டின் பொருளாதாரம் மிக வேகமாக வளர்ச்சியடையும் என்றும் இன்னும் சில வருடங்களில் (அதாவது எட்டு ஒன்பது ஆண்டுகளுக்குள்) குழந்தைகளுக்கு மதிய உணவு போட வேண்டிய அவசியமே இல்லாமல், பெற்றோர்கள் உயர்ந்த பொருளாதார நிலையை அடைவார்கள் என்று சில பொருளாதார வல்லுனர்கள் கூறுகிறார்கள்.

மறைந்த பிரதமர் இந்திரா அவர்களும், தற்போதைய பிரதமர் ராஜீவ் அவர்களும் இந்தத் திட்டத்தைத் திட்டச் செலவுகளுக்குள் கொண்டு வருவதை எதிர்த்தே வந்திருக்கிறார்கள். ஆனால் தற்போது மெதுவாக இந்தத் திட்டம், ஐந்தாண்டுத் திட்டச் செலவுகளுக்குள் நுழைக்கப்பட்டு இருக்கிறது. இதற்கு மத்திய அரசும் எப்படியாவது போங்கள் என்று கைகழுவி விட்டது போல் அனுமதி வழங்கி விட்டது. தேர்தல் தோழனின் தொல்லை பொறுக்க முடியவில்லையோ என்னவோ?

பாத்திரங்களுக்கும், சத்துணவுக் கூடம் கட்டுவதற்கும் திட்டச் செலவில் இருந்து பணம் கொடுக்கும் நிலை தற்போது ஏற்பட்டிருக்கிறது. இது ஆபத்தானது. கல்வி, மருத்துவம், விவசாயம், போன்ற முக்கியச் செலவுகளுக்காக வைக்கப்பட்டிருக்கும் திட்டச் செலவில், இந்தச் சத்துணவுத் திட்டத்தையும் சேர்த்துவிட்டால் 'மேற்கண்ட துறைகளில் உள்ள திட்டங்களுக்குப் பணம் குறைந்து... அவை அம்பேல்தான்!

தமிழ்நாட்டில் திட்டக் கமிஷன் என்று ஒன்று இருக்கிறது. இந்த கமிஷனின் கூட்டத்தில் சத்துணவுத் திட்டம் பற்றி இதுவரை பேசப்படவில்லையாம். ஆனால் டெல்லியில் அனுமதி வாங்கி வந்து விட்டார்கள்! சத்துணவுத் திட்டத்தைத் திட்டச் செலவிற்குள் கொண்டு வருவதனால் ஏற்படும் ஆபத்தைத் தமிழகத் திட்டக் கமிஷன் அரசுக்குத் தைரியமாக எடுத்துச் சொல்லுமா அல்லது அடங்கி ஒடுங்கி நமக்கேன் வம்பு என்று இருக்குமா?

இந்த விஷயத்தில் ஆந்திர அரசைப் பாராட்டலாம். கொஞ்ச நாட்களே செயல்பட்ட மதிய உணவுத் திட்டத்தைத் திட்டச் செலவுகளுக்கு அப்பாலேயே நிறுத்தி வைத்திருந்தது. செலவு எல்லை மீறவும் ஊழல்கள் மிகுதியாவது தெரிய வந்ததும் மதிய உணவுத் திட்டத்தையே மூட்டை கட்டி வைத்துவிட்-



டது. அந்த அளவுக்கு ஆந்திர அரசிடம் ஒளிவு மறைவற்ற ஒரு நேர்மை இருந்திருக்கிறது.

ஆரம்ப காலத்தில் சத்துணவுக்கென்று தனிப்பட்ட முறையில் அரசு வசூல் செய்தது. ஆனால் நாலரை கோடிக்கு மேல் நிதி தாண்ட வில்லை. ஓய்வு பெற்ற பெரிய அதிகாரியை இதுபற்றிக் கேட்டபோது அவர் சொன்னார்: "பொதுக்கூட்டங்களில் ஆளும் கட்சிப் பிரமுகர்களிடம் கொடுக்கப்பட்ட பணம் அப்படியே வந்து சேர்ந்திருந்தால் நிதி இன்னும் நிறைய பெருகியிருக்கும் — இடையில் கை வைத்ததால்தான் இந்த நிலை.

மறுபடி சாராயத்துக்கு வருவோம். 'சாராயக் கடைகளை மூடினால் அரசுக்கு மிகுந்த வருவாய் இழப்பு ஏற்படுவதுதான் நிகர பலன். மக்கள் என்னவோ கள்ளச் சாராயம் பருகிக் கொண்டுதான் இருப்பார்கள்' என்று வாதாடுகிறார்கள். இது எவ்வளவு தூரம் தவறானது என்பது துணை ஜனாதிபதி ஆர். வி. அவர்கள் ஒரு விழாவில் பேசியதில் இருந்து தெரிந்து கொள்ளலாம். 'மக்கள் மதுவைத் தொடாமல் இருந்தால் அவர்கள் பைகளில் நிச்சயம் பணம் இருக்கும். ராஜாஜி அவர்களின் ஆலோசனையின் பேரில் பல ஆண்டுகளுக்கு முன் நான் ஒரு சர்வே எடுத்தேன். தஞ்சாவூரில் உள்ள விவசாயத் தொழிலாளர்களிடையே எடுக்கப்பட்ட சர்வே அது. அந்த சர்வேயில் வெளிப்பட்டது என்னவென்றால், ஒரு குடும்பத் தலைவன் குடிப்பதை நிறுத்தினால், அவனால், அன்றையத் தினம் குடும்பத்தினர் இரண்டு முறை சாப்பிடுவதற்கான மளிகைச் சாமான்களை வாங்க முடிகிறது. இதை அறிந்திருந்ததால்தான்



• வி. ஐ. பிக்களின் ஸ்டண்ட்?



ராஜாஜி மது விலக்கினால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட விற்பனை வரியைக் கொண்டு வந்தார்.

ஆனால் தற்போது நிலைமை என்ன? மது விலக்கையே ரத்து செய்தாகி விட்டது. அப்படியானால் விற்பனை வரியையும் ரத்து செய்வதுதானே தர்மம்? மாறாக விற்பனை வரி சாராய வருமானம் போல் மற்றொரு 'காம தேனு' வாகி விட்டது அரசுக்கு. எல்லாப் பண்டங்களின் மீதும் ஒரு முனை - இரு முனை விற்பனை வரி! எவ்வளவு வரி வசூலித்தும் போதவில்லை அரசுக்கு!

சத்துணவுத் திட்டமாகட்டும், சாராயக் கடைகளைத் திறந்து விட்டதில் ஆகட்டும், கொள்ளையடித்தவர்கள் — அடிப்பவர்கள் பெரும்பாலும் ஆளும் கட்சியினரே! தனிப்பட்ட நபர்கள் சம்பாதித்தது போதாதென்று, இப்போது கட்சி ஆட்களும் சம்பாதிக்க வசதியாக 'தமிழக வாணிபக் கழக'த்திடம் மது விற்பனை பொறுப்பு தள்ளிவிடப்பட்டிருக்கிறது. இவர்கள் நிறுவப் போகும் ஏஜெண்டுகள் பெரும்பாலும் அ. தி. மு. க. ஆட்களாகவே இருப்பார்கள் என்று கருதலாம்.

சத்துணவுத் திட்டம் செயல்பட ஆரம்பித்த சில மாதங்களில் அதைக் கவனிப்பதற்காக உயர்மட்டக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. ஆனால் ஒருமுறை தான் அது கூடியது. அதற்குப்பிறகு அது கூடாததன் காரணம் அரசியலில் கொ. ப. செ.யின் சரிவுதான்.

இந்தச் சத்துணவுத் திட்டத்திற்கு அடிக்கடி சத்துக் கொடுத்து 'ஆகா ஓஹோ' அருமையான திட்டம் என்று ஆளும் கட்சிக்கு ஐஸ் வைத்துக் கொண்டிருக்கிறது ஒரு கூட்டம். இவர்களுக்கு உண்மையிலே நாட்டு நலனில் அக்கறை இருக்குமானால், எதிர்காலச் சந்ததிகள் நன்கு வாழ வேண்டும் என்று நினைத்தார்களேயானால், அரசுக்கு இந்தத் திட்டத்தின் குளறுபடிகளை எடுத்துச் சொல்லி நீண்ட கால நன்மை பயக்கும் திட்டத்தைக் கொண்டு வர ஆலோசனை கூற வேண்டும். கூடவே சாராயக் கடைகளையும் மூடச் சொல்ல வேண்டும். இவற்றைச் செய்யாதவரை நமது குழந்தைகளின் எதிர்காலம் கேள்விக்குறிதான்!

— நமது நிருபர்கள்.

படங்கள்: யோகா, மனோ, தமிழ்நாடு செய்தி விளம்பரத் துறை.



பாய்கிறார் பாலசுப்பிரமணியன்



புகைப்படம்: மனோ

வெங்கட் எழுதிய 'உயிரில் கலந்த உறவே' நாடகத்தைப் பிராமணர் சங்கம் கலாட்டா செய்து இடையிலேயே நிறுத்தியதை எழுதியிருந்தோம். தமிழ்நாடு பிராமண சங்கத்தின் சென்னைக் கிளையின் தலைவர் பாலசுப்பிரமணியன் அந்தக் கட்டுரையில் வந்திருக்கும் சில விஷயங்களை மறுக்கிறார். அவரோடு நடந்த நமது நிருபரின் உரையாடல் இது.

"அந்த நாடகத்தின் போது இடையில் நான் எழுந்து கத்தியது உண்மைதான். ஆனால் நீங்கள் எழுதியிருப்பது போல் 'வெட்டுவேன் கொல்லுவேன்' என்று சொல்லவில்லை."

"நீங்கள், 'I will take life out of you' என்று வெங்கட்டிடம் கோபத்துடன் சொன்னதாக டேப்பில் பதிவாகி இருக்கிறது."

"நோ அப்படிச் சொல்லவில்லை. 'மக்கள் உன்னைக் கவனித்துக் கொள்வார்கள்' என்று தான் சொன்னேன்."

"ஜனநாயக முறைப்படி உங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்காமல் நாடகத்தை நடுவில் நிறுத்தியது நியாயம்தானா?"

ஸார்! அன்று மைக் செட்டையும், நாற்காலிகளையும் உடைக்காமல் விட்டோமல்லவா! அவ்வளவு அமைதியாக நாங்கள் எங்கள் எதிர்ப்பைக் காட்டியிருக்கிறோமே!"

"உங்கள் எதிர்ப்பைக் காட்டத்தான் பல்வேறு ஜனநாயக வழிகள் இருக்கின்றனவே?"

(இந்தக் கேள்விக்குச் சரியான பதில் பாலசுப்பிரமணியன் அவர்களிடமிருந்து கடைசி வரை வரவில்லை.)

"என்ன ஸார் — பொடிப் பையன் வெங்கட்! அதைப் பெரிதாக எழுதி விட்டீர்கள். அவன் நாடகத்தில் காட்டியிருக்கும் பிராமண சமூகமா இன்று நாட்டில் இருக்கிறது? முற்போக்கு என்றாலே இன்று பிராமணன் தானே நினைவுக்கு வருகிறான். வெங்கட்டுக்குத் தைரியம் இருந்தால் ஒரு தேவர் பெண்ணையும், ஹரிஜன வாலிபனையும் காதலிப்பது போலவும், கல்யாணம் செய்து கொள்வது போலவும் காட்டச் சொல்லுங்களேன். இன்று பிராமண சமூகத்தில் வெங்கட் சொல்லுகிறபடி 'தண்ணி' அடிக்கும், மட்டன் சாப்பிடும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்களைப் பிரதானமாகக் காட்டி எல்லோருமே அப்படித்தான் என்ற மாயையை ஏற்படுத்த நினைத்தால், இல்லை! அது நடக்காது. பிராமணர் நடத்தும் பத்திரிகையில், பிராமணர்களைப் பற்றியே தவறான தகவல்கள் வருகின்றன"

"பத்திரிகை நடத்துவது பிராமணர்களாக இருக்கலாம். ஆனால் பத்திரிகை மக்களுக்காகத்தான்."

"உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். உங்கள் வாசகர்களில் தொண்ணூறு சதவீதம் பிராமணர்கள்தான். இப்போதெல்லாம், தான் பிராமணன் என்றாலும், அதை மறைத்துக் கொள்வதில் உங்களுக்கு ஒரு சுகம். நான் ஒரு சர்க்குலர் விட்டால் உங்கள் சர்க்குலேஷன் கவிழ்ந்து விடும்! என்னைப்

பற்றி, எங்கள் சங்கத்தைப் பற்றி ஒரு தகவல் வருகிறதென்றால் எங்களைக் கேட்டுவிட்டு அதைப் பிரசுரிக்க வேண்டும். அதை விட்டு விட்டு...''

''அதே நாடகத்தின் பிற்பகுதியில், பிராமண சமுதாயத்தை உயர்த்தும் வசனங்கள் வருகின்றனவே, அதற்கு என்ன சொல்கிறீர்கள்?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது ஸார். கன்னாபின்னாவென்று முதலில் ஒரு இமேஜை ஏற்படுத்திவிட்டுப் பிறகு இதையெல்லாம் சொ ்னால் எப்படி எடுபடும்? பிராமணர் சங்கம் எந்தக் காலத்திலும் எங்களைப் பிற்பட்ட வகுப்பினராக அறிவிப்புச் செய் என்று மனு செ ்டுத்ததே இல்லை.''

('ஆனால் மைனாரிடி ஃ முகட மனு கொடுத்திருக்கிறார்கள்.)

''பாலசந்தர், பாரதிராஜா எடுத்தார்களே என்று இனிமேல் எவனும் கேட்க முடியாது. அவர்கள் எடுத்த காலங்களில் சங்கமே இல்லை. இன்னொரு வேடிக்கை என்னவென்றால் நான் மன்னிப்புக் கேட்டதாக வெளி வந்திருப்பது. வெங்கட் என் வீட்டிற்கு வந்தார்.

''நீயும் பிராமணன்தானே. உன் போன்றோருக்குத்தான் சங்கம் இருக்கிறது. நாடகம் போடுவதை நிறுத்து. இதனால் உனக்கு ஏற்படும் நஷ்டத்தை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்' என்று தான் சொன்னேன். அதைப் பணிவாகச் சொன்ன காரணத்தால் மன்னிப்பு என்று கருதிவிட்டார் போலிருக்கிறது. வெங்கட் போன்றவர்கள் இனிமேலாவது திருந்த வேண்டும் — இல்லையேல் திருத்தப்படுவார்கள்!''

—நமது நிருபர்.

[வெங்கட்டுடைய நாடகத்தைக் குறை கூறியும் அவரது போக்கைக் கண்டித்தும் நமக்குப் பல கடிதங்கள் கல்கி வாசகர்களிடமிருந்து வந்துள்ளன. கல்கியில் வெளியானது வெங்கட் நாடகத்தைப் பற்றிய கல்கியின் விமர்சனமல்ல. அந்த நாடகத்தைக் கண்டிக்க பிராமணர் சங்கம் விரும்பினால் அதில் தவறும் இல்லை. ஆனால் அதை ஜனநாயக மரபுகளுக்கு ஏற்பச் செய்ய வேண்டும் என்பதே கல்கியின் வேண்டுகோள். திரு. பாலசுப்பிரமணியன், ''ஒரு மேடை நடிகன் (வெங்கட் என்று பெயர் குறிப்பிடக் கூட அவருக்கு விருப்பமில்லை!) உங்களுக்கு அளித்திருக்கும் பேட்டி தொடர்பாக உண்மைகளை அறிய நிருபரை அனுப்புங்கள்,'' என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க நமது நிருபர் அவரைச் சந்தித்த போது பாலசுப்பிரமணியன் கூறியவற்றை மேலே படித்தீர்கள். பாலசுப்பிரமணியத்தின் பேச்சும் நடத்தையும் சரியானதா என்று கணிக்கும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டு விடுகிறோம்!

மேலும் பிராமணர் சங்கத்தின் தமிழகத் தலைவர் திரு. காசிராமன் எங்களுக்கு எழுதியுள்ள கடிதம், பிராமணர் சங்கத்தைப் பற்றி நாம் நம்பிக்கை கொள்ளக் காரணமாகிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். —ஆசிரியர், கல்கி]

வருந்துகிறார் காசிராமன்!

தங்களது 15.9.85 தேதிய 'கல்கி' இதழைப் படித்து அதிர்ச்சி அடைந்தேன்.

திரு. வெங்கட் அவர்களது நாடக அரங்கில் கலாட்டா செய்ததாகக் கூறப்படும் அந்த பிராமணர் சங்கத் தலைவரின் பெயரைத் தாங்கள் குறிக்காததால் தங்கள் இதழைப் படித்த பலரும் சந்தேகத்தோடு என்னைக் கேட்கிறார்கள்.


திரு. வெங்கட் அவர்களை 31.8.85 அன்றோ, ஏன் இன்று வரைகூட நான் சந்திக்கவில்லை. அன்றைய தினம் கும்பகோணத்தில் தான் இருந்தேன்.

எந்தப் பிரச்னையையும் அமைதியான முறையிலும் நாகரிகமான முறையிலும் அணுகி நல்ல முடிவு காண முயல வேண்டும் என்பதை, தனது ஆரம்பத்திலிருந்தே, 'தமிழ்நாடு பிராமணர் சங்கம்' வலியுறுத்திக் கொண்டும் கடைப்பிடித்துக் கொண்டும் வருகின்றது என்பதை உறுதியாக எடுத்துக் கூற விரும்புகிறேன்.

திரு. வெங்கட் அவர்களிடம் முறையற்ற வகையில் நடந்து கொண்டவர்கள் 'தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின்' எந்தக் கிளையையாவது சார்ந்தவர்களாயிருப்பினும் அவர்களது முறையற்ற செய்கைக்காக எனது மனமார்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என். காசிராமன்,
தலைவர்,
தமிழ்நாடு பிராமணர் சங்கம்.




பயங்கரவாதிகள்
மத்திய அரசு
சீக்கிய மக்கள்
மோதல்
அமைதி, ஜனநாயகம்
இலங்கை அரசு
ஈழப் போராளிகள்
நானு தலைகீழா நிக்கறேன்னு..! அவரு தான்!..
இது ஒண்ணுலே தான்யா உங்களுக்குள்ளே ஒற்றுமை!
எப்படி வித்துப் போச்சு பாத்தீங்களா!.. இந்த டைப்லே இன்னும் ரெண்டு லேகியம் தயார் பண்ணுவாங்க!
லேகியம் படா ஜோர்!
மஜாவா இருக்கு!
முப்பெரும் விழா லேகியம்
லேகியம்
தி-மு-க வின் தொண்டர்கள்



கல்கி

1985 செப்டம்பர் 29
மலர் 44 இதழ் 9
குரோதன புரட்டாசி 13



கடுகானாலும் கப்பலானாலும் கமிஷன் உண்டு!

ஆர். வி. நிதி அமைச்சராக இருந்தபோது "பேரர் பாண்ட்" வழங்கி நியாயமாக வரி செலுத்துவோரின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டார். இந்தக் கறுப்புப் பணப் பத்திரங்களால் வரி ஏய்ப்போரே அனுகூலம் அடைந்தனர். இத்தகைய அநீதி மறுபடி நிகழாது என்று உறுதி அளித்ததற்காக இன்றைய நிதி அமைச்சர் வி. பி. சிங்கைப் பாராட்டலாம். கறுப்புப் பணப் பிசாசை நாட்டிலிருந்து அடித்து விரட்ட, வரிகளைக் குறைப்பது, வரி ஏய்ப்பவரைக் கடுமையாகத் தண்டிப்பது ஆகிய இரட்டை ஆயுதங்களே பிரயோகமாகும் என்று அரசின் முடிவான கொள்கையை அறிவித்ததற்காகவும் நிதி அமைச்சரை வாழ்த்தலாம். ஆனால் கூடவே, "செலவு வரி" விதிப்பது பற்றி ஆராய ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருப்பதைத் தெரிவித்தாரே, அதைத்தான் ஜீரணிக்க முடியவில்லை. செலவினங்கள் மீது வரி விதித்து அதன் மூலம் செலவினங்களைக் கட்டுப்படுத்தினால் அந்தச் செலவினங்களை நம்பி நடக்கின்ற பல தொழில்கள் நலிவடையும். அது முடிவில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கவே செய்யும். மேலும் இந்தச் செலவு வரியானது ஏற்கெனவே இங்கு அமுலில் இருந்து படுதோல்வி கண்டதால் ரத்து செய்யப்பட்ட ஒன்று. அதை மறுபடி உயிர்ப்பிப்பதில் யாருக்கும் நன்மை இல்லை.

கறுப்புப் பணம் பற்றி ஆராய அமைக்கப்பட்ட கமிட்டி, தனது அறிக்கையில் கூறியுள்ள மிக முக்கியமான ஓர் அம்சத்தை அமைச்சர் கண்டு கொள்ளாததுபோல் இருக்கிறார். இதுதான் விசனத்துக்குரியது. கறுப்புப் பணம் உருவாக அரசாங்கமே மிக முக்கிய காரணம் என்பதை கமிட்டி மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறது! இதற்காக கமிட்டிக்கு இந்த நாடே நன்றிக் கடன்பட்டிருக்கிறது.

நமது தேசத்தில் சோஷலிஸம் என்ற பெயரால் அரசாங்கமே எல்லாக் காரியங்களையும் செய்கிறது. தொழில் வர்த்தகத்திலும் ஈடுபடுகிறது. தனியார் எதைச் செய்ய முயன்றாலும் அதற்குப் பெர்மிட் — லைசென்ஸ் — கோட்டா என்று பல முட்டுக்கட்டைகள். புதுதில்லியில் குவிந்துள்ள இந்த அதிகாரங்கள்தான் கறுப்புப் பணம் உருவாக முக்கிய காரணம். பெர்மிட், லைசென்ஸ் அல்லது கோட்டா பெற முயலும்போதெல்லாம் லஞ்சம் தரப்படுகிறது. கொடுப்பது, வாங்குவது இரண்டும் கணக்கில் வராத கறுப்புப் பணமே. மேலும் அரசரங்கம் வாய்க்கால் மீதான குட்டிப் பாலம் முதல் பாம்பே — ஹை எரிவாயுவைக் கொண்டு செல்லப் பல மைல் நீளத்துக்குப் பைப் லைன் வரை எத்தனையோ பல காண்டிராக்டுகளைப் பலருக்குத் தருகிறது. ஒவ்வொரு காண்டிராக்டைப் பெறவும் காண்டிராக்டர்கள், காண்டிராக்ட் தொகைக்கு ஏற்ப லஞ்சம் கொடுக்கிறார்கள். கணக்கில் வராத இந்தக் கறுப்புப் பணத்தை 'ஆடிட்' தணிக்கையிலும் கண்டு பிடிக்க முடியாது. ஏனென்றால் இந்த லஞ்சத்தையும் உள்ளடக்கியே எஸ்டிமேட் தயாரிக்கப்படுகிறது! உதாரணமாக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அபிவிருத்தி இனங்களுக்காக அரசு செலவிடும் தொகை ரூ 1,70,000 கோடி! இதில் 10 சதம்தான் "ஒழுகி"யிருக்கும் என்று வைத்துக் கொண்டாலும் 17,000 கோடி ரூபாய் கறுப்புப் பணம் ஐந்தாண்டுகளில் உருவாகியுள்ளதாய்க் கருதலாம். மேலும், அரசு அயல் நாடுகளிலிருந்து கப்பல்களோ, விமானங்களோ அல்லது தற்காலிகப் பற்றாக்குறையைச் சமாளிக்கச் சர்க்கரையோ, எண்ணெய்யோ, வேறு எந்தப் பண்டமானாலும் சரி, வாங்கினால் அதற்குக் கமிஷன் உண்டு. இந்தக் கமிஷன் கறுப்புப் பணமாக ஆட்சி அதிகாரத்தில் உள்ளவருக்கே போய்ச் சேருகிறது. தேர்தல் போன்ற சமயங்களில் இது செலவாகி, பண வீக்கத்தையும் விலைவாசி உயர்வையும் ஏற்படுத்தி, மக்களை அவதிக்குள்ளாக்குகிறது.

எனவே கறுப்புப் பணப் புழக்கம் குறைய வேண்டுமானால், 1) பெர்மிட் — லைசென்ஸ் முறை ஒழிய வேண்டும்; 2) தனி நபர் வருமானவரியை நீக்கிவிட வேண்டும்; 3) தேர்தல் முறையை மாற்றி, செலவின்றி நடக்க வழி வகுக்க வேண்டும்; 4) அயல்நாட்டு வங்கிகளில் பணம் போட்டு வைப்பதைத் தேசத் துரோகமாகக் கருதித் தண்டிக்க வேண்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்.

காலையில் புத்துணர்ச்சி கொடுக்க ஒரு புது முறையின் அறிமுகம்...



ட்ரஸ்ட்

மார்னிங் - பற்பசை
உங்களுக்கு புத்துணர்ச்சியும்,
உறுதி கொண்ட புன்சிரிப்பும் கொடுக்க.

காலையில் உங்கள் பற்களை ட்ரஸ்ட் (மார்னிங்) பற்பசையினால் துலக்குங்கள், ட்ரஸ்ட் பற்பசையில் அடங்கியுள்ள வீரியமான கலவைப் பொருட்கள் உங்கள் பற்களை முற்றிலும் சுத்தப்படுத்தி பளிச்சிட்டுப் பிரகாசிக்கச்செய்கின்றன.

ட்ரஸ்ட் பற்பசை வாயில் துர்நாற்றத்தைப் போக்கி, உங்கள் சுவாசத்தை மிளிரச் செய்கின்றது. ட்ரஸ்ட்டுடன் பல் துலக்கும் நற்பழக்கத்தை உடன் கொள்ளுங்கள்.

ட்ரஸ்ட்...ஒரு விசேஷமான பற்பசை.

AKSHARA 9665 Tam (M)

உங்கள் குழந்தைகளுக்கு ஒரு நற்பழக்கத்தை அறிமுகம் செய்யுங்கள்...



ட்ரஸ்ட் (நைட்)

பற்பசையினால் இரவில் பல் துலக்கும் பழக்கம்

உறங்கும் பொழுது, பற்களிடையே சிக்கி இருக்கும் உணவுப்பண்டங்களின் மீதங்கள் வாயில் கிருமிகளைப் பெருகச் செய்து 'ப்ளாக்' என்ற மெல்லிய பற்பூச்சை படரச் செய்கின்றன. 'ப்ளாக்' பற்சிதைவு, பற்குழிகளை ஏற்படுத்திவிடும்.

உங்கள் குழந்தைகளின் பற்களை சிறுவயதிலிருந்தே பாதுகாக்க ட்ரஸ்ட் (நைட்) மூலம் இரவில் பல் துலக்குவது மிக அவசியம். அதில் இருக்கும் 'க்ளோர் ஹெக்ஸிடின்' பல மணி நேரம் வாயில் தங்கி பற்களைக் கெடுக்கும் கிருமிகளைக் கொல்லுகின்றது.

ட்ரஸ்ட்...ஒரு விசேஷமான பற்பசை.

9. பீடிப்பை நீக்கும் பிடிப்பு!

ஸ்ரீ ராமக்ருஷ்ணர்: என்றும் மாறுத ஸத்ய நிலையை அடைந்தபின் (மாறிக் கொண்டேயிருக்கும்) திருவிளையாடல் நிலையில் தங்கியிருப்பதே அழகு.

சீடர்: இப்படி விளையாடலுக்கு இறங்கி வருவது தெய்விக நாடகத்தை ரஸிப்பதற்காகவே என்று தாங்கள் ஒரு முறை சொல்லியிருக்கிறீர்கள். ஸரிதானே?

ஸ்ரீ ராமக்ருஷ்ணர்: அல்ல, அப்படிச் சொல்வது அவ்வளவு ஸரியல்ல. திருவிளையாடல் என்பது நாடகமல்ல. அதுவும் நிஜமேதான்.

—''அம்'' மின் Gospel
(ஜூன் 5, 1883).

தீராத விளையாட்டு ஸாயி

அன்பின் மதுர ரஸத்தைக் குழந்தை விளையாட்டாக உள்ளே இறக்கியே மது, மாம்ஸச் சுவைகளை எத்தனை பேருக்குப் போக்கியிருக்கிறார் ஸ்வாமி? இன்னும் ஸகலமாந்தருக்குமே ஆழ ஊறிய காமாதிச் சுவைகளையுந்தான். அதிலும் இவை தவறுதலாகத் தெரியாமல், 'இயல்பானவையே, நாகரிக வாழ்வுக்கு அவச்யமானவையே' என்று எடுத்துக்கொள்ளும்படியான சூழ்நிலையில் பல காலமாக ஊறிவிட்ட மேல்நாட்டினரில் கூட எத்தனையோ பேரை ஸ்வாமி வழிக்குக் கொண்டு வந்திருப்பது வியந்து துதிக்க வேண்டியதாகும்.

* * * * *

* அந்தப் பேர்வழியை எதில் சேர்ப்பது? ப்ரசாந்தி நிலயத்துக்கே இரண்டு பாட்டில் விஸ்கியுடன் வந்திருக்கிறார்! உடனிருந்தோர் ''அபசாரம், அபசாரம்'' என்று அலறுவதைப் பொருட்படுத்தாமல் ஸ்வாமியின் படத்தெதிரே விஸ்கி டம்ளரைக் காட்டி, ''பாபாவின் நல்லாரோக்யத்துக்காக'' என்று ஸ்வாமிக்கே 'டோஸ்ட்' சொல்லியல்லவா குடிக்கிறார்?

''எதை அநுபோகம் செய்தாலும் அதை எனக்கு அர்ப்பணம் செய்'' என்று கண்ணன் கூறியதைப் பின்பற்றும் கண்ணப்ப பக்தராகத்தான் இவரையும் ஸாயித் தாய் உவந்திருக்கிறாள்! தாயே குழந்தை லீலை செய்து அவரைத் திருத்தியும் விட்டாள்!

அந்தப் பேர்வழியின் வாயில் சென்ற விஸ்கி வெறும் தண்ணீராகியிருந்தது! கையிலிருந்த டம்ளருக்குள் இருந்த மீதி முழுதும் அப்படியே மாறிவிட்டது!

பாட்டிலில் மீதியிருந்ததைச் சுவைத்துப் பார்த்தார்... அதுவும் கங்கா பவானியாகியிருந்தது!

இன்னொரு பாட்டிலில் இருந்தது?

ஏன், அதுவுந்தான்!

ஆச்சர்யம்! ஓர் இரவு முழுதும் விஸ்கியில்லாமலே தூக்கம் பிடித்துவிட்டார் அதன் மெய்யடியார். கங்கை உள்ளே புகுந்து, கழுவியே விட்டது அந்த ஆசையை!

'தண்ணி காட்டிய' ஸ்வாமி குழந்தை மாதிரி விளையாடிக் காட்டினார் மறுநாள். பஜனைக்கு அமர்ந்திருந்த முன்னாள் குடியரிடம் வந்து நின்று, முதல் நாளிரவு அவர் தமக்கு 'டோஸ்ட்' காட்டியதை மௌன நாடகமாக அபிநயித்து விட்டு நகர்ந்தார்!

கால வழக்கையும் தேசாசாரத்தையும் ஒட்டி ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் இயேஸு நாதன் நீரை மதுவாக்கினான், இந்த 1982—ல் ஸாயி நாதன் மதுவை நீராக்கினான்!

* * * * *

* ஏதிலுமே நானாவித மாறுபாட்டழகு வேண்டுமே நம் அப்பனுக்கு! அதனால், மூன்றாம் அத்யாயத் தொடக்கத்தில் கண்ட சோப்ராவுக்கு மதுவைக் கோகோகோலாவாக்கி வந்தார் கோலாஹலர்.

முதலில் அவர் வீட்டில் ஸ்வாமி பூஜையில் விளையாட்டு ஆரம்பித்தது.

அன்று சோப்ரா ஸ்வாமிக்கு நிவேதனத்துடன் பருக நீரும் வைத்திருந்தார். குறிப்பாக எந்த உத்தேசமுமின்றி டம்ளரில் மூன்றில் இரண்டு பங்கு தீர்த்தம் விட்டுப் படத்தின் முன் வைத்தார். பூஜை முடிந்தது. பல இடங்களில் நிவேதனத்தில் சிறிதை எடுத்துக்

கொள்ளும் ஸ்வாமி நீர் பருகியிருப்பாரா. டம்ளரில்நீர்குறைந்திருக்குமாவென்றுசோப்ரா பார்த்தார். என்ன விந்தை! நிறைந்தாக்கும் இருந்தது டம்ளர்! பாக்கி மூன்றில் ஒரு பங்கும் நீர் நிரம்பி வழிந்தது!

நீரா? நீரா இப்படிக் கமகமக்கும்?

ப்ரஸாதமாக அதை உட்கொண்டார்கள். இவ்வுலகம் அறியாததொரு அம்ருத மதுரம்! ஆம், இதய மாதுர்யந்தான்!

சோப்ராவின் வீட்டில் தினந்தினமும் இப்படி நடக்கலாயிற்று.

வீட்டுக்கு வெளியே அந்தப் பெருந் தொழிலதிபர் அநேகப் பார்ட்டிகளில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. ஸமூஹ மரியாதையை உத்தேசித்து அவற்றில் சிலவற்றில் மதுவை மறுக்க முடியாமலும் இருந்தது. ஆனால் அப்போதும் சோப்ரா ஸ்வாமியையும், ஸ்வாமி சோப்ராவையும் மறக்கவில்லை. அதன் விசேஷம்தான் சோப்ராவின் கையிலுள்ள மது தவறாமல் கோகோகோலாவாகி வந்தது! நஞ்சு அமுதாக்கிய நெஞ்சச் சிறப்பு!

ஆயிரம் உபதேசங்களை விட இது போன்ற லீலை விநோதங்களே எத்தனையோ போதைப் பழக்க அடிமைகளைக் கிளறிவிட்டு, அதில் பிறந்த நம்பிக்கையிலேயே அவர்களுக்கும் மீட்சி தந்திருக்கின்றன.

* * * * *

* புலாலிருந்து மீட்சிக்கு ஒரு பதச் சோறு பார்க்கலாமா? குறுகுறுக்கும் குறும்பாக வேடிக்கை மூலம் பெற்ற விளையாடல்!

பெங்களூர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஒரு நிறுவனத்தில் காமர்ஸ் ரீடராக உள்ள டாக்டர் கே. ஹநுமந்தப்பாவை பன்னிரண்டு நீண்ட ஆண்டுகளாகக் காக்க வைத்த பின்னரே கடாக்ஷப் பன்னீர் தெளித்து, சொல்லமுதம் ஊட்டினார் ஸ்வாமி.

அன்று வாயில் ஊட்டி விடாத குறையாக அவருக்குத் தம்மோடு போஜனமும் செய்வித்தார். அருளிலே போஜ வள்ளல்!

ரா. கணபதி

'ஸர்வ்' செய்த பிள்ளையாண்டான் ஹநுமந்தப்பாவின் கலத்தில் ஏகப்பட்ட சுரைக்காய்க் கறியைத் தள்ளிவிட்டான்.

ஹநுமந்தப்பாவுக்கு அது ஒரு 'ப்ராப்ளம்' உண்டாக்கி விட்டது! காரணம், இவர் காசிக்குப் போன போது, இனிச் சாப்பிடுவதில்லை என்று ஸ்நானம் செய்தது சுரைக்காய்க்குத்தான். 'ஸ்வாமியோடு உண்கையில் யாவுமே ப்ரஸாதமாதலால்காசியில்விட்டதைஇங்கே விடலாமா?' அவருக்கு அது தெளிவுபடவில்லை. அதேசமயம் கூட, 'ஸ்வாமியோ வேஸ்ட்டே கூடாது -என்பவர். இத்தனை கறியை எப்படி உண்பது? சுரைக்காய்ச் சுவை தமக்குப் பிடிக்கவில்லை' என்பதால்தானே அதை மஹா த்யாகமாகக் காசியிலே விட்டோம்? ந்யாயமாகப் பார்த்தால் தமக்கு மிகவும் பிடித்தமான புலாலையல்லவா விட்டிருக்க வேண்டும்? இதையெல்லாம் ஸ்வாமி அறிந்திருந்து இப்போது குத்திக் காட்டு வாரோ?

குத்திக்காட்டவில்லைஸ்வாமி. 'கிச்சுகிச்சு' மூட்டி வருடியே காண்பித்தார். எப்படி?

சுரைக்காயை மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் — துப்பவும் முடியாமல்—அதோடு, 'ப்ராப்ள'த்தை ஜெரித்துக் கொள்ள முடியாமல் ஹநுமந்தப்பா படும் அவஸ்தையை ரஸிக்கும் மட்டும் ரஸித்தார், லீலா விநோதர். பிறகு, பரிமாறிய பையனிடம், "நாயனு, இப்படியா ஸர்வ் பண்ணறது? ஆஹார லக்ஷ்மியை இப்படியா அளவு பார்க்காம அள்ளிப் போடறது? ஒவ்வொருத்தருக்கும் புடிச்சது — புடிக்காதது இருக்காது? புடிக்காததைக் காசிக்குப் போய் த்யாகம்





ஸ்பாட் லைட்

பஞ்சாயத்துத் தேர்தலை நாங்கள் ஒன்றும் ஒத்தி வைக்கும்படி சொல்லவில்லை. ப. உ. சண்முகம் பொய் சொல்கிறார்.

—தமிழக இ. காங்கிரஸ் தலைவர் பழனியாண்டி.

இப்போது பத்திரிகையில் செய்தி பார்த்தால் கிரிக்கெட் விளையாட்டில் கூட சிங்களவன்தான் வெற்றி பெற்றான் என்றிருக்கிறது. நம்முடைய பேச்சைக் கேட்டு இலங்கைக்கு அனுப்பாமல் இருந்திருந்தால் — கருணாநிதியின், நெடுமாறனின், வீரமணியின் பேச்சைக் கேட்டு நாங்கள் கிரிக்கெட் குழுவை அனுப்பவில்லை என்று கூறி — அந்தக் கௌரவமாவது ஏற்பட்டிருக்கும்.

—கலைஞர் மு. கருணாநிதி.

அண்ணா விருதை முதன் முதலில் பெறும் எம். ஜி. ஆர். அதற்குத் தகுதி உடையவரே. இதைப் பல வருடங்களுக்கு முன்னரே பல தடவைகள் அண்ணாவே பாராட்டுக்களின் மூலம் தெரிவித்து விட்டார். பாராட்டை அன்று அண்ணா சொன்னார். இன்று பாராட்டு விருதை நாங்கள் எம். ஜி. ஆருக்குத் தருகிறோம்.

—நெடுஞ்செழியன்.

அண்ணா சொல்லை ஏறத்தாழ நூற்றுக்குத் தொண்ணூறு மடங்கு தொடர்ந்து காப்பாற்றுகிற ஆற்றல் மிக்கவராக விளங்குபவராக இருப்பவர் கலைஞர்தான். எனவே அண்ணா விருது கலைஞருக்குத்தான் வழங்கப்பட வேண்டும்.

—அன்பழகன்.

கூடப் பண்ணியிருப்பாங்க. இதையெல்லாம் நாசூக்கா தெரிஞ்சுக்கிற மாதிரியில்லே ஸர்வ் பண்ணணும்? இவருக்கு என்னமோ 'மீட்' போடறதுப்பல போட்டிருக்கியே!" என்று ஒரு போடு போட்டாரே பார்க்கலாம்!

குறும்புச் சொல்லின் செயற்சக்தியை என்ன சொல்ல! அன்றிலிருந்து புலால் உணவு ஹநுமந்தப்பாவுக்கு வாயில் வைக்க வழங்கவில்லை!

* * * * *

* வேகங்களிலெல்லாம் கொடிய வேகத்தை ஸ்வாமி நீர்த்து நீராளமாக்கியதற்கு ஒரு உதாஹரணம் — மிக்ஸருக்கு ஒரு முந்திரி போஜு!

போஸ்டனைச் சேர்ந்த டாக்டர் ஜான் லெய்ஃப் ஒரு மனநோய் மருத்துவர். ஆயின், தாமே அந்த வேகத்தின் இழுப்பைச் சமாளிக்க முடியாமல் திணறியவர்! தறிகெட்ட அமெரிக்க ஸொஸைட்டியில் இருக்கிறார். அதுவும் மனநோய் மருத்துவரா? எண்ணியும் பார்க்க முடியாத கொடூர, ஆபாஸப் பசிகளால் சித்தம் சிதைந்தவர்கள் இவரிடம் வைத்யத்துக்கு வருகிறார்கள். அதிலே பெண்கள் வேறு! பெண்களா அவர்கள்? அவர்களுக்கும் இவர் நரம்பு நீவுதல் உள்படப் பல விதத்தில் சிகித்ஸை தர வேண்டியிருக்கிறது. இந்நிலை நீடித்து, முதலில் தமக்கே சிகித்ஸை தேவை என்று அவர் எண்ணிய கட்டம்.

உருப்படச் சற்று உளம் கொள்பவரையும் காக்கவே காத்திருக்கும் கருணை ஸ்வாமி விளையாட்டு தொடங்கினார். லெய்ஃபின் கனவில் தோன்றினார். எப்படி? ஏதாவது விசித்ரம் செய்ய வேண்டுமே! அதனால் சர்ச்சிலே பத்மாஸனம் போட்டுக் கொண்டு அமர்ந்த நிலையில் ஸ்வப்ன தர்சனம் தந்தார்!

நாம் எவரும் காணாத பத்மாஸனக் கோல பாபாவின் காட்சியே கொஞ்சம் கொஞ்சமாக லெய்ஃபுக்கு வேகத்திலிருந்து விமோசனம் தந்தது. சிறிது சிறிதாக மீளலானார்.

மூலாதாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்து

இந்த்ரிய நிக்ரஹம் செய்வதையா அத்தனை எளிமையாகப் பத்மாஸனக் கோலத்தில் காட்டுவித்து விட்டார்? மெய்யநுபவமாகவே கூட்டுவித்தும் விட்டார்?

அப்புறம், அதாவது எட்டாண்டுகளுக்கு முன், லெய்ஃப் புட்டபர்த்தி வந்தார். லீலா பாலராய் நின்றவரின் பாதம் தொட்டார். "உள்ளே ஒரு குண்டு வெடிப்பையாக்கும் உணர்ந்தேன்! ஒரே ஸ்பர்சம் என்னவெல்லாம் செய்துவிட்டது?" என வியக்கிறார்.

பேட்டியில், "யெஸ்டெர்டே ஹாப்பி, டுடே அன்ஹாப்பி" என்று லெய்ஃபின் சஞ்சலங்களைக் குழந்தை பேசுவது போலத்தான் ஸ்வாமி சொன்னார். ஆனால் அதன் மூலமே என்றும் ஹாப்பியாயிருக்கும் ஆழ் உறுதியையும் எப்படியோ ஊட்டிவிட்டார்!

இன்று, "என்னுடைய நோயாளிகளை நான் மஸ்ஸாஜ் செய்யும்போது எனக்கு சரீர ப்ரக்ஞையே இருப்பதில்லை" என்று லெய்ஃப் சொல்கிறாரென்றால் பார்த்துக் கொள்ளுங்கள், விளையாட்டு எப்படி நல்வினையாகிறது, தீவினை தீர்க்கிறது என்று!

(தொடரும்)

காட்பரிஸ்

போர்ன்விடா



சுறு சுறுப்பு பானம்!

போர்ன்விடா—கோகோ, மால்ட், பால் மற்றும் சாக்கரையின் ஊட்ட நலன்களைக் கொண்ட ஒரு உன்னத உணவு பானம் ஆகும். 100 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவம் உடைய காட்பரி நிபுணர்களால் தயாரிக்கப்படுவது போர்ன்விடா.

ஒவ்வொரு கப் பாலுடனும் இரண்டு ஸ்பூன் போர்ன்விடா சேர்த்து, உங்கள் குடும்பத்தினருக்கு நலமான சுவையான பானம் அளியுங்கள்.

வளரும் குழந்தைகளுக்கு விசேஷமாக நன்மை அளிப்பது போர்ன்விடா. அவர்களுக்கு தேவைப்படும் விசேஷ ஊட்டச் சத்தும் ருசிகையும் பெற்றிட தினமும் இருவேளை அவர்களுக்கு போர்ன்விடா தாருங்கள்.

கவனத்துடன் வளர்த்திடும் ஒரு அன்னை கூறுகிறாள் ''என் குழந்தைகளுக்கு போர்ன்விடா தருவதினால், வளரும் வயதில் அவர்களுக்குத் தேவையான விசேஷ ஊட்டம் கிடைக்கிறது. ஆகவே நல்ல வளர்ச்சி. போர்ன்விடா பயிற்சி.''



போர்ன்விடாவின் இனிமைக் காலம். போர்ன்விடா அளித்தவரை பாசமனங்கள் நேசத்தோடு நினைந்து மகிழும் ஒருநாள்.



25

சாப்பாட்டுத் தட்டை மன்மோஹன் வெறித்துப் பார்த்தான். வெண்ணெயாய் நாவில்வழுக்கிய, 'பாலக்பன்னீ'ரும், சோலேயும் 'தேசீ கீ' மணக்க மணக்கத் தட்டில் சூடாக விழுந்த பரோட்டாவும் உள்ளே இறங்கவில்லை.

சாப்பாட்டு மேஜையில் நேர் எதிராக உட்கார்ந்திருந்த காப்தன் ஜோஹிந்தர் ஸிங் பேதி அவனை யோசனையுடன் பார்த்தான்.

''என்ன மன்மோஹன் உடம்பு சரியில்லையா?''

''உடம்புக்கு ஒண்ணுமில்லே. நன்றாய்த் தான் இருக்கேன்?''

''பின்னே ஏன் சாப்பிடவேயில்லே?''

மன்மோஹன் பலஹீனமாய்ச் சிரித்தான். ''என்னவோ சாப்பாடு இறங்க மாட்டேன் என்கிறது.''

''அம்மாவுடைய கைச்சாப்பாடுதான் உள்ளே இறங்கும் போலிருக்கு!'' என்ருள் ஜோகீந்தரின் அம்மா லேசாகச் சிரித்துக் கொண்டு.

''அதெல்லாம்ஒண்ணுமில்லே!'' என்ருன் அவன் மெல்லிய குரலில்.

''உன்னுடைய அப்பாவும் அம்மாவும் என்ன அப்படித் திடீர் என்று கிளம்பிப் போய்விட்டார்கள் இங்கிலாந்துக்கு? திரும்பி வருவார்களா இல்லையா?''

இந்தக் கேள்வி எழுந்தவுடன் அவனுக்கே முதல்முறையாகச்சந்தேகம்முளைத்ததுபோல் அவன் திகைத்தான்.

''வராமல் எங்கே போவார்கள்?'' என்று சமாளித்தான். ''நவம்பர் மாதம் இங்கு நடந்த கலவரங்களைக் கண்டு அம்மா ரொம்பக் கலங்கிப் போயிட்டார். அதுக்கு மேல லண்டன்லே இருக்கிற என் அக்கா பயந்து உடனே அங்கே வந்து விடுங்கள் என்று விடாமல் ஃபோன் பண்ணினுள். அப்பாவுக்கு இஷ்டமில்லே. அம்மாவுடைய, அக்காவுடைய சமாதானத்துக்காகக் கிளம்பினுர். இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு வந்துவிடுவார்கள்.''

சில நிமிஷங்கள் அங்கு ஒரு சங்கடமான மெளனம் நிலவிற்று, சங்கடமான ஒரு சம்பவத்தின் ஞாபகப்படுத்தலில். ஒரு அற்பவிஷயமாக வெளிப் பேருக்குத் தோன்றக்கூடிய விஷயத்திற்கு இத்தனை நீளமான ஒரு வியாக்கியானம் கொடுத்ததற்கான கூச்சம் மன்மோஹனுக்கு ஏற்பட்டது.

ஜோகீந்தரின் அம்மா அஜீத் கெளரின் முகத்தில் ஒரு தீவிரம் தெரிந்தது. உள்ளே அமுக்கியிருந்த கோபம் கண்ணின் தீட்சண்யத்தில் வெளிப்பட்டது.

''யார்தான் நம்ம ஜனங்கள்லே கலங்கல்லே, பயப்படல்லே? பின்டுவுக்குத் தலைமுடியை வெட்டிடலாம்னு ஜோகீந்தர் சொன்னுன். நான் தான் பிடிவாதமா இருந்தேன். அதை நீ முட்டாள்தனம்னு சொல்லுவே. நம்ம தர்மத்தை நாம ஏன் மாத்திக்கணும்னு துக்கம் ஏற்பட்டது. அடியிலேர்ந்து வேர்களை யாரோ வெட்டுகிற மாதிரி ஒரு பயம் ஏற்பட்டது. அந்த நான்கு நாளும் பிரார்த்தனை பண்ணிக் கொண்டே இருந்தேன். ஏதோ வாஹே குருவின் க்ருபையினுலே எல்லாரும் தப்பிச்சோம்.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே!'' என்ருன் இத்தனை நேரம் பேசாமல் உட்கார்ந்திருந்த பின்டு. ''இந்தக் காலனியிலே இருக்கிற ஹிந்துக்கள் எல்லாம் காவல் காக்காம இருந்திருந்தா நம்ம வீடும் க்ளோஸாகியிருக்கும். அதையேன் நீ சொல்ல மாட்டேங்கிறே?''

அஜீத் கெளரின் முகம் இறுகிப் போயிற்று. வாயைத் திறந்தால் என்ன வார்த்தைகள் வெடிக்குமோ என்று பயந்தவள் போல மெல்லிய சிவந்த உதடுகளை அழுத்தமாக மூடிக் கொண்டாள்.

''அம்மாவுடைய லாஜிக் என்ன தெரியுமோ? வாஹே குருதான் ஹிந்துக்களை நமக்கு உதவ அனுப்பினுர், அம்மாவுடைய பிரார்த்தனைக்கு உருகி...!''

அஜீத் கெளரின் முகத்தில் கோபம் பளபளத்தது.

''பின்டு! நீ ரொம்ப அதிகப்பிரசங்கித்தனமாப் பேசறே! போ! தலைமயிரை வெட்டிக்கோ! நீ ஒரு சீக்கியன்னு சொல்லிக்க வெட்கப்படு! நான் ஒரு இந்தியன்னு சொல்லிக்க வெட்கப்படறேன்! ஒரு இனத்தையே அழிக்கிற வெறியாட்டம் நடந்திருக்கு. விசாரணை எதுவும் நடக்கக் காணும்!''

ஜோகீந்தர் எழுந்தான். அவள் உட்கார்ந்திருந்த நாற்காலிக்குச் சென்று அவள் தோள்களைப் பற்றினுன். ''அம்மா, தயவு செய்து உன்னைக் கட்டுப்படுத்திக் கொள். இல்லாவிட்டால் உன் அறைக்குப் போய் எல்லாக் கதவுகளையும் சாத்திக் கொண்டு யாரையெல்லாம் திட்டணுமோ சுவரைப் பார்த்துத் திட்டு. நான் ஒரு ராணுவ அதிகாரி என்கிறதை மறக்காதே! வேலைக்காரர்கள் உன் பேச்சைக் கவனிக்கிருர்கள்!''

அஜீத் கெளர் திடீரென்று முகத்தை இரு கைகளாலும்பொத்திக்கொண்டு 'ஓ'வென்று அழ ஆரம்பித்தாள்.

''எனக்கு இங்கே பேசக் கூட சுதந்திரமில்லே. நமக்குள்ளேயும் மனசிலே இருக்கிறதைச் சொல்ல முடியாது. வெளியிலே சிநேகிதிகளிடையேயும் முன்னைப் போலப் பேச முடியறதில்லே.''

அவள் கண்களைத் துப்பட்டாவினுல் அழுத்தித் துடைத்துக் கொண்டு மன்மோஹனைப் பார்த்துச் சொன்னுள்:

''நேத்து ஜிம்கானுவுக்குப் போறேன். என்னைப் பார்த்ததும் நாலு சிநேகிதிகள் அதுவரை ஏதோ பேசிக் கொண்டிருந்தவர்கள் 'கப்'புனு வாயை மூடிக்கிரு. நான் இனிமே ஸர்தாரிணிகளோடத்தான் சிநேகிதம் வெச்சுக்க முடியும் போல இருக்கு. நானும் உன் அம்மா பண்ணின மாதிரி எங்கேயானும் கிளம்ப வேண்டியதுதான். கனடாவிலே தங்கை இருக்காள். அங்கே போயிடறேன்.''

ஜோகீந்தரின் முகத்தில் கடுமை தெரிந்தது:

''அம்மா, உணர்ச்சிவசப்பட்டு என்னென்னவோ பேசாதே. உனக்கு இன்னும் பொறுப்பு இருக்கு இங்கே.''

''பின்டுவையும் அழைச்சிண்டு போறேன்!''

''இப்படிப் பேசறது அபத்தம். நான் அனுமதிக்க மாட்டேன். தயவு செய்து நீ உன் ரூமுக்குப் போ. இந்தப் பேச்சையெல்லாம் பின்டு கேட்பது நல்லதில்லே!''

அவன் ஒண்ணையும் கவனிக்காத குழந்தையில்லே. உண்மைகளை எத்தனை நாள்

வாஸந்தி

மறைக்க முடியும்? அவன் ஸ்கூலிலே பையன்கள் அவன் பகடியை இழுத்து வம்பு பண்றாங்களாம். இந்த அவமானத்தையெல்லாம் அவனாலே எத்தனை நாள் தாங்க முடியும்னு நினைச்சே?''

மன்மோஹன் வேதனையுடன் இந்த வார்த்தைகள் பிரவாகத்தில் மிதந்தான். பிண்டுவின் தலைகுனிந்திருந்தது. மிருதுவான கண்கள் உணர்ச்சிவசப்பட்டதில் லேசாகச் சிவந்திருந்தன. அடிவயிறு ஜில்லிட்டு அவனுள் ஒரு கையாலாகாத்தனச் சோர்வு ஏற்பட்டது. தட்டில் இருந்த ஒரு பரோட்டா அப்படியே இருந்தது. பிண்டுவும் சரியாகச் சாப்பிடவில்லை என்று அவன் கவனித்தான்.

ஜொகீந்தர் இன்னும் அஜீத் கௌரின் தோள்மேல் அழுத்தமாகக் கைகளைப் பதித்திருந்தான்.

''அம்மா எழுந்திரு. உன் அறைக்குப் போ. பிண்டுவும் மன்மோஹனும் சாப்பிடட்டும். உன் பாரத்தை என்கிட்ட மாத்திரம் இறக்கு. நான் தாங்கிப்பேன். அவர்களுக்கு வேண்டாம் பாவம்!''

அஜீத் கௌர் எழுந்தாள். ''ஒவ்வொரு சீக்கியன் தோளிலேயும் பாரம் இருக்கு. இறக்கி வைக்கச் சாண் அகல இடம்தான் இல்லே!''

''இதெல்லாம் சும்மா டயலாக்! இன்னும் கொஞ்ச நாளிலே எல்லாம் மறந்து போகும். சரியாயிடும்.''

''ஆ, இதுதான் டயலாக்!''

அஜீத் கௌர் நையாண்டியுடன் இஷ்டமில்லாமல் தன் அறைக்குக் கிளம்பினாள்.

பிண்டு மன்மோஹனைப் பார்த்து நமுட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

மன்மோஹன் தலையைக் குனிந்து சாப்பிட ஆரம்பித்தான்.

''நீ சொல்றதை நீயே நம்பறியான்னு எனக்குச் சந்தேகம்!'' என்றான் ஜொகீந்தரிடம்.

ஜொகீந்தர் யோசனையுடன் கண்ணாடி டம்ளரைத் திருப்பியபடி சற்று நேரம் பேசாமல் இருந்தான்.

''நம்பிக்கை நிச்சயமா வேணும் மன்மோஹன்!'' என்றான் மெல்லிய குரலில். ''உணர்ச்சிவசப்படறதிலே அர்த்தமில்லே. அதனாலே பிளவுகள்தான் அதிகரிக்கும். காலம் மாறும்னு போகும்னு நீ நினைக்கறியா?''

''எனக்கு எதுவுமே நினைக்கத் தோணலே!''

ஜொகீந்தர் அவனைக் கனிவுடன் பார்த்தான். ''நீ இத்தனை ஸென்ஸிடிவ்வா இருக்கக் கூடாது மன்மோஹன்!''

மன்மோஹன் சிரிக்க முயன்றான். ''நினைக்கவே தோணாதபோது ஸென்ஸிடிவிட்டி எங்கேயிருந்து வரும்? மை மைண்ட் இஸ் என் ஆப்ஸொல்யூட் ப்ளாங்க் நௌ! தினம் ஏற்படற சின்னச் சின்ன அதிர்ச்சியிலே மனசு மரத்துப் போயிட்டது.''

''கமான் 'யார்!' இப்படி முகத்தைத் தொங்கப் போட்டுக்காதே. இட் இஸ் ஆல் இன் லைஃப்'' என்றபடி ஜொகீந்தர் எழுந்தான். பிண்டு மேற்கொண்டு அங்கு உட்கார்ந்திராமல் தன் அறைக்குச் சென்றதைத் திருப்தியுடன் பார்த்து, ஜொகீந்தர் மெல்லிய குரலில் சொன்னான்.

'' பிண்டுவுக்கு இது ரொம்ப மோசமான கட்டம் மன்மோஹன். எனக்கு அவனைப் பற்றித்தான் கவலை. அப்பா இல்லாததாலே பொறுப்பு என் தலையிலே இருக்கு. நம்ம மனசே குழம்பிப் போகிறது. அவனுக்கு எப்படிப்பட்ட குழப்பம் இருக்கும்! பஞ்சாபிலே இருக்கிற இளம்பிள்ளைகள் அத்தனை பேருக்கும் ரொம்ப ஆபத்தான பாதிப்பை ஏற்படுத்தப்போற காலக்கட்டம் இது. இதுதான் பஞ்சாபுக்கு நேர்ந்த மிகப் பெரிய ட்ராஜிடி!''

காரணம் புரியாமல் மன்மோஹன் ஸிங்கின் நாடி நரம்பெல்லாம் சிலிர்த்தது. அடிவயிற்றில் பல நாட்களாகக் கனன்று கொண்டிருந்த பீதிக்கு இவனது வார்த்தைகள் வடிவம்கொடுத்தாற்போல்தோன்றிற்று. ஜொகீந்தரை நினைத்துப் பச்சாதாபம் ஏற்பட்டது. நடக்கும் சம்பவங்களைப் பற்றி இவனுக்கு என்ன கோபம், துக்கம் இருந்தாலும் வெளியில் சொல்ல மாட்டான். சுத்தமான ராணுவ அதிகாரி. ப்ளூஸ்டார் ஆபரேஷனைப் பற்றிக் கேள்விப்பட்டவுடனேயே உணர்ச்சி வசப்பட்டு ராணுவத்தை எதிர்த்து வெளியேறிய சீக்கியர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவன்.

அஜீத் கௌருக்கு எப்படிப்பட்ட பிள்ளை!

இருவரும் சற்று நேரம் வெளி வராந்தாவில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். பொதுவாகப் பேச இப்பொழுது விஷயமே இல்லையென்று தோன்றிற்று. திருப்பித் திருப்பிப் பஞ்சாப் பிரச்னையே நடுவில் வந்து அமர்ந்தது. அவனுக்குச் சோர்வேற்பட்டது.

''நான் கிளம்பறேன்!'' என்று அவன் எழுந்தான்.

''அடிக்கடி வா மன்மோஹன்!'' என்றான் ஜொகீந்தர் கனிவுடன்.

''நீ இப்படிச் சோர்ந்து போகக் கூடாது. டில்லி பட்டணத்து ஜனங்கள் மெல்ல மெல்ல மறந்து விடுவார்கள். ஹிந்து — சீக்

ஒருவர்: ஏன், அந்தப் பாங்க் ஆபீஸர், கல்யாணமாகி ஒரு மாதம் ஆகியும், தன் மனைவின்னு சொல்ல மாட்டேங்கிறார்?

அவர்: ஆறு மாதம் Probation முடிஞ்சுதான் கன்ஃபார்ம் பண்ணுவாராம்...

— ஆர். உப்பிலி.



விரோதம் அதிக நாள் இருக்காது. பஞ்சாபிற்குள் தான் என்ன நடக்கிறதுன்னு பார்க்கணும். அதுதான் இப்ப ரொம்ப முக்கியம். நீ ஒரு நடை அங்கே போய்ப் பார்த்துவிட்டு வாயேன்! நீ பார்த்ததைப் பத்திரிகைகள்லே எழுதலாமே!'

'போகணும்னுதான் நினைத்துக் கொண்டிருக்கேன். ரைட்டோ வரேன்.'

வீட்டிற்குப் போவதா வேறு எங்காவது போவதா என்று யோசித்தபடி அவன் பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தான். எந்தக் குறிப்பிட்ட பஸ்ஸுக்காகவும் காத்து நிற்காமல் ஜடம் போல் நிற்பது விநோதமான பழக்கமாக இப்பொழுது போய் விட்டது என்று அவன் சோர்வுடன் நினைத்துக் கொண்டான். யாரையும் பார்க்கும் உற்சாகமில்லை. ஒரே ஒரு பேச்சைத் தவிர இப்பொழுது வேறு எந்தப் பேச்சைப் பேச முடியும்? விடையே கிடைக்காத கேள்விகளைத் தவிர இப்பொழுது வேறு எந்தக் கேள்விகளைக் கேட்க முடியும்?

'இன்னும் கொஞ்ச நாளிலே எல்லாம் சரியாயிடும்.. எல்லாம் மறந்து போகும்.'

அப்படியும் ஒரு காலம் வருமா? அதற்குச் சாதகமான அரசியல் சூழல் ஏற்படுமா?

இத்தனை களேபரம் ஆன பிறகு? அஜீத் கௌரைப் போல், பிண்டுவைப் போல் இருப்பவர்கள்தான் அதிகம். இந்தக் கோபமும் துக்கமும் விரோதமும் அதிகரிக்காமலாவது இருக்கும் என்பது என்ன நிச்சயம்? இந்த மாதிரி யோசனைகள் செய்யத் தெம்பில்லாமல்தான் அப்பாவும் அம்மாவும் வேறு நாட்டுக்கே கிளம்பிப் போய் விட்டார்கள். இது சுத்தக் கயமைத்தனம், கோழைத்தனம் என்று அப்பொழுது அவர்கள் மேல் அவனுக்கு மகாக் கோபம் வந்தது. ஆனால் இன்று அஜீத் கௌரைப் பார்த்ததும் அம்மா இப்பொழுது இங்கில்லாததே நல்லது என்று தோன்றிற்று. அம்மாகக்கும் வெறுப்பையெல்லாம் ஜோகிந்தரைப் போல நானும் தாங்க வேண்டி வந்திருக்கும்.

660 வந்து நின்றது. அவன் இயந்திரகதியில் அதில் ஏறினான். ரஞ்சனியின் வீடு இருக்கும் இடத்துக்குச் செல்லும் பஸ். ரஞ்சனியின் நினைவு வந்ததும் மனத்தில் ஒரு குற்ற உணர்வு ஏற்பட்டது. அவளைப் பார்த்து வெகு நாட்களாகி விட்டது. வேண்டுமென்றே அவளைத் தவிர்த்தான். காரணம் புரியாத காரணங்களுக்காக. கொஞ்ச நாட்களாகத்தான் தனித்து நிற்பதாக அவனுக்குப் பிரமையேற்பட்டது. யாரோ செய்த குற்றத்துக்காகத் தான் சுமக்கும் சிலுவையின் பாரம் வேறு ஒருவரின் மேல் படக்கூடாது என்கிற கூச்சம் ஏற்பட்டது. ரஞ்சனியின் நினைவு வரும்போதெல்லாம் அவளுடைய அம்மாவின் கவலைநிறைந்த சந்தேகப் பார்வையும் அப்பாவின் சங்கடமான மௌனமும் நினைவுக்கு வந்தன.

'நீயும் மாறிடுவியா ருமா மாதிரி? வித்தியாசமாய் நினைப்பியா?' என்ற ரஞ்சனியின் கேள்வி அடிக்கடி நினைவை அலைக்கழித்தது. புலன்களை ஸ்தம்பிக்க வைத்தது. வெகு தீவிரமாக இரவு தூக்கத்தைத் துறந்து சிந்திக்க வைத்தது. ரஞ்சனியின் அன்பின் தூய்மையைப் பற்றி அவனுக்குச் சந்தேகமில்லை. ஆனால் அவனை மாப்பிள்ளையாக வரிக்க நிச்சயம் அவளுடைய பெற்றோர்கள் கரத்தை நீட்டப் போவதில்லை.

ஒரு குடும்பப் பிளவுக்கு நான் காரணமாக இருக்கலாமா? இருக்கிற பிளவுகள் போதாதா?

ரஞ்சனி பல முறை அவனைச் சந்திக்க முயன்றது அவனுக்குத் தெரியும். அவன் பிடிவாதமாகத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். 'அவளுடைய எதிர்காலம் என்னால் வீணாகக் கூடாது' என்று அவன் தனக்குள் சமாதானப்படுத்திக்கொண்டான்.

டிக்கெட்டுக்குக் காசு கொடுக்கப் பான்ட் பாக்கெட்டுக்குள் கைவிட்ட போது கடித உறை தட்டுப்பட்டது. அவன் யோசனையுடன் அதை வெளியே எடுத்தான். நேற்று காலேஜுக்குக் கிளம்பும்போது வந்தது. பிறகு மறந்தே விட்டது. அவன் ஸீட்டில் உட்கார்ந்தபடி அதைப் பிரித்தான். குருசரண்சிங் எழுதியிருந்தார்.

'எவ்வளவோ நாட்கள் ஆகிவிட்டன நான் தூங்கி. பஞ்சாப் பிரச்னைக்கு விடிவு காலம் உண்டா என்கிற கவலையிலேயே நாட்கள் நகர்கின்றன. இங்கிருக்கிற காற்று எனக்குமூச்சைமுட்டுகிறது. ஸந்த்லோங்கோவாலையும் மற்ற அகாலிதல் தலைவர்களையும் விடுதலையாக்கப் போவதாகக் கேள்விப்படுகிறேன். அவர்கள் வருகையினால் நிலைமை சீர்படும் என்று சொல்வதற்கில்லை. ஒன்று அவர்களும் இந்தக் காற்றுடன் கலந்து போவார்கள், அல்லது அதில் நசித்துப் போவார்கள்.

பஞ்சாபின் துயரத்தை நீ தில்லியில் முக்காடு போட்டுக் கொண்டு உட்கார்ந்தால் எப்படி அறிந்து கொள்ள முடியும்? உனக்கு இங்கல்லவா வேலையிருக்கிறது?''

ரொம்ப நேரம் மனசு ஒரு கலக்கத்தில் தவித்தது. பிறகு ஒரு தீர்மானத்துக்கு வந்தது. அடுத்த பஸ் ஸ்டாப்பில் இறங்கி ரஞ்சனியின் வீட்டிற்குச் செல்லும் எண்ணத்தை விட்டு மீண்டும் வேறு பஸ் பிடித்துத் தன் வீட்டை அடைந்தான். இரவு முழுவதும் தூங்காமல் கழித்து விடியற்காலை பஸ்ஸைப் பிடித்து அம்ருத்ஸருக்குப் பயணமானான்.

(தொடரும்)

அபிஷேகம்



ராகவேந்திரர்
ரஜினிக்கு
பாலாபிஷேகமாம்
ரசிகர்கள்
நடத்துகிறார்கள்.
நடிகர்களே உஷார்!
உங்களில்
யாரேனும்
ஏகநாதராக
நடித்தால்
சிலுவையில்
அறைந்தாலும்
அறைந்து விடுவார்கள்!

—ஜெய்ராம்.

அவர்களுக்குள் ஒரு 'இது'

'லலிதாவைக் காணோம்.

தரையில் கால் பாவ முடியாத தனம் அடுக்களைக்கும் வாசலுக்குமாக ஆலாய்ப் பறக்க—

அலுவல் முடிந்து வந்த தியாகராஜன், "என்ன சொல்லிவிட்டுப் போனாள்" என்று கால் சராயைக் கூடக் கழற்றும் நினைவின்றி மிரள —


அந்த வீடே அதிர்ச்சியில் வேர்த்து வழிந்தது:

"கல்யாணமான அவள் சினேகிதி லதாவை ஆடிக்கு அழைத்து வந்திருக்கிறார்களாம். போய்ப் பார்த்துவிட்டு ஆறு மணிக்கெல்லாம் வந்து விடுவதாகச் சொன்னாள்."

"உடனே பஸ்ஸுக்கான பணத்தைக் கொடுத்துப் 'போய், வா மகளே!' என்று செல்லமாய் அனுப்பிவிட்டாயாக்கும்" மனைவியைப் பொசுக்குவது போல் பார்த்தார் தியாகராஜன். "காலம் இருக்கிற இருப்பென்ன.... வயசுக்கு வந்த பெண்ணைத் தனியாக அனுப்புகிறோமே என்று கொஞ்சமாவது யோசிக்க வேண்டாம், சை....!"

மூச்சுவிடக் கொஞ்சம் இடைவெளி.

தமிழினியன்



''இங்கிருக்கிற காட்டுருக்குப் போய்வர எவ்வளவு நேரமாகும்? ஐந்து மணிக்குப் போனவள், மணி எட்டாகப் போகிறது. மூன்று மணி நேரமாய் என்ன பண்ணுகிறாள்'' உச்சத் தொனியில் பேசியவர், குரலைத் தணித்துக் கொண்டார். ''காட்டுருக்குத்தான் போனாளோ, இல்லே காதல், கீதல் என்று யார்கூடவாவது.....''

''ஐயோ ஏற்கனவே நான் நொந்து போய் இருக்கிறேன். நீங்கள் வேறு புளியைக் கரைக்கணுமா....'' காதைப் பொத்திக் கொண்டாள், தனம். கண்ணீர் தாரையாய் வழிந்தது.

டிக்... டிக்... டிக்...

பெண்டுலம் பத்தடிக்கக் காத்திருந்தது.

அப்போது —

கிண்... கிண்... கிண்ணென சைக்கிள் மணியோசை.

வாசலுக்கு விரைந்தார் தியாகராஜன்.

கவிதாதான்.

யாரோ ஒருவனின் சைக்கிள் பின் சீட்டிலிருந்து மெள்ள இறங்கி வந்தாள்.



''வரட்டுமா, கவி.''

''ரொம்ப தாங்ஸ், சுரேஷ். குட் பை.''

''பை.''

அவன் கை விசிறிக் கொண்டான்.

விழிகள் பிசிறடிக்க அவன் படி ஏறினான்.

''யாரது, சுரேஷ்?'' அதட்டினார் தியாகராஜன்.

''கொஞ்சம் இருங்கள். குழந்தை வந்ததும் வராததுமாய் எரிந்து விழணுமா?'' என்று கணவனைக் கடிந்தாள் தனம். ''வந்துட்டியாடீ, கண்ணு. கொஞ்ச நேரத்துக்குள் துடியாய்த் துடிச்சுட்டேனே. பிள்ளையாரப்பா... பெரியநாயஹியே....என் பொண்ணு வந்துட்டாள்....''

ஒரு நிமிஷம். காவல் தெய்வங்களுக்கெல்லாம் காவடி தூக்கினாள் தனம், பிறகு,

''ஏம்மா, இப்படிப் பண்ணினாய்'' என்றாள் மகளிடம்.

''எல்லாம் உன்னால்தான்'' என்று உதடுகளைக் குவித்தாள், கவிதா.

''என்னாலா?''

''ஆமாம். பஸ்ஸுக்கு ஒண்ணாம் தேதி முதல் கட்டணம் கூட்டிவிட்டார்கள். எனக்கும் அது ஞாபகம் இல்லை. பழைய பஸ் சார்ஜ் பிரகாரம் நீ கொடுத்ததை நான் ஒரு மடச்சி... வாங்கிப் போயிட்டேன்.''

''அட கடவுளே, அப்புறம்.''

''பஸ் சார்ஜ் போதல்லே, கொடுங்கள்' என்று போன இடத்தில் கேட்க முடியுமா. மிச்சம் இருந்த சில்லறை வரைக்கும் பஸ்ஸிலே வந்தேன்.''

''அப்புறம்.''

''நடைதான். அம்மாடீ... செமை இருட்டு. தாகம் வேற. பயத்திலே நெஞ்சு பக்... பக்கென்று அடிக்கிறது. அப்போதுதான் தெய்வாதீனமாய் சுரேஷ் வந்தார்.''

''யார் சுரேஷ்?'' தருணத்திற்காகக் காத்திருந்த கொக்கு மாதிரி குறுக்கிட்டார், தியாகராஜன்.

''என்னோடு பிளஸ் டூ படித்தார் அப்பா. செகண்ட் ராங் அவர்தான். இப்போது பி. காம்... ஃபைனல் எழுதி இருக்கிறாராம்.''

''ஓ.... அந்த சுரேஷா'' கடுமை மறைந்து. குளுமை கொலுவேறி இருந்தது. தியாகராஜனின் பார்வையில், ''அந்தப் பையனின் அப்பாகூட மானேஜராய் இருக்கிறாரில்ல.''

''எனக்குத் தெரியாது.''

''எனக்குத் தெரியும். அந்தப் பையன் சிவப்பாய் இருப்பான். புசுபுசுவென சுருட்டை முடி.''

''ஆமா, அவர்தான்.'' புன்னகையுடன் தலையசைத்துக்கொண்டே நகர்ந்தாள் கவிதா.

அன்றிரவு.

போர்வையை விலக்கி முயல் குட்டி போல் தலை தூக்கினாள் தனம்.

''என்னங்க, எனக்கென்னவோ பயமாய் இருக்கு.''

''வீட்டிலே யாராச்சும் வெடிகுண்டு வச்சுட்டாங்களா?'' கேலியாய்க் கேட்டார், தியாக



அமைச்சர்: அரசே! பெருகி வரும் தற்கொலைகளுக்குத் தங்கள் மூதாதையரே காரணம் என்று ஆய்வு கூறுகிறது.

மன்னர்: எப்படி?

அமைச்சர்: தங்கள் பாட்டனுர் சாலை நிறைய மரங்கள் நட்டார். தங்கள் தந்தை குளங்கள் வெட்டினுர். இவை போதாதா மன்னு, கயிற்றில் தொங்குவதற்கும், நீரில் மிதப்பதற்கும்...

—வெ. இராமலிங்கம்.

ராஜன்.

"அதில்லேங்க. கவிதா, சுரேஷ்...கிரேஷ்னு ஏதேதோ சொல்றுளே."

"அடி பைத்தியம். இதிலே பயப்பட என்ன இருக்கிறது."

"என்ன அப்படி அலட்சியமாய்ப் பேசறீங்க. வயசுப் பொண்ணு ஒரு வயசுப் பையனின் சைக்கிளிலே வந்திருக்கிறுள்ளு அவர்களுக்குள்ளே ஏதாவது ஒரு இது இருக்குமோன்னு சந்தேகமாய் இருக்குதுங்க.

தியாகராஜன் அலட்சியமாய்ச் சிரித்தார்.

"அவர்களுக்குள்ளே 'இது' மட்டும் இல்லே தனம்" என்ற கணவரைப் புதிராகப் பார்த்தாள், தனம். தொடர்ந்தார் அவர்.

"முன்பெல்லாம் அந்த 'இது' ஏற்பட்டால் வெளியிலே காட்டிக் கொள்ளத் தயங்குவார்கள். பயப்படுவார்கள். கதைகளிலேகூட சைக்கிளிலோ, ஸ்கூட்டரிலோ பெண்ணைக் கூட்டி வந்தால், காதலனுகப்பட்டவன் தெரு முனையிலேயே இறக்கிவிட்டுப் போவதாகத்தான் படித்திருக்கிறேம், பார்த்திருக்கிறேம். ஆனுல், இப்போது பார்த்தாயா, கவிதாவை வாசலிலேயே கொண்டு வந்து பகிரங்கமாய் இறக்கிவிட்டுப் போகிறுன், அந்தப் பையன். நாகரீகம் அந்த அளவுக்கு இந்தக் காலத்துப் பிள்ளைகளைக் கூச்சம், நாச்சம் இல்லாமல் பண்ணிவிட்டது."

"நீங்கள் என்ன சொல்றீங்க?" அந்த அரை இருட்டிலும் தனத்தின் அதிர்ச்சி முகத்தில் வரிவரியாய்த் தெரிந்தது.

தியாகராஜன் மீண்டும் சிரித்தார், "பிடித்தாலும் புளியங் கொப்பாய்ப் பிடிக்கணும் என்பார்கள். நம் கவிதாவும் அப்படித்தான் பிடித்திருக்கிறுள்."

தலையணையில் கையை அண்டைக் கொடுத்துச் சாய்ந்திருந்த தனம், கோபத்துடன் சரட்டென்று எழுந்தாள். "இப்படிப் பேசுவது உங்களுக்கே அழகாய் இருக்கா?"

"அமிர்தமாய் இருக்கு. ஆத்திரப்படாமல் நான் சொல்வதைப் பொறுமையுடன் கேட்டால், உனக்கும் ஆனந்தமாய் இருக்கும்."

"................"

"சுரேஷின் அப்பாவை எனக்கு நேரில் பழக்கம் இல்லாவிட்டாலும், அவர் யார், என்ற விவரம் பூரா எனக்கு நன்றுய்த் தெரியும். தில்லை நகரில் அவருக்கு பங்களா மாதிரி வீடு. ஆலிவ் கிரீன் கலரிலே ஒரு அம்பாஸிடர் வைத்திருக்கிருர். தஞ்சாவூருக்குப் பக்கம் நஞ்சை, புஞ்சை என்று நல்ல வசதியான குடும்பம். சுரேஷ் அவர்களுக்கு ஒரே பையன். இப்போது சொல். தலைகீழாய் நின்றுலும் நம் பெண்ணுக்கு இப்படி ஒரு இடம் அமையுமா?"

"இருந்தாலும்....."

"இருந்தாலுமோ, பறந்தாலுமோ, நீ பேசாமல் வாயை மூடிக் கொண்டு 'கம்' மென்று இரு. பொழுது விடியட்டும். அந்தப் பையனைச் சந்தித்து எப்படிப் பேச வேண்டுமோ அப்படிப் பேசி, எதைச் செய்ய வேண்டுமோ அதைச் சாதிக்கத்தான் போகிறேன்."

மறு நாள் மாலை.

மக்கள் மன்ற மைதானம்.

தும்பைப் பூ நிறத்தில் வாலிபால் ஆடிக் கொண்டிருந்தான், சுரேஷ்.

அலுவலகம் விட்டு வந்த தியாகராஜன், ஆட்டம் முடியுமவரை காத்திருந்தார்.

நண்பர்களின் குழாம் கலைந்து ஆறரை மணிக்குத்தான் அவனைத் தனிமையில் சந்திக்க முடிந்தது.

"ராத்திரி என் பெண்ணை நீங்கள்தான் சைக்கிளில் கொண்டு வந்துவிட்டீர்களாம்" என்று சிரிப்புத்துளிகளால் கையைக் கழுவிக் கொண்டார், தியாகராஜன்.

"ஏதோ, என்னுல் முடிந்த உதவி. செய்தேன்."

"உதவிதான் என்றுலும் எல்லோராலும் அப்படிச் செய்ய முடிகிறதில்லை."

"வாஸ்தவம்தான். நான் சில விஷயங்களில் சின்ஸியராகவே இருப்பேன்."

"கனகச்சிதமாகச் சொல்லிட்டீங்க தம்பி. அந்த சின்ஸியரிட்டி எனக்கு ரொம்பப் பிடிக்கும்."

"தாங்யூ. சார்."

"அப்புறமா... ஒரு..." தயங்குவது போல்



இண்டர்வியூ அனுபவம்

போட்டி : 22

உத்யோக வேட்டையின் போதோ அல்லது கல்லூரி, பள்ளிக்கூடத்தில் சேர்வதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ நீங்கள் இண்டர்வியூவுக்குப் போயிருக்கலாம் அல்லது நீங்களே இண்டர்வியூ நடத்தியும் இருக்கலாம். அப்போது நடந்த ஒரு ரசமான நிகழ்ச்சியை உங்கள் சகோதர கல்கி வாசகர்களுக்குத் தெரிவிக்கலாமே! (கருத்து டி.கே. குருமூர்த்தி, திருப்பத்தூர்) கீழே உள்ள வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப் பக்கத்தை முழுமையாகக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு. தவிர குலுக்கல் முறையில் ஒருவருக்கு விலையுயர்ந்த வி. ஐ. பி. ஸூட்கேஸ். உறையின்மேல் 'இண்டர்வியூ நடந்தபோது...' என்று மறக்காமல் குறிப்பிடுங்கள்.

முடிவு தேதி: 14.10.85

இன்னும் 31 வி. ஐ. பி. ஸூட்கேஸ்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன. வாரா வாரம் போட்டியில் கலந்து கொண்டு அவற்றில் ஒன்றைத் தட்டிச் செல்லுங்கள்!

வி.ஐ.பி. ஸூட்கேஸ் திட்டம்

என் பெயர்: ....

விலாசம்: ....

....

பாவனை செய்தார், தியாகராஜன்.

''சும்மா சொல்லுங்க....'' பொடி மணலைத் தட்டி, வேர்வையைத் துடைத்துக் கொண்டான், சுரேஷ்.

''கவிதாவைப் பற்றி உங்கள் அபிப்ராயம் என்ன?''

''ரொம்ப ஸ்மார்ட். அவங்க ஃபிராங்னஸ், ஓப்பன் டாக் — இதையெல்லாம் நான் ரொம்ப ரசிப்பேன். அவங்க அதிர்ஷ்டம்... ராத்திரி அந்த இடத்திலே நான் கிராஸ் பண்ணினேன். இல்லாவிட்டால் இருட்டிலே ரவுடிப் பசங்கள் என்ன வேண்டுமானாலும் செய்வாங்க...'' சட்டையை அணிந்து கொண்ட சுரேஷ், நிறுத்தி இருந்த சைக்கிளின் ஸ்டாண்டை விடுவிக்க வலது காலைத் தூக்கினான்.

தியாகராஜன் விடவில்லை. ''உங்களை பிளஸ் டூ வில் இருந்தே தெரியும்னு சொன்னாள், கவிதா.''

''ஆமாம்.... ஆமாம்.''

''உங்களை மாதிரி ஒரு நல்ல பையனை என் பெண் தெரிந்து கொண்டதற்காக நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.'' ஒருவாறு சொல்ல நினைத்த விஷயத்தைத் தொட்டுவிட்டார் அவர்.

ஆனால் சுரேஷின் விழிகள் இடுங்கின. ''சார்.... நீங்கள் வேறு எதையோ மனசிலே வச்சுட்டுப் பேசற மாதிரி தோணுது.''

''நான் என் மனசிலே வச்சிருப்பது இருக்கட்டும். நீங்கள் உங்கள் மனசிலே உள்ளதை வெளிப்படையாகச் சொல்லுங்க, தம்பி. டூ யூ லைக்.... ஐ மீன்.... லவ் மை டாட்டர்.''

கணப்பொழுது அவரையே கூர்ந்து நோக்கினான் சுரேஷ். சைக்கிளை விட்டு அவருக்கு அருகில் வந்தான்.

''என்னை மன்னிச்சுடுங்க சார். அந்த அளவுக்கு நான் வரலே. அது மாதிரி எண்ணங்கள் எதுவுமே இந்த நிமிஷம் வரை எனக்குத் தோன்றியது கிடையாது. கவிதா, என் ஓல்ட் கிளாஸ்மேட். 'அவள் இருட்டில் தனியே போவது ஆபத்து. அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றுவது என் கடமை' என்ற எச்சரிக்கையில்தான் அவளைச் சைக்கிளில் கொண்டு வந்து வீட்டிலே சேர்த்தேன். அவளும், அதே மாதிரியே ஒரு ஓல்ட் ஸ்டூடண்ட் என்ற நம்பிக்கையில்தான் என் சைக்கிளில் ஏறிக் கொண்டாள். ஆனால்.... அந்த வெள்ளையான சம்பவத்துக்கு நீங்கள் வித்தியாசமான சாயம் பூச நினைப்பது ரொம்ப ரொம்ப அபத்தம். இன்னொரு வகையிலே எனக்கு அது ஆபாசமாகவும் தோணுது. ஏன் சார், உங்கள் மகளிடம் இப்படி ஏதாவது கேட்டீர்களோ....''

''இ..ல்..லை.''

''நல்லவேளை. கேட்டிருந்தால் உங்களை ரொம்பக் கேவலமாய் நினைத்திருப்பாள் சார்.''

சொன்னவன் நிற்கவில்லை.

சொடுக்கிவிட்ட குதிரைபோல் சைக்கிளில் ஏறிப் பறந்தான்.

ரேஷன் கியூவில்

வாசகர் பங்கு

குட்டு அம்பலமானது!

ரேஷனில் நான் கோதுமை வாங்கிய போது தராசிலிருந்து ஒரு பொட்டலமும் விழுந்தது. அதைப் பிரித்துப் பார்த்த போது மேக்னட் இருந்தது. அதுவரை அதைத் தராசில் ஒட்ட வைத்து எடைக் குறைப்புச் செய்த ரேஷன் கடைக்காரரின் குட்டு அம்பலமாகி ஒரே கலாட்டா ஆகிவிட்டது. அன்றிலிருந்து நான் மக்களிடையே பிரபலமாகி விட்டேன்!

கே. பரிமளம், ஹைதராபாத்—43.

நல்லவேளை பிழைத்தேன்!

கியூவின் கடைசியில் நின்று கொண்டிருந்தேன். நன்றாக உடையணிந்திருந்த நபர் ஒருவர் இரு கைகளிலும் பாமாயில் டின்களுடன் என்னிடம் வந்து, ''அவசரப்பட்டு இரண்டு பாமாயில் டின்களை வாங்கிவிட்டேன்; மற்ற ரேஷன்களைவாங்கப்பணமில்லை.ஒருடின்னை வாங்கிக் கொள்கிறீர்களா?'' என்று கேட்க, எனக்கு முன்னால் இருந்த பெண்மணி அவசரம் அவசரமாக அதை வாங்கிக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தார்.

அரை மணி நேரம் கூட ஆகியிருக்காது. அந்தப் பெண்மணி கையில் பாமாயில் டின்னுடன் அலறியபடி ஓடிவந்தார். விஷயத்தைக் கேட்ட போது, ''வீட்டிற்குச் சென்று டின்னின் சீலை உடைத்துப் பார்த்த போது பாமாயிலுக்குப் பதிலாக வெறும் தண்ணீர் தான் இருந்தது!'' என்றார். டின்னும் புதிதாக இருந்து அழகாகச் சீல் செய்யப்பட்டிருந்ததால் யார்தான் ஏமாற மாட்டார்கள்?

நான் ஏமாறாதது குறித்து மகிழ்ச்சி என்றாலும் அந்தப் பெண்மணியின் நிலை கண்டு வருந்தினேன்.

சந்திரா பார்த்தசாரதி, சென்னை—33.

அடடா நீங்களா?

ரேஷன் கடை திறப்பதற்கு முன்பாகவே ஒரு பெரும் கூட்டம் சர்க்கரைக்காகக் காத்திருந்தது. வெகுநேரம் கழித்துக் கையில் பையுடன் வந்த ஒருவர் கூட்டத்தில் புகுந்தார். அவ்வளவுதான்! ஒருவன் அவரை அலாக்காகத் தூக்கினான், ''நாங்கள் காலை ஆறு மணி முதல் காத்திருக்கிறோம். நீ மட்டும் ஜாலியாக வந்தவுடன் உள்ளே போகிறாயே!'' அன்று அனைவருமாகச் சேர்ந்து அடி அடி என்று அடித்தனர். பிறகுதான் தெரிந்தது அவர்தான் ரேஷன் கடை திறக்க வேண்டியவர் என்று!

எஸ். கிருஷ்ணன், பம்பாய்—37.

ஆத்திரத்தைக் கிளப்பாதீர்!

'ரேஷன் கியூவில் நின்றபோது...' என்ற தலைப்பைப் பார்த்ததும் எனக்கு ஆத்திரம் பொங்கி விட்டது. காரணம், ரேஷன் கடைகளை நினைத்தாலே... 'இதைவிடப் பிச்சை எடுத்துச் சாப்பிடலாம்' என்றுதான் தோன்றுகிறது.

நாஞ்சில் ஜெ. பேசில், திருப்பெரும்புதூர்.

ரேஷன் அரிசி சாப்பிட்டால்....

கியூவில் நின்று கொண்டிருந்தபோது ஒரு சிறுவன் நிற்க முடியாமல் கீழே உட்கார்ந்து விட்டான். பக்கத்தில் நின்று கொண்டிருந்த பெரியவர், ''இத்தனைவயதாகியும்நான்நின்று





கொண்டிருக்கும் போது, உன்னால் நிற்க முடியவில்லையா?'' என்று கேட்டார். உடனே அந்தச் சிறுவன், ''நீங்களும் அந்தக் காலத்தில் இதுபோல ரேஷன் அரிசியைச் சாப்பிட்டிருந்தால் இப்படித்தான் உட்காருவீர்கள்!'' என்றான்.

எஸ். தியாகராஜன், சென்னை — 111.

எதுவுமே சுத்தம் இல்லை

ஒருவர்: இங்கு வாங்கும் அரிசியோ, மாவோ,

நின்றபோது...

ரவையோ சுத்தமும் கிடையாது. எடையும் சரியாக இருப்பதில்லை. விலையிலும் பெரிய வித்தியாசமும் இருப்பதில்லை. கியூவில் நின்று வாங்கிச் சென்று, வீட்டில் வேலை யற்றுச் சுத்தம்செய்து பார்த்தால்... அதற்கு விலை அதிகம் கொடுத்தாவது கடைகளில் வாங்கிக் கொள்ளலாம் என்றாகிறது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

மற்றவர்: பின் எதற்காகக் கஷ்டப்பட்டு வாங்குகிறீர்கள்?

முதலாமவர்: நான் ஹோட்டலுக்கு அல்லவா வாங்குகிறேன்!

அமீதா பானு, ஈரோடு.


இலவசமாகக் கிடைத்த சீனி

மண்ணெண்ணெய்க்காகக் கியூவில் நின்று கொண்டிருந்த போது எனக்குப் பின்னால் நிறைமாதக் கர்ப்பிணி ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவ்ரை முன்னால் செல்லும்படி கூறினேன். அவர் சீட்டுப்பதியும் இடத்திற்குப் போவதற்குள் வலி ஏற்படவே ஆண்கள் அனைவரும் வெளியேறினார்கள். சில பெண்களின் உதவியுடன் சுகப் பிரசவமாக ஆண் குழந்தை பிறந்தது. ரேஷன் கடை சீனி அனைவருக்கும் இலவசமாக வழங்கப் பட்டது. (வாயில் போட்டுக் கொள்ளத்தான்!) தாயும் சேயும் நலம்.

மின்னல் ப்ரியன், மானாமதுரை.

பாட்டியால் வந்த காதல்

ஒரு சமயம் நானும் என் மாமன் மகள் புனிதாவும் ரேஷன் கியூவில் அடுத்தடுத்து நிற்க வேண்டியதாயிற்று. என் குடும்பத்திற்கும் அவள் குடும்பத்திற்கும் இடையில் பகை









யானதால் அவள் விலகியே நின்றாள். பின்னாலிருந்த பாட்டியொருத்தி, ''சேர்ந்து நில்லும்மா, யாராவது இடையில் வந்துடப் போறாங்க!'' என்றாள். அந்த இணைப்பே எங்கள் வாழ்க்கைப் பிணைப்புக்குப் பாலமாய் அமைந்து விட்டது.

பா. முத்துசாமி, சத்திரப்பட்டி.

இன்று நினைத்தாலும் சிரிப்புத்தான்!

எனக்கு முன்னால் கியூவில் நின்றிருந்த இரண்டு பெண்மணிகளுக்குள் வந்த தகராறினால் ஒருத்தி மற்றவளைத் தள்ளிவிட அவள் எண்ணெய் இருந்தடிரம்மில் சென்றுவிழுந்து விட்டாள். இதைக் கண்டு அனைவரும் பதறிப் போயினர். ஆனால் அந்தப் பெண்ணோ சிறிதும் அதிர்ச்சியடையாமல் எழுந்து வந்து



நன்றி: சோவியத் யூனியன் தகவல்: இரா. ஜெவா.

தன் ஆடையிலிருந்த எண்ணெய்யைப் பிழிந்து தன் கேனில் பிடித்துக் கொண்டு மீண்டும் சண்டைக்குப் போனாள். இதைக் கண்டு அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தோம். இந்நிகழ்ச்சியை எப்போது நினைத்தாலும் சிரிப்புத்தான்!

ஒய். சுந்தரராஜன், திருச்சி—2.

இரண்டு குழந்தை போதாது!

ரேஷன் கடை பத்து மணிக்குத்தான் திறக்கப்படும் என்றாலும் காலை ஆறு மணியிலிருந்தே கியூவில் நிற்க வேண்டியிருக்கிறது. அப்படி ஒரு நாள் நிற்கும் போது குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை முகாம் பற்றி அறிவித்துக் கொண்டு ஒரு வண்டி சென்றது. அதைக் கேட்ட கியூவில் நின்ற ஒரு பெண்மணி, ''அரசாங்கம் இரண்டு குழந்தைகளுக்கு மேல் வேண்டாம் என்கிறது. ஆனால் இதுபோல அவசியமான பொருட்களை கியூவில் நின்று வாங்க வீட்டுக்குப் பத்துப் பிள்ளைகள் இருந்தாலும் போதாது!'' என்றார். அதைக் கேட்ட அனைவரும் கியூவில் நின்ற களைப்பையும் மறந்து சிரித்தோம்.

ஜி. லலிதா, பொள்ளாச்சி—1.

குழந்தையால் தப்பினேன்!

நான் எனது இரண்டு வயதுப் பெண் குழந்தையுடன் சர்க்கரை வாங்கச் சென்றிருந்தேன். குழந்தை கூட்டத்தில் தவறி கடைக்குள் சென்று விட்டாள். பிறகு அம்மாவைக் காணோம் என்று 'ஓ'வென அழ, கடைக்காரர் கடைசியில் நின்றிருந்த என்னை உடனே வரச் சொல்லி சர்க்கரையையும் கொடுத்துக் குழந்தையை அனுப்பினார். என் குழந்தை அழுததால் அன்று எனக்கு உடனே சர்க்கரை கிடைத்தது. கியூ அவஸ்தையிலிருந்து தப்பினேன்.

ஆர். கல்யாணி, கள்ளக்குறிச்சி.

நானே கேலியானேன்!

கியூவில் எனக்கு முன்னால் நின்றிருந்த நண்பர் ஒருவரைக் கேலி செய்வதற்காக, ''பாமாயிலைப் பையிலும், மைதாவைப் பாட்டிலிலும் மறந்து போய் வாங்கி விடாதீர்கள்!'' என்றேன். என் முறை வந்த போது ஏதோ ஞாபகமாக பாமாயில் வாங்குவதற்குப் பையை நீட்ட, அளவையாரும் கவனிக்காமல் பையில் ஊற்றி விட்டார். நண்பரைக் கேலி செய்த நானே ஏமாந்து விட்டதை எண்ணி வருந்தினேன்.

எஸ். எல். ராஜாராம், சூலூர் (கோவை).

விளையாட்டே வினையானது!

சுமார் ஐந்தாண்டுகளுக்கு முன்னால் எங்கள் காலனிக்குப் புதிதாகக் குடிவந்த ஊனமுற்ற ஒருவரின் செல்ல மகள் விளையாட்டுத்தனமாகக் காரியம் செய்யக் கூடியவள். ரேஷன் கியூவில் நிற்காமல் பொருள்களை வாங்கி வருவதாகக் கூறித் தந்தையின் ஊன்றுகோல்களைக் கைகளில் இடுக்கிக் கொண்டு ரேஷன் வாங்கி வந்தாள். பிறகு அவள் குடும்பம் மதுரைக்குப் போய்விட்டது. சமீபத்தில் அவளை மீண்டும் ரேஷன் கியூவில் அதே ஊன்றுகோல்களுடன் பார்த்தபோது என்னால் கோபத்தை அடக்க முடியவில்லை. ஆனால் அது மாடிப்படிகளில் இருந்து விழுந்ததால் ஏற்பட்ட நிஜமான ஊனம் என்பதைக் கேள்விப்பட்ட பொழுது வந்த கோபம் சோகமாக மாறிவிட்டது.

ஆர். காமாட்சி, சென்னை—33.

கண்டால் சொல்லுங்கள்!

சர்க்கரை வாங்குவதற்காக எவர்சில்வர் தூக்குடன் நின்று கொண்டிருந்தேன். வயதான அம்மையார் ஒருவர், ''அடேடே, கொளுத்தும் வெயிலில் நிக்கறியே. நம்ப பையன்தான் கிளார்க். நான் வாங்கி வந்து தாரேன்!'' என்று பணத்தையும் தூக்கையும் வாங்கிக் கொண்டு சென்றவர்தான்! அவரை இன்னமும் தேடிக் கொண்டிருக்கிறேன். வேறு எந்த கியூவிலாவது பார்த்தால் சொல்லுங்களேன், ப்ளீஸ்!

எஸ். பேபி கமலா, திருத்துறைப்பூண்டி.

புளோபிளாஸ்ட் நிறுவனம் வழங்கும் வி. ஐ. பி. ஸூட்கேஸை குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

எஸ். எல். ராஜாராம்,
14, P. K. T. வீதி,
சூலூர்,
641 402,
கோவை மாவட்டம்.





வில்லிய நல்லூர் ஸ்ரீ P.S. பஞ்சாபகேசய்யர் குமாரர் P. ராமகிருஷ்ண னுக்கும், ஸ்ரீ V.K. சேதுராமய்யர் (SRINIVASA AGENCY – MAYURAM) குமாரத்தி சௌ. ஆனந்தவல்லிக்கும் சமீபத்தில் மாயவரம் New AVC கல்யாண மண்டபத்தில் திருமணம் விமரிசையாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



கல்கி, கோகுலம், மங்கையர் மலர், பைண்டர் ஸ்ரீ T.M. சுந்தரமூர்த்தி கிராமணியார் அவர்களின் பேத்தியும், ஸ்ரீ T. குமரேசன் அவர்களின் புதல்வியுமான திருநிறைச் செல்வி காஞ்சனமாலாவிற்கும் சென்னை மயிலை ஸ்ரீ ஜெகந்நாத கிராமணியார் அவர்களின் குமாரன் திருநிறைச் செல்வன் கிருஷ்ணன் B.A.க்கும் சமீபத்தில் சென்னை வடபழனி தாண்டவமூர்த்தி கிராமணியார் கல்யாண மண்டபத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்

9. புதிதாக வந்த மரக்கலம்

மகாக்ஷத்ரபனும் மகாராஷ்டிரத்தையே ஆக்ரமித்துத் தனது ஆட்சிக்குள் கொண்டு வந்து விட்டவனும் மகா வீரனென்று பெயர் பெற்றவனுமான நாகபாணன், தன்னை அழைத்து வரும் பொறுப்பைச் சித்தரஞ்சனியிடம் ஒப்படைத்து விட்டுத் தம்பியுடன் சென்று விட்டதையும், அதற்குப் பிறகு, குகைக்குள் அடியோடு மாறிவிட்ட நிலையையும் எண்ணிப் பார்த்த கௌதமிபுத்ரன் பலவிஷயங்களுக்குவிடை காணுமல் தவித்தான். சித்தரஞ்சனியின் இதழ்கள் தனது இதழ்களுடன் இணைந்து விட்ட பிறகும், தன்னை மணக்கும்படி அவள் வெளியிட்ட கோரிக்கைக்குப்பிறகும், குகையின் சம்பவங்கள் இயற்கைக்கு முற்றும் மாருயிருப்பதை எண்ணிப் பார்த்த கௌதமிபுத்ரன் சிறிது குழப்பத்திலேயே இருந்தான். சித்தரஞ்சனி குகை வாயிலை மூடி விட்டு வரும்படி தன்னைக் கேட்டுக் கொண்டதையும், அவள் எண்ணத்திற்கு இசைவது போல் குகைவாயிலும் சத்தம் போடாமல் மூடிக் கொண்டதையும் கவனித்த சாதவாகனன்குகைதானுகமூடிக்கொள்ளவில்லையென்பதையும் யாரோ வேண்டுமென்றே மூடியிருக்க வேண்டுமென்பதையும் சந்தேகமறப் புரிந்து கொண்டான். அப்படி யாராவது மூடியிருந்தால் அது யாராயிருக்கும் என்ற சிந்தனையிலும் இறங்கிச் சித்தரஞ்சனியைத் தழுவிய கைகளை அகற்ருமலே ''சித்தரஞ்சனி! குகை வாயிலை இங்கிருந்தே மூட விசை ஏதாவது இருக்கிறதா?'' என்று வினவினன், அவள் கழுத்தில் தனது உதடுகளைப் புதைத்த வண்ணம்.

அவன் உதடுகள் புதைந்ததால், உணர்ச்சிக்குப் பெரிதும் இலக்கான சித்தரஞ்சனி தனது அழகியமெல்லியகழுத்தைலேசாகத் திருப்பினுள், பெருமூச்சுவிட்டு அவன் கைகளில் அதிகமாக நெருங்கினுள். அந்தப் பூவுடலை லேசாகத் திருப்பி அவள் முதுகுப் பகுதியைத் தன்மீது சாய்த்துக் கொண்ட கௌதமிபுத்ரன் தனது கைகளை அவள் தோள் மீது தவழச் செய்து முன்புறத்தில் தொங்கவிட்டுக் கொண்டான். முன்புறத்தில் துவண்ட அவன் கைகளிலிருந்தோ பின்புறத்தில் அதிகமாக நெருங்கிய அவன் திடமான தேகத்திலிருந்தோ விடுபட எந்த விதமான முயற்சியையும் எடுக்காத சித்தரஞ்சனி, எதிரே தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த சண்டிகாதேவியின் முகத்தைப் பார்த்த வண்ணம், ''குகையை மூட இங்கு ஏதும் விசை கிடையாது''- என்று மிக மெதுவாகச் சொன்னுள்.

அப்படி அவள் பதில் சொன்னபோது அவள் தேகம் நடுங்கியதால் அதைச் சற்றுத் தனது உடலுடன் அழுத்திப் பிடித்த சாதவாகனன் ''அப்படியானுல் யாரோ அதை மூடியிருக்க வேண்டும்'' என்று அவள் காதுக்கருகில் சொன்னுன்.



உணர்ச்சியின் சுழற்சியில் சிக்கியிருந்த சித்தரஞ்சனி தனது மார்பு மீது தவழ்ந்து கொண்டிருந்த அவன் கைகளைத் தனது கைகளால் பற்றி அழுத்தியவண்ணம் 'ஆம்' என்றாள் மிக மெதுவாக.

அவன் தனது கன்னத்தை அவள் கன்னத்தோடு இழைத்துக் கொண்டே ''மூடியது உன் தந்தையாயிருக்குமா? அல்லது உங்கள் வீரர்கள் யாராவதாயிருக்குமா?'' என்று வினவினான்.

''என்னைச் சேர்ந்தவர்கள் யாரும் இதைச் செய்யத் துணிய மாட்டார்கள்'' என்றாள் அந்தச் சித்தினி.

''ஏன் அப்படி திட்டமாகச் சொல்கிறாய்?'' என்று கேட்ட கௌதமிபுத்ரன் தனது கைகளை அவள் மார்பிலிருந்து நீக்கி அவளைப்பிடித்துத் தன்னை நோக்கித் திருப்பி அவள் விழிகளை நோக்கினான்.



அவள் கண்கள் மூடிக்கிடந்தன. நேராகத் திருப்பப்பட்டதாலும் அவன் கைகளால் இறுக்கப்பட்டதாலும் அவன் மார்புடன் அழுந்திய அவள் மார்பு மிகவும் கெட்டிப்பட்டது. அவள் கால்கள் அவன் கால்களுடன் அழுந்தி இழைந்தன. அவள் மூச்சு பெருமூச்சாக வந்து உதடுகள் லேசாகத் துடித்தன. அவளை வளைத்திருந்த கைகளில் ஒன்றை முன்புறமாகக் கொண்டு வந்த கௌதமிபுத்ரன் அவள் முகவாய்க் கட்டையைச் சிறிது கையால் தூக்கிவிட்டுச் சற்றே குனிந்து அவள் பங்கயக் கண்களைத் தனது உதடுகளால் தீண்டினான். பிறகு சற்று மீண்டு அந்தக் கண்களைத் தனது கைவிரல்களால் பிரிக்க முயன்றான். "கண்களை விழித்துப் பார் சித்தரஞ்சனி" என்று சொல்லவும் செய்தான் அந்த வாலிபன்.

"ஊஹூம்" முடியாது என்பதற்கு அடையாளமாக அந்த மறுப்பு ஒலியை எழுப்பினாள் அந்தப் பைங்கிளி.

"ஏன் சித்தரஞ்சனி! என்னைப் பார்க்க இஷ்டமில்லையா?" முணுமுணுத்தான் அந்த வாலிபன்.

"இஷ்டமில்லாமலா இப்படி....." கண்களை மூடியபடியே அவள் பேசினாள்.

அதற்குமேல் கௌதமிபுத்ரன் அவளைத் தனது இருகைகளிலும் அநாயாசமாகத் தூக்கிக் கொண்டு போய்க் கடைசிப் படியில் உட்கார்ந்து அவளை மடியில் கிடத்திய வண்ணம் அவளை உற்று நோக்கினான் சில விநாடிகள். கர்ப்பக்கிரகத்தின் விளக்கின் பொன் ஒளியில் அவள் மார்பு எழுந்து எழுந்து தாழ்ந்து கொண்டிருந்தது. இரண்டு தாமரை மொட்டுக்கள் காற்றால் சலனப்பட்ட நீரின் அலைகளால் தூக்கித் தூக்கி அமிழ்த்தப்பட்டது போன்ற பிரமையை விளைவித்தது. மூடியிருந்த அவள் கண்களின் இரப்பைகள் சமுத்திரக் கிளிஞ்சல்கள் இரண்டு மலர் இதழ்களாக மாறிவிட்டதுபோன்ற நிலையை சிருஷ்டித்தன. அவள் செவ்விய அதரங்கள் ஏதோ சொல்ல முற்பட்டு அசைந்து மூடிக் கொண்டனவே தவிர சொற்கள் ஏதும் வெளி வரவில்லை. தன் மடியில் புஷ்பக் கொடி போல் சக்தியை அடியோடு இழந்தவளாய்ப் பலவீனப்பட்டவளாய்க்கிடந்த சித்தரஞ்சனியை மெள்ள எழுப்ப முற்பட்ட சாதவாகனன் அவள் உடலை அசைத்து, "சித்தரஞ்சனி! கண்களைத் திறந்து பார். நாம் பேச வேண்டியது இருக்கிறது. துரிதமாகச் செயல்பட வேண்டியதும் இருக்கிறது" என்றுகூற அவள் மெதுவாகக் கண்களைத் திறந்தாள். சாதவாகனின் காந்தக் கண்கள் அவள் விழிகளைக் கவர்ந்து நின்றன. அந்தச் சில நிமிடங்களில் சுயஉணர்வை வரவழைத்துக்கொண்ட கௌதமிபுத்ரன், "சித்தரஞ்சனி! துரிதமாக விளைந்துவிட்ட பலநிகழ்ச்சிகளுக்கு எனக்குக் காரணம் புரியவில்லை. நீதான் விளக்க வேண்டும்" என்றவன் "நான் இங்கு வரப்போவதை நீ முன்பாகவே ஊகித்திருக்க வேண்டும்" என்று சொன்னான்.

அவன் விழிகளிடமிருந்து தனது விழிகளை

> அமைச்சர்: அரசே! எதிரிப் படைகள் நமது தளபதியைக் கைது செய்துவிட்டன...!
>
> மன்னர்: நல்லதாகப் போயிற்று. ஊழல் குற்றத்தின் பேரில் அவரை நானே கைது செய்வதாக இருந்தேன்...!
>
> —வெ. இராமலிங்கம்.

நீக்காமலே அவள் பதில் சொன்னாள், "ஆம் ஊகித்தேன்" என்று.

"என்னை ஓடிவிடும்படி செய்தி எழுதியிருந்தாய்."

"ஆம்.... ஆனால்...."

"சொல்..."

"நீங்கள் ஓடமாட்டீர்களென்பது எனக்குத் தெரியும்...."

"இங்கு வருவேனென்பதும் தெரியுமா?"

"தெரியும்."

"உன் தந்தை நாகபாணனும் வருவதும் தெரியுமா?"

"தெரியாது. நாகபாணர் இங்கு வந்தது நான் முற்றும் எதிர்பாராத நிகழ்ச்சி."

"உன் தந்தை...." என்று ஏதோ பேசத் துவங்கிய சாதவாகனனைச் சற்றுத் துரிதமாகவே இடைமறித்த சித்தரஞ்சனி, "அவர் என் தந்தையல்ல" என்று ஒரு வெடியை எடுத்து வீசினாள்.

கௌதமிபுத்ரனுக்கு இது ஒரு புதிய கதையாயிருக்கவே அவன் தனது மடியிலிருந்த சித்தரஞ்சனியைத் தூக்கிப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு "க்ஷத்ரபன் உன்னை மகளென்று அழைத்தானே?" என்று வினவினான்.

பக்கத்தில் உட்கார்ந்த சித்தரஞ்சனி தனது தலையைச் சாதவாகனன் தோள்மீது சாய்த்துக் கொண்டு "வளர்த்தது அவர்தான்" என்றாள்.

"பெற்றது?"

"யாரோ தெரியாது."

"எங்கிருந்து உன்னை எடுத்து வந்தார்?"

"சிந்து நதிக்கரையில் ஒரு மரத்தடியில் நான் கிடந்ததாகச் சொன்னார்."

இதைக் கேட்ட கௌதமிபுத்ரன் நீண்ட நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். "உன்னை அவன் அன்று கடற்கரையில் அறைந்ததற்குக் காரணம் புரிகிறது. சொந்த மகளை எந்தத் தந்தையும் அப்படி அடிக்க மாட்டான்" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்ட சாதவாகனன் "உன்னை மணம்புரிந்து கொள்ளும்படி கேட்டாயே...." என்று சொற்களைச் சிறிது நீட்டினான்.

"கேட்டேன்."

"முன்பின் தெரியாதவனை எப்படித் திருமணம் செய்து கொள்ளும்படி கேட்டாய்?"

"நீங்கள் முன்பின் தெரியாதவரல்ல. உங்களைப் பற்றிச் சாகர்கள் வட்டாரங்களில் சதா பேசப்படுகிறது. தவிர இங்கேயே உங்களைப் பலமுறை பார்த்துவிட்டேன்."

"அது போதுமா திருமணத்திற்கு?"

"போதும். தவிர....."

"சொல் உண்மைக் காரணத்தை."

"எனக்குக் கணவனாக நீங்கள் என்னுடன்



வந்தால் உங்களை என் தந்தையோ மகா க்ஷத்ரபரோ எதுவும் செய்யமுடியாது. க்ஷத்ரபர் மருமகனைத் தொடக்கூட யாரும் துணிய மாட்டார்கள்'' என்றாள் சித்தரஞ்சனி.

சற்றுச் சிந்தித்த சாதவாகனன் லேசாக நகைத்து ''என் உயிரைக் காப்பாற்ற என்னை மணம் செய்து கொள்ள நினைக்கிறாயா?'' என்று வினவினான் நகைப்பின் ஊடே.

''அதுவும் ஒரு காரணம். ஆனால் அது மட்டும் காரணமில்லை. சந்தேகமிருந்தால் என் இதயத்தைக் கேளுங்கள்'' என்று கூறிய சித்தரஞ்சனி அவன் வலது கையை எடுத்துத் தனது மார்புமீது வைத்துக் கொண்டாள். அப்படி அவன் கையைக் கொண்டு வந்த சமயத்தில் அவள் மேலாடையும் உள் கச்சையும் சரிந்து கிடந்ததால் அவன் கை அவள் திண்ணிய வழுவழுத்த சருமத்திலேயே பதிந்ததால் அவன் சற்று நிலை குலைந்தாலும் சட்டென்று நிதானத்துக்கு வந்து, ''உன் இதயம் கைக்குச் செதி சொல்ல முடியாது'' என்றான். இருப்பினும் பதிந்த கையை எடுக்காமலே, ''சித்தரஞ்சனி! உன்னை அழைத்து வருவதாக என் தாயிடமே சபதம் செய்துவிட்டு வந்திருக்கிறேன். ஆகவே திருமணத்திற்கு அதிக தடையிருக்காது. ஆனால் கௌதமிபுத்ரன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் திருமணம் செய்து கொண்டான் என்ற அவப் பெயர் கூடாது'' என்று சொன்னவன், ''சரி, வா, போவோம்'' என்று அவள் கையைப் பற்றி அழைத்தான்.

''எங்கே?'' திகிலுடன் கேட்டாள் சித்தரஞ்சனி.

''நீ அழைத்துச் செல்லுமிடத்திற்கு'' என்றான் கௌதமிபுத்ரன்.

''நான் எங்கு அழைத்துச் செல்ல வேண்டும்?'' சற்று குழப்பமிருந்தது அவள் குரலில்.

''என்னை எங்கு அழைத்து வரும்படி மகா க்ஷத்ரபர் உத்தரவிட்டிருக்கிறாரோ அவ்விடத்திற்கு'' என்றான் கௌதமிபுத்ரன்.

''அங்கு அபாயம் காத்திருக்கிறது உங்களுக்கு'' என்றாள் சித்தரஞ்சனி.

''அதைப் பற்றி கவலைப்படாதே'' என்று கூறிய கௌதமிபுத்ரன் அவள் கையைப் பற்றி அழைத்துக் கொண்டு சண்டிகாதேவி முன்பு அவளை மண்டியிடச் சொல்லித்தானும் மண்டியிட்டு வணங்கினான். அப்படி மண்டியிட்ட வண்ணம் ''தாயே சண்டிகே! இந்தப் பெண்ணை நீதான் காப்பாற்ற வேண்டும். பெரிய ஆபத்தில் இருக்கிறாள்'' என்று சற்று இரைந்தே பிரார்த்தனை செய்தான்.

அந்தப் பிரார்த்தனைக்குக் காரணம் அவளுக்குப் புரியவில்லை. தனக்கு ஆபத்து ஏற்படக் காரணம் ஏதுமில்லை என்பது அவளுக்குத் தெரிந்தே இருந்ததால் அவளுக்கு அவன் பிரார்த்தனை செய்ததே பெரு வியப்பைத் தந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. சண்டியை வணங்கிய நிலையிலிருந்து அவன் எழுந்ததும் அவளும் எழுந்தாள். அவன் படிகளில் ஏறிச் சென்றபோது அவளும் ஏறிச் சென்றாள். குகை வாயிலை மூடியிருந்த பாறைக்கு வந்ததும் கௌதமிபுத்ரன் தனது கச்சையிலிருந்த கட்டாரியை எடுத்து இருமுறை பாறை மீது தட்டினான். அடுத்து அந்தப் பாறை மெதுவாக நகர்ந்து சந்திர வெளிச்சம் உள்ளே புகுந்தது. அந்த ஒளி வீச்சு உடலைத் தழுவ வெளியே வந்த கௌதமிபுத்ரன் சித்தரஞ்சனியையும் கை கொடுத்து மேலே தூக்கிவிட்டான்.

வெளியே வந்ததும் குகை வாயிலை மூடிவிட்ட சாதவாகனன் ''சித்தரஞ்சனி! நீ முன்னால் போ. அஞ்சன் வேல் நதியின் முகத்துவாரக் கரையில் படகு ஒன்று நின்றிருக்கும். அதில் ஏறிக் கொள். அந்தப் படகு செல்லுமிடத்திற்குப் போ. நீ மகா க்ஷத்ரபரைச் சந்தித்ததும் ''அவரை நான் மரக்கலத்தில் சந்திப்பதாகச் சொல்'' என்றான்.

''மரக்கலமா?'' வியப்படைந்தாள் சித்தரஞ்சனி.

அவளைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு நல்ல பாறையின் உச்சிக்குச் சென்று, ''இப்பொழுது கடலைப் பார்'' என்றான் கௌதமிபுத்ரன்.

சித்தரஞ்சனி கடலை நோக்கினாள். அதில் பெரிய மரக்கலம் ஒன்று அலைகளில் அசைந்து கொண்டிருந்தது. அதைக் கண்டு பிரமித்த சித்தரஞ்சனி ''எனக்கு ஏதும் புரியவில்லை'' என்றாள்.

இதைக்கேட்ட கௌதமிபுத்ரன் லேசாக நகைத்தான். ''எனக்குப் புரிகிறது'' என்று நகைப்பின் ஊடே சொல்லிவிட்டு, ''நீ செல் சித்தரஞ்சனி! நான் உன்னை வெகு சீக்கிரம் சந்திக்கிறேன்'' என்று கூறினான்.


அவள் மெதுவாக நடந்து சென்றாள். அவள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்த கௌதமிபுத்ரன், ''பாவம் அபலை! பெரிய சூழ்ச்சிக்காரர்கள் கைப்பாவையாகிவிட்டாள்'' என்று உள்ளூர வருந்தினான். அடுத்து பக்கத்திலிருந்த புதரை அணுகி, ''பூஜாரி! வெளியே வாரும்'' என்றான்.

நடுங்கிக் கொண்டே வெளியே வந்த பூஜாரியிடம் ஏதோ ரகசியம் சொன்னான். பூஜாரி புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். பிறகு தனது கிராமத்துக்குச் செல்லும் பாதையில் விரைந்தான். அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டு சில விநாடிகள் நின்ற கௌதமிபுத்ரன் வெகு வேகமாகக் கடற்கரையின் முகப்பிலிருந்த பாறைகளை அடைந்தான். அவன் கண்ணெதிரே எழுந்த நிகழ்ச்சியால் அவன் வியப்படையவில்லை. சித்தரஞ்சனி இரு வீரர்களுக்கிடையில் சிக்கிக் கிடந்தாள். அவளை ஏற்றிக் கொண்ட படகு அஞ்சன்வேலை நோக்கி விரையவில்லை. கடலில் ஆடி நின்ற மரக்கலத்தை நோக்கி விரைந்தது.

(தொடரும்)

போட்டி விதிகளும் நிபந்தனைகளும்:

1. அமிர்தாஞ்சன் லிமிடெட் ஊழியர்கள், அதன் விளம்பர ஏஜென்சிகள் மற்றும் அவர்களது உறவினர்களைத் தவிர, இந்தியாவிலுள்ள யாவருமே போட்டியில் பங்கு பெறலாம்.
2. நீங்கள் எத்தனை நுழைவுத்தாள்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றுடனும் 12 கிராம் அமிர்தாஞ்சன் பாட்டிலின் அட்டைப்பெட்டி ஒன்றும் இணைக்க வேண்டும்.
3. பென்சிலால் எழுதப்பட்ட நுழைவுத்தாள்களும், அழிக்கப்பட்ட குறிகள் கொண்டவை அல்லது சீர்குலைந்தவை, தெளிவாக எழுதப்படாதவை, அல்லது தபால்தலை ஒட்டப்படாதவை அல்லது குறைவாக ஒட்டப்பட்டவை ஆகிய நுழைவுத்தாள்களும் நிராகரிக்கப்படும்.
4. நுழைவுத்தாள்களுடன் அனுப்பப்படும் அட்டைப்பெட்டிகள் சேதமுற்றிருந்தாலும், சீர்குலைந்து இருந்தாலும், போட்டியில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5. வியாபாரியின் பெயரும் முகவரியும் எழுதப்படாத நுழைவுத்தாள்கள் நிராகரிக்கப்படும்.
6. தபாலில் இழந்துபோன அல்லது தாமதமாக வந்து சேரும் நுழைவுத்தாள்களுக்கு அமிர்தாஞ்சன் பொறுப்பேற்காது.
7. நுழைவுத்தாள்களை ஆங்கிலம் அல்லது மற்றெந்த இந்திய மொழியிலும் எழுதலாம்.
8. முடிவை ஒரு தீர்ப்பாளர் குழு பரிசீலிக்கும். அவர்களின் தீர்ப்பே முடிவானது. அதற்குக் கட்டுப்பட வேண்டும்.
9. போட்டி சம்பந்தமாக எவ்வித கடிதப் போக்குவரத்தும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
10. நுழைவுத்தாள்களும், விளம்பர வாசகமும் அமிர்தாஞ்சன் லிமிடெட்டின் உரிமைகளாகும்.
11. போட்டி சம்பந்தப்பட்ட சட்டப்படியே பரிசுத் தொகை வழங்கப்படும்.
12. பூர்த்தி செய்யப்பட்ட நுழைவுத் தாள்களும், 12 கிராம் அமிர்தாஞ்சன் பாட்டிலின் அட்டைப் பெட்டியும் அடங்கிய உறையின் மீது "அமிர்தாஞ்சன் போட்டி" என்று எழுதி, அமிர்தாஞ்சன் லிமிடெட், 42-45, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், சென்னை-600 004. என்னும் முகவரிக்கு அக்டோபர் 15, 1985-க்குள் வந்து சேரும்படி அனுப்ப வேண்டும்.
13. பரிசு பெற்றவர்கள் தபால் மூலம் அறிவிக்கப்படுவார்கள். முதல் பரிசு பெற்றவர்களின் பெயர்கள் முக்கியமான நாளேடுகளில் வெளியிடப்படும்.



1. விடுதலைச் சின்னத்தின் சிலை
2. தாஜ் மகால்
3. கோமதேஸ்வரரின் உருவச்சிலை
4. செயின்ட் பீட்டர் சதுக்கம்
5. பீசா நகரத்தின் சாய்ந்த கோபுரம்

நான் அமிர்தாஞ்சன் பெயின் பாம் உபயோகிக்கிறேன். ______

ஏனெனில் ______

______

______

______

பெயர் ______

முகவரி ______

______

90 ஆண்டுகளாக நம்பகமானது.

அமிர்தாஞ்சன்

துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது

தீய பின்விளைவுகள் இல்லாதது.

வியாபாரியின் பெயர் : ______

______

முகவரி : ______


______

OBM 9257TAM

போட்டிக் கதை: 5

சக்கர மனிதர்கள்

ஜோதிமணி



"என்னங்க காலேல எந்திரிச்சவுடனே படம்தானா? சும்மா எப்ப பார்த்தாலும் பொம்பளை... அது இதுன்னு வீக்லீஸ்ல வர்ற படங்களை கிறுக்கிக்கிட்டு இருக்கீங்க...? வீட்ல அஸ்கா இல்லேன்னு எத்தனை தடவை சொல்றது?"

"அஸ்கா இல்லேன்னா கடையில வாங்கிட்டு வரத் தெரியாதா? மாசாமாசம் சம்பளத்தை மட்டும் கரெக்டா வாங்கிப் பூட்டி வச்சுக்கிறியே... நீயே நிர்வாகம் பண்றது தானே... பி. எஸ். ஸி. படிச்சவளுக்கு... இதெல்லாம் தானாத் தெரிய வேண்டாமா?"

அவளுடைய படிப்பைக் குத்திக் காட்டிப் பேசியதும் கோபம் பொங்கி வந்தது.

"போதும் நிறுத்துங்க... காப்பி போடறதுக்கு அஸ்கா இல்லேன்னு சொன்னா கடைக்குப் போய் வாங்கிட்டு வர வேண்டியது தானே... இந்த ஹவுசிங் யூனிட்ல எந்தப் பொம்பளையாவது கடைக்குப் போறாளா? எல்லா வீட்டு ஆம்பளைங்க ஒரு மஞ்சப் பையைத் தூக்கிக்கிட்டுப் போறாங்க... படம் போட்டு என்னத்தைக் கிழிக்கப் போறீங்க...?"

"நீ கிழிக்க விட்டாத் தானே?"

தாயும் தகப்பனும் உரத்த குரலில் சண்டையிட்டுக் கொள்வதை ஒருவிதமான அக்கறையோடு கவனித்தாள் ஐந்து வயதாகும் ஷைலஜா. அந்தப் பிஞ்சு மனத்தில் தாங்கள் போடும் சண்டை எப்படிப்பட்ட எண்ணங்களைப் பதிக்கும் என்று உணர்ந்தவனாய் ராஜசேகர்தான் முதலில் அடங்கிப் போனான்.

"சரி... இந்தா ரொம்பக் கத்தாதே... பையை எடு!

ஊர்மிளா ஒரு பையை எடுத்து வந்து அவனிடம் கொடுத்தாள். கூடவே பத்து ரூபாயும் கொடுத்தாள்.

"ரெண்டு கிலோ வாங்கிட்டு வாங்க!"

அப்போது தொட்டிலில் கிடந்த இரண்டு வயசு ராஜேஷ் வீலென்று அழ ஆரம்பித்தான். அவனுக்கு முழித்தவுடன் தாய் பக்கத்தில் இல்லையென்றால் அழுகை வந்துவிடும்.

"இது ஒரு சனியன்... காலேல எந்திரிக்கும் போதே கத்தித் தொலையும்!"

ஊர்மிளாவின் எரிச்சல் அவன் மனத்தில் ஆத்திரத்தைக் கிளப்பிற்று. குழந்தையைப் போய்ச் சனியன் என்கிறாளே!... மனத்தை அடக்கிக் கொண்டு படியிறங்கினான்...


இரண்டு வாரங்களுக்கு முன்னால் செய்தித்தாளில் ஓவியப் போட்டி பற்றிய விபரம் ஒன்று வெளியாகியிருந்தது. ஒரு பெரிய சோப்பு தயாரிக்கும் நிறுவனமும் ஒரு அகாடமியும் சேர்ந்து அந்த ஓவியப் போட்டியை அறிவித்திருந்தன. பரிசுத் தொகை மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது. முதல் பரிசு இருபத்தைந்தாயிரம். இரண்டாம், மூன்றாம் பரிசுகள் முறையே பதினைந்தாயிரம், பத்தாயிரம். ஓவியம் வரையத் தெரிந்த அனைவரும் இதில் கலந்து கொள்ளலாம். பரிசளிப்பு விழா டெல்லியில் நடைபெறும் என்று இருந்தது. தனகோபால்தான் இவனிடம் இந்தப் போட்டி விஷயத்தைப் பற்றிக் கூறிச் செய்தித்தாளைக் காண்பித்தான்.

பார்த்தவுடன் இதில் கலந்து கொள்ள வேண்டும் என்று ஆசை மனத்தில் வேர் விட்டது. ரூபாய் முந்நூறு வரை செலவாகும் என்று மனக்கணக்குப் போட்டான். பரவாயில்லை... சம்பளத்தில் அட்ஜஸ்ட் செய்து கொள்ளலாம் என்று சமாதானம் செய்து கொண்டான். மாதக் கடைசியில் கோயம்புத்தூரிலுள்ள அலுவலகத்துக்குச் சம்பளம் வாங்கப்போகும்போது ஆர்ட் மெட்டீரியல்ஸ் வாங்கிக் கொள்ளத் தீர்மானித்தான்.

பெயிண்டிங்கிற்கான அடிப்படைக் கருத்தை மாடர்ன் ஆர்ட்டாக எப்படி எழுதலாம் என்றுதான் காலையில் ரஃப் ஸ்கெட்ச் போட்டுக் கொண்டிருந்தான்.

போட்டியைப் பற்றி ஊர்மிளாவிடம் இவன் மூச்சுக் காட்டவில்லை. கூறினால் உடனே அதுக்கு என்ன செலவாகும் என்றுதான் கணக்குப் போடுவாள். கலையைக் கணக்காக்கி லாபம் நட்டம் பார்க்கும் வியாபாரமாக்கிப் பார்த்தால் எல்லாக் கலைகளுமே தீண்டத் தகாதவைகளாகிவிடும். ரூபாய் முந்நூறு வரை செலவாகும் என்று சொன்னால் போதும்... பேசாம கெடங்க... என்று அவனின் ஆத்மாவைக் கொன்று விடத் தயங்க மாட்டாள்... அவள் ரொம்ப ரொம்பச் சாதாரணம். கவரிங் நகைகளில், விதவிதமான புடவைகளில், எவர்சில்வர் பாத்திரங்களில் மூழ்கித் தன்னை மறக்கிற ஜாதி. வீடு நிறைய பாத்திரங்கள்... புடவைகள்... இதுவே அவளுக்கு இமாலய லட்சியம். மிக்ஸி, கிரைண்டர் என்று ஒவ்வொன்றாய் வாங்கி... மற்ற ஹவுசிங் யூனிட் பெண்களிடம் தன் குடும்ப கௌரவத்தை உயர்த்திக் காட்டிக் கொள்ள வேண்டும். சீக்கிரமே இவனுக்கு ஸ்கூட்டர் வாங்க வேண்டுமாம். சைக்கிளில் பின்னால் உட்கார்ந்து கொண்டு போவது அவமானமாய் இருக்கிறதாம்!

வண்ணத்தில் பிரஷ்ஷைத் தோய்த்துத் தன் கற்பனை வடிவத்திற்கு வண்ணம் கொடுக்கிற ஆத்ம சுகத்தை அவன் இதனால் இழக்க வேண்டியதாயிற்று. புன்னகை அரசியை வரைந்த அந்த இத்தாலியக் கலைஞன் இப்படியொரு மனச் சித்திரவதையை அடைந்திருப்பானோ... மாட்டான். பிக்காஸோவுக்கு இப்படி ஒரு மனைவி இருந்திருக்கவே மாட்டாள்! இவர்களைப் போலத் தானும் ஓவியத்தில் உலகப் புகழ் அடைய வேண்டும் என்று இளமையில் கொண்டிருந்த லட்சியங்



கள்... ஊம்... இன்று மிக மிகச் சாதாரண அற்பக் காரணங்களால்... தம் வீரியத்தையே இழக்க வேண்டியதாகிவிட்டது...

இந்த ஆபீஸ் வேலையை உதறி விட்டால் என்ன என்று நினைப்பான். பிறகு சோற்றுக்கு என்ன வழி? சித்திரத்தை இங்கு யார் மதித்து விலை கொடுத்து வாங்குகிறார்கள்? சித்திரம் தன்னை வரைபவனுக்கே சோறு போடாத போது வாங்குபவனுக்கு என்ன செய்துவிட முடியும்? இங்கு எல்லாமே சோற்றின் அடிப்படையில்தான்! மனைவிக்கும் குழந்தைகளுக்கும் என்ன பதில் சொல்ல முடியும்? மாதா மாதம் இவன் நூற்றைம்பது அனுப்புவான் என்று எதிர்பார்த்து, அதை வைத்துக் குடும்பத்தை அட்ஜஸ்ட் செய்யும் அவன் பெற்றோரின் நிலை என்ன ஆகும்...? இதை எல்லாம் நினைத்தால் ஆபீஸ் வேலையை உதறிவிடத் துணிவு எப்படி வரும்?

* * * * *

பத்து மணிக்குத் தன் சைக்கிளில் சென்று தனக்கு வந்திருந்த ஆபீஸ் தபாலை வாங்கி உடனே பிரித்துப் படித்தான் சேகர். அது ஒரு மெமோதான். இவன் ஆடிட் பார்த்த சொஸைட்டியில் ஏதோ ஊழல் நடந்திருக்கிறது. இவன் ஆடிட் பார்த்த வருஷத்திலிருந்தே தொடங்கி வந்திருக்கிறது. அதை ஏன் சரியாகக் கவனிக்கவில்லை? அவ்வாறு கவனிக்காமல் இருந்ததற்கு ஏன் உங்கள் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்குத் தக்க விளக்கம் கோரப்படுகிறது என்று மெமோ இருந்தது.

மனசு சோர்ந்து போனது.

அங்கேயே பெஞ்சில் அமர்ந்து விட்டான். இதற்கு என்ன பதில் எழுத முடியும்? எவனோ செய்த குற்றம் இவனைப் பாதிக்கிறது. மனத்தில் மலைபெயர்ந்து விழுந்தது மாதிரி கவலை அழுத்திற்று. அவனுடைய மேலலுவலர் சிறிது ஆறுதல் கூறினார். அதில் அவனுக்கு நிம்மதி வரவில்லை. மாதக் கடைசி வரையிலும் இது நீடித்தது. ஓவியத்தைப் பற்றிச் சிந்திக்க முடியவில்லை.

மாவட்ட அலுவலர் அலுவலகம் கோயமுத்தூரில் இருந்தது. சம்பளம் வாங்கவும், ரிவ்யூ மீட்டிங்கில் கலந்து கொள்ளவும் மாதத்தின் கடைசி நாளுக்கு ஆபீஸ் போயாக வேண்டும்.

''சம்பளத்த வாங்கிட்டு ஒண்ணும் செலவழிக்காம நேரா வீடு வந்து சேருங்க... அனாவசியமா சுத்திக்கிட்டு இருக்க வேண்டாம்!''

அவன் கோயமுத்தூருக்குப் புறப்பட்ட போது ஊர்மிளா எச்சரிக்கிற மாதிரி சொல்லி அனுப்பினாள். அது இவனுக்கு எரிச்சல் ஊட்டியது. என்ன அதட்டல்? என்ன அதிகாரம்? பெண் என்பவள் ஒரு ஜீவநதியாய் இருக்க வேண்டாமா? வாரி வாரி வளத்தைக் கொடுக்கிற மனசும் பேச்சும் அவளுக்கு அழகில்லையா!

அவளுக்குப் பதில் சொல்லாமலேயே இவன் கிளம்பினான். திருப்பூரிலிருந்து ஒன்பதுக்கு பஸ் ஏறியவன் பத்தரைக்குப் போய்ச் சேர்ந்தான். மெமோ அனுப்பிய செக்ஷனிலேயே போய் விசாரித்த போது அந்த ஆள் பிடி கொடுக்காமல் பதில் சொன்னான். ஹெட்கிளார்க் இவனுக்குச் சிறிது பழக்கம். மேலதிகாரிதாம் விளக்கம் கேட்கச் சொன்னாராம். சார்ஜ் பிரேம் பண்ணாமல் விட மாட்டாராம்... ஹெட்கிளார்க்கின் பதில் பயமுறுத்துவது போல் இருந்தது.

மனசில் முள் பாய்ந்தது மாதிரி வலித்தது. என்ன சனியன் பிடிச்ச வேலை இது! ராஜினாமா பண்ணி விட்டால்... இந்தச் சனியன்களிடமிருந்து விடுபட்டு... நிம்மதியாய்... கையில் பிரஷ்ஷை எடுத்துக் கொண்டு வண்ணங்களில் மனந்தோய்ந்து தோய்ந்து... பொய், புரட்டு, வேஷம் ஏதுமில்லாத உலகத்தில் இஷ்டப்படி உலாவலாம்... ஊம்... அது முடியாது... இந்த இப்பிறவியில்... அது சாத்தியமில்லை...!

மனசு கனத்துப் போய் வெளியே வந்தான்.

''ஹலோ சேகர்!''

மலர்ந்த பூவாய் வசந்தா வந்தாள். இவள் முகத்தில் மட்டும் எப்படி எப்போதும் ஒரு சந்தோஷ வெளிச்சம் வீசுகிறது! இவன் கூடச் சென்னையில் வேலைக்கு முன்னால் ட்ரெயினிங் படித்த போதும் சரி... கோயம்புத்தூரிலேயே போஸ்டிங் ஆகி வேலை பார்க்கிற போதும் சரி... எப்போதும் இந்த மலர்ச்சி இருக்கிறது... ட்ரெயினிங் காலத்தில் இவனோடு சகஜமாய்ப் பழகியவள் இவள் ஒருத்திதான். தன் நினைவாக ஒரு ஓவியம் கூட அவளுக்கு அப்போது வரைந்து கொடுத்திருந்தான். இப்போது அவளுக்குக் கல்யாணமாகி விட்டது. கணவன் ஒப்பனைக்காரத் தெருவில் எலக்ட்ரானிக்ஸ் கடை வைத்திருக்கிறான். இரண்டு

ஒரு அங்காடியின் கும்பகர்ணத் தூக்கம்!



ஈரோடில் பன்னீர்ச் செல்வம் பூங்காவுக்குப் பக்கத்தில் புதிதாக அமைந்துள்ள கனி அங்காடி பழசாகி வருகிறது! மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டிடம் இது. இதைக் கட்டி முடிக்க மாநகராட்சி செய்த செலவு 14 லட்சம். இந்த 14 லட்சமும் மூன்று வருஷ காலமாகக் கும்பகர்ணத் தூக்கம் போட்டுக் கொண்டிருக்கிறது. கட்டிடம் இன்னும் திறக்கப்படாததற்குக் காரணம் சரி வரத் தெரியவில்லை. மாநகராட்சியை அணுகிக் கேட்டால், ''உங்களுக்கு வேறு வேலையில்லையா? அது திறக்கப்படும்போது வந்து

பையன்கள் இருப்பதாகக் கூறியிருந்தான். நேரிலே பார்க்கும் போது இவள் இரண்டு குழந்தைகளுக்குத் தாய் என்று சொல்ல முடியாது. இடையில் மடிப்பு விழச் சேலையைச் சிக்கென்று உடுத்தி வருகிற அழகே தனி தான்... வெகு சில பேருக்குத்தான் தானும் சந்தோஷமாகிப் பிறரையும் சந்தோஷப் படுத்துகிற வசந்த குணம் அமைகிறது...

வசந்தாவும் அவனுக்கு அனுப்பப்பட்ட மெமோவைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தாள். அதற்காக உண்மையில் வருத்தப்பட்டுப் பேசினாள். அவனுக்கு ஆறுதலாய் இருந்தது.

''மெமோவைத் தூக்கித் தூர எறிஞ்சிட்டுப் பெயிண்டிங்ல கான்செண்ட்ரேட் பண்ணுங்க சேகர்... ஒங்களுக்கு நிச்சயமா பரிசு கிடைக்கும்! ஐ விஷ் யூ ஆல் சக்ஸஸ்... நீங்க... இந்த டிபார்ட்மெண்ட்டுக்கே வந்திருக்கக் கூடாது. ரிப்போர்ட்... அது இதுன்னு மாரடிக்கிறத விட்டுட்டு நிம்மதியா பெயிண்டிங்ஸ் பண்ணிக்கிட்டிருக்கலாம்...'' என்றவள் அவனை ஒரு முறை பார்த்துவிட்டு மெல்லிய குரலில், ''இஃப் ஐ வேர் யுவர்ஸ்... ஒங்க வேலைய ரிசைன் பண்ணச் சொல்லி விட்ல பெயிண்டிங் மட்டும் நீங்க பண்ணுங்க... நான் ஒழைச்சிப் போடறேன்னு... சொல்லியிருப்பேன்!'' என்றாள் உணர்ச்சி வசப்பட்டு.

வசந்தாவின் உணர்ச்சிபூர்வமான பேச்சு உள்ளுணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்தது.

மாலையில் இருவருமே சேர்ந்து ஒப்பனைக்கார வீதிக்குப் பஸ்ஸேறினார்கள். அவள் கொடுத்த உற்சாகம், அவனுள் ஓவியச் சிந்தனை தலைநிமிர்ந்து நின்றது.

கேன்வாஸ், ஆயில் பெயிண்ட் ட்யூப்ஸ், பல நம்பர் பிரஷ்கள்... ஜிங்க் ஆக்ஸைட் ஒய்ட்... வஜ்ரத் திரவம்... மீடியம்... எல்லாம் வாங்குவதற்கு இருநூறு ரூபாய் வரை செலவாகிவிட்டது. பில்லைப் பார்த்ததும் மனைவி என்ன சொல்வாளோ என்று நினைத்தான். புறப்படும் போது அவள் பேசிய எச்சரிக்கையும் ஞாபகத்தில் வந்தது. மனம் லேசாகக் கலங்கியது.

''ஓவியப் போட்டியில கலந்துக்காம விட்டுடாதீங்க சேகர்!'' என்று மீண்டும் மீண்டும் அவனுக்கு நினைவுபடுத்தி அழுத்திச் சொன்ன வசந்தாவே பஸ் ஸ்டாண்ட் வரை வந்து பஸ்ஸேற்றி விட்டாள்.

இவன் வீட்டை அடைந்த போது மணி இரவு ஒன்பதரை. ஹவுசிங் யூனிட் முழுதும் இருளாய்க்கிடந்தது. ஒருசிலவீடுகளிலிருந்து மட்டும் ஜன்னல்களிலிருந்து வெளிச்சங்கள் வீதியில் சாய்ந்து கிடந்தன. ஊர்மிளா தூக்கக் கலக்கத்தோடு கதவைத் திறந்தாள். குழந்தைகள் தூங்கிப் போயிருந்தன. ''தட்ல சோறும் பக்கத்தில கொழம்பு எல்லாம் எடுத்து மூடி வச்சிருக்கேன்... சாப்பிட்டுட்டு தூங்குங்க...!'' என்று சொல்லிவிட்டு அவள் தூங்கப் போய் விட்டாள். இவன் சாப்பிட்டு விட்டுச் சிறிதுநேரம் ஓவியத்திற்கான கருவை ஸ்கெட்ச் போட்டுப் பார்த்தான்... பன்னிரண்டு மணிக்கு ஒரு அருமையான கருத்தோடு ஸ்கெட்ச் உருவாயிற்று. சந்தோஷத்தோடு படுக்கைக்குப் போனான்.

மறுநாள் காலையில் தற்செயலாக மேஜையைப் பார்த்த ஊர்மிளா பிரஷ் முதலான பொட்டலம் இருப்பதைக் கண்டு என்ன என்று அருகில் வந்து பார்த்தாள்.

''ஏங்க இதெல்லாம் நேத்து வாங்கிட்டு வந்தீங்களா?'' அவள் கேள்வியில் மிரட்டல் கலந்த விசாரணைத் தொனி. அதுவே அவனுக்குப் பிடிக்கவில்லை.

''ஆமா! படம் வரையறதுக்கு!''

''எவ்வளவாச்சு?''

அவன் மௌனித்தான். அவள் ஸ்டாண்டில் தொங்கிய அவன் சட்டைப் பையிலிருந்து சம்பளப்பணத்தைஎடுத்து எண்ணிப் பார்த்தாள். இருநூறு வரை குறைந்தது. அவளுக்குச் சட்டென்று கோபம் வெடித்தது.

''அநாவசியமா இருநூறு ரூபாய ஏன் செலவழிச்சிட்டு வந்திருக்கீங்க? இதுக்கு இப்ப என்ன அவசியம்?''

''பெயிண்டிங் காம்படீசன் வச்சிருக்கு... அதில கலந்துக்கத்தான்!''

''ஒங்க அம்மாவுக்கு நூத்தம்பது ரூபா அனுப்பணும். நீங்க வேறே செலவழிச்சிருக்கீங்க. இப்படி பொறுப்பில்லாம செலவு பண்றீங்களே... காம்படீசன்லே ஒங்களுக்குத் தான் பரிச மொதல்ல தூக்கிக் கொடுக்கப் போறாங்களா?''

கடைசியாய் ரொம்ப ஏளனமாய் வீசிய வார்த்தைகள் அவனுடைய தன்மானத்தைச் சுட்டன. ஆத்திரம் வெடித்தது. தான் சம்பாதிக்கும் பணத்தில் தன்னுடைய ஆத்ம சாந்தியாக நினைக்கிற ஒரு காரியத்தைக் கூடச் செய்யாதே என்று செய்யக் கூடாததைச் செய்து விட்டு வந்தவனைக் குற்றப்படுத்துவது மாதிரி பேசுறாளே. ஆபீசில் அந்தப் பூனைக் கண்ணுப்பயல்மிரட்டுகிறான். வீட்டில்இவள் மிரட்டுகிறாள். என்னை என்ன நினைத்துக் கொண்டார்கள் இவர்கள்...? வெறும் கழுதைகள்...! பெய்ண்டிங் பத்தி இந்தக்கழுதைங்களுக்கு என்ன தெரியும்?

''என்னடி மெரட்டுறே...? சம்பாதிக்கிறவன் நான். நீயில்லே.. என்னிஷ்டத்துக்குச் செலவழிப்பேன்.. நீ ஒண்ணும் அதிகாரம் பண்ணாம ஒன் வேலையப் பாருடி கழுதே!''

''ஒகோ, ஒங்க இஷ்டத்துக்கு செலவு பண்

பாரும்!'' என்கிறார்கள்.

இப்பொழுது இந்த அங்காடி மழைக்கு ஒதுங்குவதற்கும்.... கார், வேன் போன்ற வாகனங்களை நிழலில் நிறுத்தி வைக்கவும் பயன்படுகிறது. அது மட்டுமல்ல, ஈரோடின் பிரபல கேடிகளுக்கும் பிக்பாக்கெட்காரர்களுக்கும் புகலிடமாகவும் இரவில் விளங்குகிறது. பகலில் சோம்பேறி மடமாகப் பயன்படுகிறது. மூன்று சீட்டு, லங்கர் கட்டை போன்ற சூதாட்டங்கள் அமர்க்களப்படுகின்றன!

தகவல், புகைப்படம்:

— எஸ். செந்தில்ராஜி

ணுவிங்கன்னு நான் எதுக்கு...? இந்தாங்க ஒங்க சம்பாத்தியம்... என்ன வேணும்னாலும் செய்யுங்க...!''

என்றவள் அவன் முகத்தில் போய் விழும் படி பணத்தை விசிறி எறிந்தாள்.

இதைச் சேகர் எதிர்பார்க்கவே இல்லை. கணநேரம் ஸ்தம்பித்துப் போனான். மறு கணம் இவள் நம்மை எவ்வளவு கேவலமாக நினைக்கிறாள் என்று எண்ணிய மறு நொடியில் சட்டென்று எழுந்து அவள் கன்னத்திலும் முதுகிலும் மாறி மாறி அறைந்தான். அவள் ஒரு சத்தம் கூடப் போடாமல் அழுத்தமாய் அவனை முறைத்தாள். அது அவன் ஆத்திரத்தைப் பன்மடங்கு பெருக்கிற்று.

''என்னடி மொறைக்கிறே... பொட்டைக் கழுதே!'' என்று மறுபடியும் அறைந்தான். குழந்தை ஷைலஜா காரணம் புரியாமல் அழத் தொடங்கினாள்.

அழுது கொண்டிருந்த ஊர்மிளா என்ன நினைத்தாளோ பரண் மேலிருந்த சூட்கேஸை எடுத்து அதில் தன் துணிமணிகளை எடுத்து வைத்துக் கொண்டு, முகத்தைத் துடைத்துத் தலையைக் கையாலேயே கோதிவிட்டு, கைக் குழந்தை மீனலோசனியை இடுப்பில் தூக்கிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள்.

அவன் தடுக்கவில்லை. அவன் அணைப்பிலிருந்த ஷைலஜா, ''அப்பா... அம்மா ஊருக்குப் போதுப்பா!'' என்று பயத்தோடு சுட்டிக் காட்டினாள்.

அவன் பேசாமலிருந்து விட்டான். எங்கே போகப் போகிறாள். திருச்சியிலிருக்கிற தன் தாய் வீட்டுக்குப் போவாள். வேறு போக்கிடம் ஏது?

* * * * *

இரண்டு நாட்கள் ஓடிவிட்டன. இந்த இரண்டு நாளும் ஷைலஜாவுக்கு அம்மாவின் நினைப்பு வரவில்லை. சேகரும் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு ஓவியம் வரைவதில் முனைந்தான்., கேன்வாஸ் தயாராகி விட்டிருந்தது. அதன்மேல் ஜிங்க் ஆக்ஸைடு ஒயிட் பவுடரை வஜ்ரத் திரவத்தில் குழைத்துப் பூசினான். படம் வரைவதற்கு ஏற்றதாகி விட்டது கேன்வாஸ். மூன்றாம் நாள் காலையில் சித்திரத்தை நான்கு மணிக்கே வரையத் தொடங்கினான். இதுவரையிலும் எந்தத் தொந்தரவும் கொடுக்காமலிருந்த ஷைலஜா, மூன்றாம் நாள் காலையில் விடிந்ததும் அம்மாவை நினைத்து அழத் தொடங்கினாள். அவனுடைய எந்தச் சமாதானமும் குழந்தையிடம் பலிக்கவில்லை.

இனி இவளைச் சமாளிக்க முடியாது... மதுரையில் தன் தாயாரிடம் விட்டுவிட்டு வந்து பிறகு சித்திரத்தை முடித்துவிட வேண்டும் என்று திட்டமிட்டபடி மதுரைக்குக் கிளம்பினான்.

மகன் மட்டும் தனியாய் குழந்தையோடு வந்திருப்பதைக் கண்டு அம்மா சந்தேகப்பட்டாள். தகப்பனாரும் எங்கடா என்று கோபத்தோடு கேட்டார். பிறகுதான் நடந்த சண்டையைப் பற்றிச் சொன்னான். அம்மா பதறினாள்.

''எங்கே போயிருக்கான்னு தெரியுமா?''

''எங்கே போகப் போறா... எல்லாம் அவ அம்மா வீட்டுக்குத்தான் போயிருப்பா!''

''ஏண்டா அறிவு கெட்டவனே... அவ கோபிச்சிக்கிட்டுப் போயிருக்கா... நீ பாட்டுக்குப் படம் வரைஞ்சிக்கிட்டு இருக்கியே... அவ அங்க போகலேன்னா...?''

ராஜசேகருக்குச் சீ என்றாகி விட்டது... அம்மா மீது அடங்காத கோபம் வந்தது. எல்லோர் மேலும் வெறுப்புப் பொங்கியது... என்ன... யாருமே அவனையோ, அவன் சித்திரத்தையோ மதிக்க மாட்டேனென்கிறார்கள்... அவளைப் பற்றியே கவலைப்படுகிறார்களே...

அம்மாவின் மேல் தன் கோபத்தை எல்லாம் காட்டினான். தன்னை யாரும் பொருட்படுத்தவில்லை என்றதும் அறிவு முதிராத சிறுவனைப் போலக் காட்டுக் கூச்சல் போட்டான்.

அப்போது வாசலில் ஒரு ஆட்டோ வந்து நின்றது. அதிலிருந்து ஊர்மிளாவின் தாயும் தகப்பனும் இறங்கி வந்தார்கள்.

''நாங்க திருப்பூர் போய்ட்டுத் திரும்பி இங்க வர்றோம் மாப்பிள்ளை... வீடு பூட்டியிருந்துச்சு... பக்கத்து வீட்டுக்காரங்களுக்கு எதுவும் தெரியலே... இங்க வந்திருப்பீங்களோன்னு நெனைச்சு வந்தோம்... நல்லதாப் போச்சு!'' என்று சிரித்தார் மாமனார்.

''ஊர்மிளா எங்கே... வெளியே போயிருக்காளா?'' என்று கேட்டாள் மாமியார்.

ராஜசேகருக்கும், அவன் பெற்றோருக்கும் பலத்த அதிர்ச்சி. ஊர்மிளா அங்க போகலையா?

''ஊர்மிளா ஒங்ககிட்டதானே ரெண்டு நாளைக்கு முன்னாடியே பொறப்பட்டு வந்தா...!''

''என்ன? அங்க வரலையே!''

எல்லோரும் பதறினார்கள். அச்சமும் துயரமும் அவர்களைச் செயலிழக்கச் செய்தன.

ராஜசேகர் இடிந்து போனான். அவன் நெஞ்சில் கவலைச் சூறாவளி வீசத் தொடங்கியது. எங்கேபோயிருப்பாள்? எங்கேபோய்த் தேடுவது? யாராவது சொந்தக்காரர்கள் வீட்டுக்குப் போயிருப்பாளா? இல்லே ஃப்ரெண்ட்ஸ் வீட்டுக்குப் போயிருப்பாளா? அவளுக்கு யார் யார் தோழிகள்? அவள் ஒரு டைரி வைத்திருந்தாள். அதில் முகவரி இருக்கும். போலீசில் புகார் பண்ண வேண்டும். பத்திரிகைகளில் விளம்பரம் கொடுக்க வேண்டும். சொந்தக்காரர்கள் எல்லாருக்கும் தந்தி கொடுக்க வேண்டும். ஃப்ரெண்ட்ஸ்களுக்கும் அட்ரஸைத் தேடித் தந்திகள் அனுப்ப வேண்டும்...

கிடைத்து விடுவாளா? மனசு ரணமாகி வலித்தது. ஓவியத்தையும் ஓவியப் போட்டியையும் பற்றி நினைத்தான். பெயிண்டிங் வரைந்து அனுப்ப முடியாது... இந்த மனச் சூறாவளியில் அது முடியாது...

அழுகை வெடித்தது. சிறு குழந்தையைப் போல முகத்தை மூடிக் கொண்டு அழுதான்!


வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர். பற்சிதைவை எதிர்த்திடுவீர்.



கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர் !

தவறாமல் கோல்கேட் உபயோகிப்பதால்,
உங்கள் குடும்பத்தினரின் பற்களுக்கு ஆரோக்கியம், வலிமை, புத்துணர்ச்சி
தரும் தூய சுவாசம் கிடைக்கிறது.
இதுவே கோல்கேட்டின் பாதுகாப்பு வளையம்.


நீங்கள் பல் துலக்கும் ஒவ்வொரு முறையும்
கோல்கேட்டின் சமபலமான ஃபார்முலா
செயல்படுவது எப்படி என்றால்...




உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே
சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும்,
பற்சிதைவையும் உண்டாக்கும்
பாக்டீரியாக்கள் வளருகின்றன.



கோல்கேட்டின் ஒப்பற்ற செயல்புரியும்
நுரை ஆழ ஊடுருவிச் சென்று,
துர்நாற்றத்தை ஏற்படுத்தும் உணவுத்
துணுக்குகளையும் சிதைவு ஏற்படுத்தும்
பாக்டீரியாக்களையும் அகற்றுகிறது.



முறையாக கோல்கேட் கொண்டு பல்
துலக்குவதால் புத்துணர்ச்சி தரும்
தூய சுவாசமும், வலிமை மிகுந்த
ஆரோக்கியமும் தருகிறது.



B84.55 Tam

ஒவ்வொரு முறையும் சாப்பிட்ட உடன்,
உங்கள் குடும்பத்தினர் தவறாமல் கோல்கேட்
கொண்டு பல் துலக்கட்டும்.
வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர்.
கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர்.

**கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும்
பெப்பர்மென்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது !**



daCunha/AS/35/85TM

உணர்வுகள்

9. ஆண் எனும் திமிர்!

சந்திரசூடனின் அறையில் பரணி, நோட்டுப் புத்தகம் ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தான். சந்திரசூடன், பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்றிருந்தார். அந்த அறையில் கிடந்த சோபாவில் சாய்ந்தபடி அந்த நோட்டுப் புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினான். எப்போதோ ஒரு நாவலுக்கு அவர் எழுதியிருந்த விமர்சனம் அது—

அவர் எழுதியிருந்தார்:—

ஆணும் பெண்ணும் எப்போதும் தங்கள் இனத் தன்மைகளுக்கு அடிமைகள்தாம். ஆண், ஆண்மையின் அடிமை. பெண், பெண்மையின் அடிமை. அந்தத் தன்மைகளின் ஆதிக்கத்திலிருந்து இருபாலாரும் விடுபட முடிவதில்லை — ப்ரிஸனர்ஸ் ஆஃப் ஜெண்டர்—

பெண்ணை வலிய நாடிப் போவது, ஆதிக்கம் செலுத்துவது, வீரத்தைக் காட்டுவது எல்லாம் ஆண்பால் தன்மைகள்.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு பெண்பால் தன்மைகள்.

இவற்றில் குறை ஏற்பட்டால், அவரவர்கள் தங்கள் தன்மையை இழந்தவர்கள் என்று பொருள்.

இருபாலரும் தங்களுடைய அடிப்படைத் தன்மைகளிலிருந்து எக்காலமும் விடுபடப் போவதில்லை. இரண்டும் காலம் காலமாக ஒன்றோடு ஒன்று போராடிக் கொண்டுதானிருக்கும். இயற்கையின் நியதி இது. இந்தப் போராட்டங்களில் ஆண்மை தோல்வியுறுவதும் உண்டு! அநேகமாக அது படுக்கையறையில்தான் நடைபெறும்....

—பரணி இதைப் படித்துவிட்டுச் சிந்தனையில் ஆழ்ந்தான்.

பெண்ணை வலிய நாடிப் போவது... வீரத்தைக் காட்டுவது ஆண் தன்மை என்றால், எனக்கு...?

அப்படியானால் எனக்கு ஆண் தன்மை இல்லையா? மனத்தை அடக்க வேண்டும், பெண்ணைப் பற்றிச் சிந்திக்கக் கூடாது என்றுதானே மகாத்மா காந்தி, ராமகிருஷ்ணர் எல்லாரும் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் வீரத்தோடுதானே இருந்திருக்கிறார்கள்! இந்த ஒரு விஷயத்தில் மட்டும் ஆண்பால் தன்மையை உதறியிருப்பார்களோ...?

"என்ன? நோட்டுப் புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டே தூங்குகிறாய்?" என்ற குரலைக் கேட்டுக் கண்களைத் திறந்தான். எதிரே ராதா நின்று கொண்டிருந்தாள்.

"தூங்கவில்லை. சந்திரன் சாரின் விமர்சனம் ஒன்றைப் படித்தேன். அதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தேன்" என்றான் பரணி.

ராதா அவன் நெஞ்சின் மீது விரிந்து கிடந்த நோட்டுப் புத்தகத்தை எடுத்துப் படித்தாள். பாதி படித்ததும் அவனைப் பார்த்து, "இந்த மாதிரி சுதர்மத்திலிருந்து விடுபட முடியாததால்தானே பெண்கள் அவதியுறுகிறார்கள்" என்றாள்.

"என்ன அவதி?"

"ஆண்களின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற முடியவில்லை" என்றவாறு தொடர்ந்து படித்தாள். நோட்டுப் புத்தகத்திலிருந்து பார்வையை அகற்றாமலே, "எந்தக் காலத்திலும் ஆண் ஆண்தான்; பெண் பெண்தான்" என்று கூறிப் பெருமூச்சு விட்டாள். பிறகு, "ஆண்களின் பண்பைப் பற்றிக் கூறும்போது திமிரைப் பற்றியும் இவர் சொல்லியிருக்க வேண்டும்" என்று கூறியபடியே நோட்டுப் புத்தகத்தைப் பட்டென்று மூடினாள்.

பரணி அவளை வியப்புடன் பார்த்தான். "எல்லா ஆண்களுமா திமிரோடு இருக்கிறார்கள்?" என்றான்.

"திமிரைக் காட்டச் சந்தர்ப்பம் கிடைத்தபோது திமிரோடுதான் நடந்திருக்கிறார்கள். நீ விழுந்து விழுந்து படிக்கிறாயே மகாத்மா காந்தியை; அவருக்கு இல்லாத திமிரா? தம் மனைவியைக் கழுத்தைப் பிடித்து வீட்டை விட்டு வெளியே தள்ளியவர்தாம்."

"ஓ... அதுவா? அவருடைய கொள்கைப்படி அவள் நடக்க மறுத்தாள்" என்று பரணி சமாதானம் கூறினான்.

"அவருடைய கொள்கைப்படி அவள் நடக்க வேண்டும் என்று எதிர்பார்த்ததே திமிர்தானே. கஸ்தூரிபாவின் எண்ணப்படி அவர் நடந்தால் என்ன? அவர் மட்டுமென்ன? அவர் பக்தி செலுத்திய ராமர் கூட அப்படித்தாம்" என்றாள் ராதா.

பரணிக்குத் திகைப்பாயிருந்தது. "ஓ... ஸ்ரீராமர் ஒழுக்க சீலர். மனித இனத்திற்கே ஓர் எடுத்துக் காட்டு" என்றான்.

ர.சு.நல்லபெருமாள்

உறங்குவதில்லை

''ஒரு பெண்ணைத்தவிர வேறு ஒரு பெண்ணை நினைக்காமல் இருப்பதுதான் ஒழுக்கமா? ஒரு பெண்ணைப் பலர் முன்னிலையில் அவமானப்படுத்தியது எந்த ஒழுக்கத்தில் சேர்ந்ததோ?'' என்றாள் ராதா. அவள் குரலில் கோபம் தொனித்தது.

''எந்தப் பெண்ணை அவர் அவமதித்தார்? தாயைத் தெய்வத்திற்கு மேலாகப் பாவித்தார்.''

''அப்படிப் பாவித்தவர்தாம் தம்முடைய மனைவியை அவமானப்படுத்தினார்.''

''எப்போது?''

''சீதையைத் தீக்குளிக்கும்படி செய்தாரே, அது என்னவாம்?''

''ஊருக்கு மெய்ப்பிக்க வேண்டாமா?''

''ஓஹோ... அப்படியானால் ராமர் அல்லவா முதலில் தீக்குளித்துத் தம்மை யோக்கியர் என்று ஊருக்கு மெய்ப்பித்திருக்க வேண்டும். சீதை உடனிருக்காத காலத்தில் காட்டில் திரிந்தவர் கெட்டுப் போயிருந்திருக்க மாட்டார் என்று என்ன உறுதி? ஆனால் அவருடைய ஆண் என்னும் திமிர், சீதையைத் தீக்குளிக்கவைத்தது'' என்றாள்ராதாகோபத்துடன்.

''சமுதாய தர்மத்தை ராமர் மதிக்க வேண்டியிருந்தது!'' என்று கூறிச் சமாளித்தான்.

''ராமர் காட்டுக்குப் போக வேண்டிய கட்டம் வந்த போது அவரைப் பிரிய மாட்டேன் என்று சீதை அவருடன் காட்டுக்குச் சென்றாளே! அதேபோல் பிறர் அவச்சொல்லுக்காகச் சீதை காட்டுக்குச் செல்ல வேண்டிய நிலை வந்த போது கணவர் என்கிற முறையில் ராமர் என்ன செய்திருந்திருக்க வேண்டும்? சிம்மாசனந்தான் பெரிதாகி விட்டது'' என்றாள் ராதா.

''கணவனுடைய கடமையிலிருந்து தவறுபவராயிருந்தால் சீதைக்காக இலங்கை மீது படை எடுத்திருக்க மாட்டார்'' என்றான் பரணி ஆவேசமாக.

''அவர் இலங்கை மீது படையெடுத்தது கூட சுயநலத்தினால்தான். தம்முடைய மானத்தைப் பெரிதாக எண்ணித்தான் படையெடுத்தார். ராமரின் மனைவி கடத்தப்பட்டாள் என்ற பழியைத் துடைக்கத்தான் முற்பட்டாரே யன்றி, சீதை என்ற ஒரு பெண்ணுக்காகப் போரிடவில்லை.''

''என்னதான் சொன்னாலும், அவர் ஒரு மன்னருக்குள்ள கடமையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில் இருந்தார்.''

''இங்கிலாந்து இளவரசன் வின்சர் கோமகன், தம்முடைய காதலிக்காக சிம்மாசனத்தைத் துறந்தாரே. காதலியை ஆசை நாயகியாக வேண்டுமானால் வைத்துக் கொள்ளும்படி யோசனை கூறப்பட்ட போது, காதலியின் சுயமரியாதையைக் காப்பாற்றினார். அதல்லவா தர்மம்.''

''சீதையுடன் ராமரும் காட்டுக்குப் போய் விட்டால் அயோத்தியை யார் ஆள முடியும்?''

''உன்னைப் போல்தான் ராமரும் அன்று எண்ணியிருப்பார்; தாம் இல்லாவிட்டால் ராஜ்யம் நடைபெறாது என்று. அப்படி அவர் எண்ணியிருந்தால் அது ஆணவம்., அவர் இல்லையென்றால், பரதன் ஆண்டு கொள்கிறான். அவர் காட்டில் இருந்த பதினான்கு ஆண்டுகளில் அயோத்தி அழிந்து விடவில்லையே. ராமர் பிறப்பதற்கு முன் அயோத்தியை ஆள ஆள் இல்லாமலா போய் விட்டது? ராமர் நீரில் மூழ்கி இறந்த பிறகும் அயோத்திக்கு அழிவு வந்துவிடவில்லை. எல்லாமே அடிப்படையில் ஆண் என்னும் ஆணவந்தான் பெண்ணைத் துச்சமாக மதித்திருக்கிறது. சீதைக்காக அவர் சிம்மாசனத்தைத் துறந்திருந்தால் தர்மம் காக்கப்பட்டிருந்திருக்கும்,'' என்றாள் ராதா.

பரணி திணறிப் போனான். பதில் கூற முடியாமல் தவித்தான். அவளை வெறிக்கப் பார்த்தான். அவள் நோட்டுப் புத்தகத்தை அவன் மடி மீது வீசிவிட்டு, ''எந்தக் காலத்திலும்.இந்த ஆண் திமிருக்குப் பெண், பலியாகித்தான் வந்திருக்கிறாள். இதை எதிர்த்துச் சாடும்துணிவும்திறமையும்எப்போது பெண்ணுக்கு வருகிறதோ அப்போதல்லவா தர்மம் நிலை நாட்டப்படும்'' என்றாள்.

''நீங்கள் 'திருடர்கள்' என்கிற நாவலைப் படித்து விட்டுப் பேசுகிறீர்கள். அந்த நாவலில்தான் ஆசிரியர் நீங்கள் சொன்னதுபோல் ராமரைக் குற்றம் சாட்டி எழுதியிருக்கிறார்'' என்றான் பரணி.

''அந்த நாவலை இன்னும் நான் படிக்கவே இல்லை. அந்த ஆசிரியருக்குத் தோன்றியது எனக்கும் தோன்றியிருக்கிறது. ஆனால் இது விஷயத்தில் அந்நாவலின் ஆசிரியருக்கு அனுபவமிருக்காது. எனக்கு இருக்கிறது.

''என்ன அனுபவம்?''

''ஆண் திமிரின் கசப்பை உணரும் அனுபவம். தினமும் பார்க்கிறாயே நான் படும் அவதியை. ஆண் என்னும் திமிர்தானே இவரை இப்படிக் குடித்துவிட்டுத் துணிவோடு வீட்டுக்கு வரச் சொல்கிறது. 'திருடர்கள்' நாவலை எழுதிய ஆசிரியர் அதர்மத்தைச் சாடி எழுதிவிட்டார். ஆனால் அவர் எப்படியோ? அவருடைய மனைவியிடம் கேட்டாலல்லவா அவருடைய குணம் தெரியும்'' என்றவாறே ராதா, மேஜை மீதிருந்த ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்தாள்.

அதைக் கண்ட பரணி பதறிப் போய் எழுந்து அவளிடமிருந்த நோட்டுப் புத்தகத்தைப்பிடுங்கினான். ''ஐயோ, அதைநீங்கள் பார்க்கக் கூடாது'' என்றான்.


''ஏன்?''

''இது சாருடைய டைரி.''

''நீ மட்டும் படிக்கலாமோ?''

''எனக்குப் படிக்க அனுமதியளித்திருக்கிறார்.''

''நீ படிக்கலாம் என்றால் நானும் படிக்கலாம்'' என்றவாறு டைரியை அவனிடமிருந்து பறிக்க முனைந்தாள். அவன் கொடுக்க மறுத்துப் பின்னாலிருந்த சோபாவில் சாய்ந்தான். நோட்டுப் புத்தகத்திற்காக



இருவரும் மன்றாடிய போது ராதாவின் கால் சற்று சறுக்கவே, பரணி மீது குப்புற விழுந்து விட்டாள். பரணி பதறிப் போய் எழுந்திருக்க முயன்றான். ராதாவின் பாரத்தினால் மூச்சுத் திணறினான். அவளும் தட்டுத் தடுமாறி எழுந்து நின்றாள்.

"கையில் சோபா இடித்துவிட்டது" என்ற ராதா வலியினால் முகத்தைச் சுளித்தாள்.

"கன்றிச் சிவந்து போச்சே. ஈரத் துணியைக் கட்டுங்கள்" என்றான் பரணி.

ராதா முழங்கையைத் தடவி விட்டபடியே கீழே இறங்கிச் சென்றாள். அவள் போன பிறகும் பரணிக்குப் பதற்றம் நின்றபாடில்லை.

ஏன் இப்படிப் படபடக்கிறது? சே, உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியிருக்கிறதே! பாவம், ராதா கையில் நல்ல அடி. அவனுடைய நெற்றியில் இலேசாக வலிப்பது போலிருந்தது. நெற்றியைத் தட்விப் பார்த்தான். சின்ன வீக்கம் தெரிந்தது. ராதா அவன் மீது விழுந்த வேகத்தில் அவளுடைய நெற்றி அவனுடைய நெற்றியில் மோதியிருக்கிறது.

ஓ...! அவள் விழுந்த போது அவனுக்கு மூச்சே திணறி விட்டதே. அதை நினைத்துப் பார்த்தான். அவனுடைய உடல் முழுவதையும் அவளுடைய உடல் அழுத்திய பாரத்தை எண்ணிப் பார்த்தான். அவனுள் பரபரப்புத் தோன்றியது. ஏன் அப்படி...?

அவனுக்குத் தன் மீதே கோபம் எழுந்தது;



அருள்வாக்கு

கோயில்களும் அவற்றில் நடக்கிற உத்ஸவாதிகளும்தான் நம் மதத்துக்கு ஆயிரம் பதினாயிரம் காலமாக எத்தனையோ எதிர்ப்புக்கள் வந்த போதிலும் முட்டுக் கொடுத்து அவற்றைத் தாக்குப் பிடிக்கச் சக்தி தந்து வந்திருக்கின்றன. ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு கதை உண்டு. ஒவ்வொரு உத்ஸவத்துக்கும் ஒரு ஐதிஹ்யம் (ஐதீகம்) உண்டு. இவை எல்லாம் புராண வாயிலாகவே நமக்குக் கிடைத்திருக்கின்றன. இந்தப் பெரிய மூலதனத்தை அலக்ஷ்யம் செய்வது ஜனங்களின் மத உணர்ச்சிக்கே பெரிய தீங்கு உண்டாக்கிவிடும்.

பிரிண்டிங் பிரெஸ் (அச்சுக் கூடம்) இல்லாத பூர்வ காலங்களிலும் ஓலைச் சுவடிகளாகவே கண்ணெனக் காக்கப்பட்டு வழி வழியாக வந்துள்ள புராணங்களை இத்தனை புஸ்தகங்கள் அச்சுப் போட்டுக் கொண்டிருக்கிற இந்த நாளில் (அதில் பெரும்பாலானது ஆத்மசிரேயஸுக்கு ஹானி செய்வதாகத்தான் இருக்கிறது.) நாம் ஒரு பிரசாரமுமில்லாமல் மங்கும்படி செய்துவிட்டால் வருங்காலத்து ஜனங்களுக்கு நல்ல விஷயங்களில் ஈடுபடுத்தும் ஒரு பெரிய தூண்டுகோல் இல்லாமல் போய்விடும். இவற்றை எதிர் காலத்துக்கு ரக்ஷித்துத் தர வேண்டியது நம் கடமை.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

படித்திருந்தது நினைவில் வந்தது; ஒரு பெண்ணின் உடலை ஒரு மரக்கட்டை போல் பாவிக்கும் மனம் வேண்டும்...

என் மீது மரக்கட்டை விழுந்தால் இப்படிப் பரபரப்புத் தோன்றுமா? ஒரு பெண்ணுடைய ஸ்பரிசத்திற்கு இத்தனை பரபரப்பா...?

சேச்சே, நான் ஒரு பிரும்மச்சாரி. நைஷ்டிகப் பிரும்மச்சாரி. எனக்கு ஒரு பெண்ணின் உடலும் மரக்கட்டையும் ஒன்று. என் மனத்தில் சலனமே கிடையாது. கிடையவே கிடையாது...

மனம் சற்று அமைதியடைந்தது. "ஓம் ஸாந்தி... ஓம் ஸாந்தி... ஓம் ஸாந்தி..." என்று கண்களை மூடியபடி ஜபித்தான்.

"என்னப்பா பீஷ்மா, நின்று கொண்டே தியானம் செய்கிறாய்?" என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தான்.

சந்திரசூடன் உள்ளே வந்து கொண்டிருந்தார்.

"ஒன்றுமில்லை சார், உங்களுடைய விமர்சனம் ஒன்றைப் படித்தேன். அதைப் பற்றிய சிந்தனை" என்று கூறிச் சமாளித்தான்.

"நெற்றியில் என்ன வீக்கம்?" என்று கேட்டார்.

பரணி துணுக்குற்று நெற்றியைத் தடவினான். "கீழே குனியும் போது சோபாவில் முட்டிவிட்டேன்" என்றான். சிரித்தான் மனத்தில் வலியெடுத்தது.

ஏன் பொய் சொல்ல வேண்டும்? இதில் என்ன தப்பு? என்ன நடந்து விட்டது? தவறிப் போய் என்மீது விழுந்துவிட்டாள். அவ்வளவு தானே? ஏன் பொய் சொன்னேன்?

"என்ன யோசிக்கிறாய்? விமர்சனம் பற்றியா? அப்படி என்ன விஷயம் உன்னைச் சிந்திக்க வைத்து விட்டது?" என்று கேட்டார் சந்திரசூடன்.

"ஒரு நாவல் விமர்சனத்தில் ஆணும் பெண்ணும் அவரவர்களுடைய தன்மைகளுக்கு அடிமைகளாகிக் கிடக்கிறார்கள் என்று எழுதியிருக்கிறீர்கள். பிரிஸனர் ஆஃப் ஜெண்டர் என்று."

"அதுதானே உண்மை?"


"அதிலிருந்து விடுபட முடியாதா என்ன?"

"அதுதான் சுதர்மம். இயற்கையின் விதி. விடுபடவே முடியாது. சில சமயம், ஆண், பெண்ணைப் போல் நடக்க முயலுவான். அது அவனுடைய பலவீனம். அதேபோல் பெண், ஆணைப் போல் நடக்க முயல்வதுண்டு. அது அவளுடைய அறிவீனம். ஆணுக்கு ஆண்மைதான் பலம். பெண்ணுக்குப் பெண்மைதான் பாதுகாப்பு, அழகு. இந்த இரு தன்மைகளும் ஒன்றை ஒன்று எதிர்த்துக் கொண்டேதானிருக்கும்."

ராதா அக்கா இதைப் படித்துவிட்டு ஆணுடைய திமிரைப் பற்றி ஒரு பிரசங்கமே செய்துவிட்டுப் போனார்கள்.

"அவளும் இதைப் படித்தாளா?" என்று கேட்டுக் கொண்டே வெற்றிலை போடுவதில் முனைந்தார் சந்திரசூடன். பரணிக்கு இன்னும் உள்ளூரப் பரபரப்பு இருந்தது. ராதா அவன் மீது விழுந்த நினைவு வளைய வளைய வந்து கொண்டிருந்தது. மனத்துக்குள் 'ஓம் ஸாந்தி, ஓம் ஸாந்தி' என்று ஜபித்துக் கொண்டே கீழே இறங்கிப் போனான்.

(தொடரும்)



ராகமாலிகா பட்டு சேலைகள்

சுகன் ஆர்கேட்,

நெ. 12பி, நாகேஸ்வரராவ் ரோடு, பனகல் பார்க் எதிரில்

தியாகராய நகர், சென்னை-600 017

(ஞாயிறு கடை உண்டு)

கடலைக் கடக்க ஒரு பாலம்



• தாட்சர்




• மித்தரான்

பிரான்ஸையும் பிரிட்டனையும் இணைக்கும் கடல் நீர்ப் பகுதி இங்கிலீஷ் கால்வாய் எனப்படுகிறது. பெயர்தான் கால்வாயே யொழிய இது சுமார் 30 மைல் அகலத்துக்கு பிரிட்டனையும் பிரான்ஸையும் பிரித்து வைத்திருக்கிறது. இந்தக் கடல் பகுதியில், கடலின் அடிவாரத்துக்குக் கீழே சுரங்கப்பாதை அமைத்தோ அல்லது கடல் மீதாகப் பாலம் கட்டியோ இரு நாடுகளையும் இணைத்துவிடலாம் என்று இன்றைக்குப் பொறி இயல் வல்லுனர்கள் திட்டம் தீட்டி வருகிறார்கள். நெப்போலியன் காலத்திலேயே உருவான கனவாம் இது!

இன்று உலகிலேயே போக்குவரத்து மிகவும் அதிகமாகக் காணப்படும் கடல் பகுதி இதுதான். எனவே இணைப்புப் பாலத்துக்குச் செலவாகும்தொகையை,நாளடைவில்இதில் பயணப்படும் வாகனங்களுக்குக் கட்டணம் வசூலிப்பதன் மூலம் திரும்பப் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இரு நாடுகளிலும் தனியார் நிறுவனங்கள் பல இதற்காகக் கூடிய செலவை ஏற்க முன்



வந்துள்ளன. பதினைந்து பிரதான வங்கிகளும் காண்ட்ராக்டர்களும் சேர்ந்து, 'சானல் டன்னல் க்ரூப்' என்ற அமைப்பின் கீழ் 31 மைல் நீரடிச் சுரங்கப்பாதை அமைக்கத் திட்டமிட்டுள்ளனர். இதன் வழியே ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட ரயில்கள் ஓடும். சின்ன ரயில்கள் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும். பெரிய ரயில்கள் பிரயாணிகள் ஏறியுள்ள கார்கள், பஸ்கள், லாரிகள் போன்ற ஊர்திகளையே ஏற்றிச் செல்லும்! பண்டங்களை ஏற்றிச் செல்லும் சரக்கு ரயில்களும் ஓடும்.

மேம்பாலம் அமைக்கும் திட்டமும் உள்ளது. இதன்படி வேறு சில நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து கடலில் இரண்டு செயற்கைத் தீவுகள் அமைத்து அவற்றைப் பாலங்களால் இணைக்கத் திட்டமிட்டுள்ளனர். இந்தப் பாலங்களின் மீது பிரயாணிகள் தங்கள் வாகனங்களைத் தாங்களே ஓட்டிச் செல்லலாம். இந்த மேம்பாலங்களின் அருகிலேயே ரயில் பாதையுடன் கூடிய, கடல் அடிவாரத்துக்குக் கீழே அமைந்த சுரங்கப் பாதையும் இருக்கும். இந்த இரண்டாவது திட்டத்துக்கு முன்னதைவிட இரு மடங்கு அதாவது 7 பில்லியன் டாலர் செலவாகும்!

பிரிட்டனின் வர்த்தகப் பரிமாற்றத்தில் பாதிக்கு மேல் ஐரோப்பாவுடன்தான் நடக்கிறது. தற்போது டோவரிலிருந்து (பிரிட்டன்) காலாய் (ஃப்ரான்ஸ்) செல்ல, கடற் பிரயாணத்துக்கு ஆகும் செலவு அதே தூரம் தரைப் பிரயாணம் செய்வதற்கு ஆகும் செலவை விடப் பதினான்கு மடங்கு அதிகம்! ஆகையால் இந்த மேம்பாலமோ, சுரங்கப் பாதையோ அமைப்பதால் நேரம் மிச்சமாவதோடு செலவும் மிச்சமாகி நாளடைவில் பாலத்துக்கான செலவு மிச்சப்பட்டு விடும் என்பதாக நம்பப்படுகிறது.

மார்க்ரெட் தாச்சரும், ஃப்ரெஞ்சு அதிபர் மித்தரானும் இந்தக் கருத்துக்கு அமோக ஆதரவு அளிக்கக் காரணங்கள் பல. திட்டத்தை நிறைவேற்றப் போவது தனியார் துறை. அரசுக்குச் செலவு கிடையாது. சட்ட பூர்வமான அனுமதி வழங்கி, நில ஒதுக்கீடு செய்வதோடு சரி; ஆனால் இதன் மூலம் கிடைக்கும் அரசியல் ஆதாயம் ஏராளம். மேலும் லட்சம் பேருக்குப் புதிய வேலை வாய்ப்பு ஏற்படும். தேர்தல் நேரத்தில் மக்கள் ஆதரவைப் பெற இவை உதவும் அல்லவா?

— எஸ்ஸார்.

நன்றி: 'நியூஸ் வீக்'



கல்கி பத்திரிகையின் முந்நாள் ஆசிரியரும் அகில இந்திய ரேடியோவில் பெரிய பதவிகளில் இருந்து ஓய்வு பெற்றவரும் இலக்கியச் செல்வரும் இசைப்பேரறிஞருமான திரு. மீ. ப. சோமசுந்தரம் ("சோமு") அவர்களின் செல்வக் குமாரி சிதம்பர ராஜ நந்தினிக்கும் திரு. எம். சங்கரன் அவர்களின் செல்வ மகனும் சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞருமான கோமதி நாயகத்துக்கும் அண்மையில் வெகுசிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.

முகூர்த்தம் முடிந்தபின் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் இன்னிசைக் கச்சேரி விருந்தினரை மெய்மறக்கச் செய்தது. மாலை வரவேற்பின் போது சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் குரல் கணீரென்று ஒலித்து அவையோரை மகிழ்வித்தது. இரவு நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் அவர்களின் நாதஸ்வரம் இசை வெள்ளத்தில் அன்பர்களை ஆழ்த்தியது.

காலை முகூர்த்தத்துக்கும் மாலை வரவேற்புக்கும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரமுகர்கள் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

ஆதவன் மேக மண்டலத்திற்குள், 'அம் பேல்', ஜூட்' ஆடிக் கொண்டிருந்தான்.

பகல் மணி மூன்றிருக்கும்.

கரெண்ட் கட்!

அந்தத் தனியார் வங்கிக்குள் வெந்து அழுகிக் கொண்டிருந்தான் அருண்.

அவன் மனைவி சுசிலா பணியாற்றும் வங்கி அது!

ஒரு சின்ன ட்ரெய்னிங்கிற்காக, வெளியூர் சென்றிருந்த சுசிலா, அங்கிருந்தபடியே, அவனுக்கு எழுதிக் கேட்டிருந்த சம்பள விவரங்களை அவள் பணியாற்றும் வங்கியில், வாங்கி அனுப்புவதற்காக, அந்த வங்கிக்கு வந்திருந்தான் அருண்.

ஆங்காங்கே, அமர்ந்து, குறுக்கும் நெடுக்குமாய் நடந்து, உள்ளே அமர்ந்திருந்த நண்பர்களுடன் உரையாடி..... ஓ! நேரம் அசுரத் தனமாய் நகர்ந்து கொண்டிருந்தது.

வெளியே சென்றிருந்த பேங்க் மானேஜர் இன்னும் திரும்பியபாடில்லை!

அந்தப்புழுக்கத்திலிருந்துநழுவிவெளியே வந்தான் அருண்!

காற்று ஜில்லென்று வீசியது!

ஒரு வில்சை உருவிப் பற்ற வைத்தான்.

சுகமாய் இருந்தது!

''சார்.''

புகையை அருண் அழுத்தமாய் வெளியே ஊத, அந்தச் சிறுவன் இப்போது அருணுக்கு வெகு அருகில் வந்து நின்றான்.

அவனுக்கு வயது பன்னிரண்டு இருக்கும். நல்ல உயரம்! சிவந்த நிறம்! கழுத்தைக் கவ்விய நீல நிற பனியன், மரக்கலர் பேண்ட், வயிற்கு மீறிய கேசத்தை அழகாய் மடித்துச் சீவியிருந்தான்.

''சார்!''

''என்னப்பா?''

''இந்த பேங்க்ல சுசிலான்னு யாரும் கேஷியர் இருக்காங்களா?''

அருணுக்குத் திகீரென்றது.

இந்த வங்கியில் பணியாற்றும் ஒரே பெண் அவன் மனைவி சுசிலா மட்டும்தான்.

''நீ.... யாருப்பா?''

''நான் அவங்களோட மகன் தினேஷ்.''

''என்னது....?''

''ஆமா சார் சுசிலாங்கறது, என்னோட மம்மிதான்!''

தூக்கிவாரிப் போட்டது அருணுக்கு. வில்சைப் பிடுங்கித் தூர எறிந்தான்.

கட்பாக்கட்டிலிருந்து பர்ஸை மின்னலாய் உருவி, இரண்டாய்ப் பிளந்து அந்தச் சிறுவனின் முகத்தில் அனிச்சையாய்த் தேய்த்தான்.

ப்ளீஸ், என்னை நம்புங்கள்

ஞாஜம்பாள் செல்வம்



''தினேஷ்! நீ சொல்றது, இந்த போட்டோ வில் இருக்காங்களே, இந்தச் சுசீலாவா? நல்லாப் பார்த்துச் சொல்லுப்பா.''

''இவுங்களேதான் சார் என் மம்மி!''

அருணுக்குள் வெடிகுண்டு வெடித்தது!

''தம்பி இங்கே வா.....!''

அந்தச் சிறுவனை அழைத்துக் கொண்டு அந்த வங்கியைச் சுற்றி நின்ற காம்பவுண்டின் ஓர் ஓரத்திற்கு வந்து நின்றான் அருண்.

விழிகளை ஒருமுறை சுழற்றினான்.

யாருமில்லே!

''தினேஷ்! நீ இப்போ எங்கிருந்து வர்றே?''

தமிழ்நாட்டின் பிரசித்தி பெற்ற ஒரு கோடைவாசஸ்தலத்தின் பெயரைச் சொன்னான் அந்த தினேஷ்!

''அங்க நீ என்ன பண்றே தினேஷ்?''

''அந்த ஊர் கான்வென்ட்ல சிக்ஸ்த் ஸ்டாண்டர்டு படிக்கிறேன் சார்.''



''எத்தனே வருஷமா நீ அங்க படிச்சிக்கிட்டிருக்கே?''

''ஏன்? எல். கே. ஜி யிலிருந்தே அங்கே தான் படிக்கிறேன்.''

''உன்னைப் பார்க்க உன் அம்மா, அடிக்கடி வருவாங்களா?''

''இல்லே சார்! எப்போதாவதுதான் வருவாங்க! ஆனா, ஹாஸ்ட்டல் பீஸ், டியூஷன் பீஸ், டேர்ம் பீஸ் எல்லாத்தையும் கரெக்டா, மாசாமாசம் அனுப்பிச்சிடுவாங்க.''

''ஏன் தினேஷ்! உன்னைப் பார்க்க உன் அம்மா மட்டும்தான் வருவாங்களா? இல்லே உன் அப்பாவும் சேர்ந்து வருவாரா?''

''இல்லே சார்! என் மம்மி மட்டும்தான் வருவாங்க! என் டேடி சிங்கப்பூர்ல இருக்காங்களாம். அவரை நான் ஒரு தடவை கூட இதுவரை பார்த்ததே இல்லே!''

''அப்போ, உன்னைப் பார்க்க உன் அம்மா மட்டும்தான் வருவாங்க!''

''இல்லல்லே! சமயத்ல மம்மிகூட, என் பாட்டியும் வருவாங்க! ஆனா, அந்தப் பாட்டி போன மாசம் செத்துப் போச்சு!''

அருணுக்குத் தூக்கிவாரிப் போட்டது!

சென்ற மாதம்தான் அவன் மாமியார், காலமாகியிருந்தார்.

''நீங்க ஏன் சார் இதையெல்லாம் கேக்குறீங்க? என் அம்மாவுக்குச் சொந்தமா? அவுங்க போட்டோவை உங்க பர்சுக்குள்ள வச்சிருக்கீங்களே....?''

''ஆமாம்ப்பா! ரொம்பச் சொந்தம்! அதான் இவ்வளவு அக்கறையா, எல்லாத்தையும் கேக்குறேன். இப்போ, நீ திடீர்னு என்ன விஷயமா, உன் அம்மாவைப் பார்க்க இங்க வந்தேன்னு சொன்னேன்னா, என்னால் முடிந்த உதவியை நான் கண்டிப்பா, உனக்குச் செய்யறேன். ஏன்னா, உன் அம்மா ட்ரெய்னிங் போயிருக்காங்க. வர ரெண்டு, மூணு நாள் ஆகும்.

''என்னது? மம்மி ஊர்ல இல்லையா?''

சிறுவன் அதிர்ந்து போய்க் கண்கலங்க, அருண், அவன் முதுகைத் தட்டிக் கொடுத்தான்.

''கவலைப்படாதேப்பா! நான் இருக்கேன்! உனக்கு என்ன வேணுமின்னு சொல்லு. நான் செய்யறேன்.''


''சார்! எதிர்பாராதவிதமா பரீட்சையெல்லாம் சீக்கிரமே முடிஞ்சிருச்சி. எங்க ஹாஸ்ட்டல்ல ஸ்டூடண்ஸெல்லாம் நாளே மறுநாள் டூர் போறாங்க. மம்மிக்கு கம்யூனிகேட் பண்ண நேரமில்லே! அதான் நேர்ல வந்து பணத்தை வாங்கிக்கிட்டுப் போகலாம்னு ரொம்ப ஆசையா வந்தேன்.''

''எவ்வளவு தினேஷ்?''

''ஐநூறு ரூபா சார்!''

''நான் தர்றேன். வாங்கிக்கிறியா?''

''நீங்க, இந்தப் பணத்தை என் மம்மி வந்



ஆசிரியர்: ''மனிதர்களுக்கு இருப்பது போல மிருகங்களுக்கு நாம் இன்ஷியல் போடுவது கிடையாது.''

மாணவன்: ''ஏன் இல்லே சார்? ஓ நாய் இருக்கே!''

—பூவை. கே. சந்திரன்.

தரும் வாங்கிக்குவீங்களா?''

''கண்டிப்பா வாங்கிக்கிறேன்!''

''அப்போ நானும் வாங்கிக்கிறேன். குடுங்க....''

''ஓ! நாட்டி பாய்! இங்கேயே நில்லு. இதோ வந்திடுறேன்....

அருண் மீண்டும் அந்த வங்கிக்குள் சென்று, தன் நண்பர் ஒருவரிடம் பணத்தை வாங்கிக் கொண்டு வெளியே வந்தான்.

''இந்தா தினேஷ். இதுல ஐநூற்றி ஐம்பது ரூபா இருக்கு! ஐம்பது ரூபாயை நீ செலவுக்கு வச்சிக்க.

''தேங்க்யூ சார்!''

''நத்திங். வா! கொஞ்சம் ஷாப்பிங் போயிட்டு, அப்படியே உன்னை பஸ் ஏற்றி விடுறேன்.''

''யூ ஆர் சோ கைண்டு டு மீ சார்!''

''ஓ! இட்ஸ் ஆல்ரைட்! வா!''

தினேஷை பஸ் ஏற்றிவிட்டு, மீண்டும் தன் கம்பெனிக்குத் திரும்பிய அருண், பிடுங்கி எறிந்த மலராய் நாற்காலியில் வந்து விழுந்தான்.

அவனுக்கு வியர்த்தது. வியர்த்துக்கொட்டியது!

வேலையே ஓடவில்லை!

பைல்களை மூடி மூடித் திறந்தான்.

முக்கியமான கணக்குகளை மட்டும் மிகச் சிரமத்துடன் முடித்துவிட்டு, வெளியே வந்தான்.

அவனுக்கு, அவன் இருந்த மனநிலையில், இரண்டு கிலோ மீட்டராவது நடந்தே செல்ல வேண்டும் என்ற வேகம்!

அனிச்சையாய் நடந்து, இயந்திரமாய்த் தன் வீட்டிற்குள் நுழைந்த அருண், அப்படியே அதிர்ந்து போனான்.

உள்ளே, அவன் மனைவி சுசிலா, சற்றும் எதிர்பாராதவிதமாய்க், குழந்தைகளுக்குச் சாதம் ஊட்டிக் கொண்டிருந்தாள்.

அருணைக் கண்டவுடன் எழுந்து நின்றாள்.

மேலட்டையில்:
ரபியா அமீன்.
வண்ணப்படம்:
எம். கே. ராமமூர்த்தி.

''சனி, ஞாயிறு ட்ரெய்னிங்ல லீவுங்க! குழந்தைகளைப் பார்க்காம ரொம்பக் கஷ்டமா இருந்திச்சு! அதான் செலவானாலும் பரவாயில்லேன்னு, திடீர்னு கிளம்பி வந்திட்டேன்.''

''நல்லவேளை சுசி! இன்னும் மூணு நாள் நீ வராம இருந்தின்னா....குழந்தைகள் என்னைப் பிடுங்கி எடுத்திருக்கும். ஒரு நாளைக்கு ஆயிரம் தடவை கேட்டிருச்சுங்க! அம்மா எப்போ வருவாங்க, எப்போ வருவாங்கன்னு....''

வார்த்தைகளைச் சலனமின்றி உதிர்த்து விட்டு, மௌனமாய் அறைக்குள் நுழைந்து, அங்கேயே உறைந்து போனான் அருண்.

இரவு மணி ஒன்று!

நெடுநேரம்வரை, படுக்கையில் புரண்டு கொண்டிருந்த அருண், மெல்ல எழுந்து கட்டிலின் விளிம்பிற்கு வந்தான்.

அவன் கண்ணெதிரே சுசிலா!

ஒரு கூடை நாற்காலிக்குள், கண்ணீர் பந்தாய் அமர்ந்து, அருணையே வெறித்துக் கொண்டிருந்தாள்.

''என்ன சுசி! தூங்கலையா.....?''

''தூங்க முடியலைங்க!''

''ஏன்?''

''நான் பஸ்ல நம்ம ஊருக்குள்ள நுழைஞ்சப்போ, எதிரே வந்த பஸ்ல தினேஷைப் பாத்தேங்க!''

''பார்த்து.....?''

''பஸ்ஸை நிறுத்தச் சொல்லி, அவனை இறக்கிக் கொஞ்ச நேரம் பேசியிருந்திட்டு, அடுத்த பஸ்ல அவனை அனுப்பிவச்சேன்.''

....

''ஏங்க? எப்படிங்க உங்களால இப்படியெல்லாம் நடந்துக்க முடியுது?''

விழிகளில் நீர் கோக்க, வார்த்தைகள் தடுமாற, அந்தக் கூடை நாற்காலியை விட்டு எழுந்த சுசிலா, திடீரென்று அருணின் கால்களில் சரிந்தாள்.

''என்னை மன்னிச்சிடுங்க! தயவு செய்து என்னை மன்னிச்சிடுங்க! இவ்வளவு நாளா, இந்த விஷயத்தை உங்ககிட்டே சொல்லாம மறைச்சது, என் தப்புதாங்க....''

''உஷ்! சத்தம் போடாதே சுசி! பக்கத்தில என் அம்மாவும் அப்பாவும் படுத்திருக்காங்க.

மனைவியின் முகத்தைப் பூவாய்த் தொட்டு மேலே உயர்த்திய அருண், மேலும் அவளை எதுவும் பேசவிடாமல் அவள் வாயைப் பொத்த, சுசிலா அவன் கரங்களை ஆவேசமாய்ப் பிடுங்கி, மேலும் உடைந்தாள்.

''என்னைத் தடுக்காதிங்க! என்னைக் கொஞ்சம் பேச விடுங்க! நான் பேசியே ஆகணுங்க! பத்து வருஷமா, என் மனசுல புரையோடிக்

Presenting

The Mysore Sandal Fragrance In Talc



Distinctly different

Available in
400 and 100 gm. packs

Manufactured by: Mysore Cosmetics Limited, Bangalore. Marketed by: Mysore Sales International Limited, Bangalore.



கிடக்குற கொப்பளங்களை நான், கண்டிப்பா, ஆற்றியே ஆகணுங்க. என்னைக் கொஞ்சம் பேச விடுங்க....."

"இதோ பார் 'சுசி! நீ இங்க எதையும் பேச வேண்டாம். நீ சப்தம் போட்டு எல்லாரையும் எழுப்பி விட்டுடாதே வா! எந்திரிச்சி கொல்லைப் பக்கம் போயிடலாம். வா! ம், எந்திரி சுசி!"

சுசீலாவின் கரத்தை மெல்லப் பற்றி அவளை வலுக்கட்டாயமாய் வீட்டின் பின்புறத்தை நோக்கி இழுத்து வந்தான் அருண்.

வெள்ளித் தகடாய், நிலவு உயரத்தில் ஜொலித்துக் கொண்டிருந்தது.

"இப்படி இந்த மரத்துக்குக் கீழே உட்கார்.

சுசீலா அந்த ஆலமரத்தின் அருகில் வந்து நின்றாள்.

காற்று ஜில்லென்று வீசியது!

"இதோ பாருங்க! எதையாவது மனசுல வச்சி, என்னை நடத்தை கெட்டவள்னு தயவு செய்து முடிவு பண்ணிடாதீங்க! தயவு செய்து என்னை நம்புங்க! பத்து வருஷத்துக்கு முன்னால, ஒரு தவிர்க்க முடியாத சூழ்நிலையில், ஒரு அயோக்கியன்கிட்ட என் கற்பைப் பறி கொடுக்கும்படியா ஆயிடுச்சிங்க!

"எப்படி அந்தத் தவற என்னால தடுக்க முடியாம போயிடுச்சோ, அதேபோல என் வயிற்றில உருவான அந்த உயிரையும் அழிக்க, என் மனசுக்குத் தெம்பில்லாமலே போயிடுச்சுங்க!

"என்னோட தாய்மை உணர்ச்சியும், எனக்குப் பிறந்த குழந்தையை அனாதையாக்கவோ, கொல்லவோ, முடியாம தடுத்திடுச்சுங்க!

"ஏதோ, நான் ஆரம்பத்திலேர்ந்து, நல்ல ஒரு கௌரவமான வேலையிலிருந்ததால, என் குழந்தையை ஊருக்குத் தெரியாம காப்பாத்த முடிஞ்சது! என் அம்மாவும் உயிரோட இருந்தவரை, இந்த விஷயத்துக்கு ரொம்ப உதவியா இருந்தாங்க! ஆனா, எனக்கு நல்லாத் தெரியுங்க! ரொம்ப நாளைக்கு இந்த விஷயத்தை மூடி மறைக்க முடியாதுன்னு! இன்னிக்கு வெடிச்சிருச்சி!

"தயவு செய்து என்னை வெறுத்து ஒதுக்கிடாதீங்க! நான் மனசாரக் களங்கமில்லாதவங்க. உங்களையும், நம்ப குழந்தைகளையும் தவிர, வேறு உலகமே இல்லேன்னு வாழ்ந்துகிட்டிருக்கேன்! நடந்த விஷயத்தை ஒரு விபத்தா நினைச்சி, எப்பவும்போல, என்னை உங்க மனைவியா ஏத்துக்கங்க, ப்ளீஸ்! தயவு செய்து என்னை மன்னிச்சேன்னு உங்க வாயால ஒரு வார்த்தை சொல்லுங்க! ஏங்க இப்படி உட்கார்ந்திருக்கீங்க? பேசுங்க! எதையாவது சொல்லுங்க!"

சுசீலா மனம் உடைந்து அருணைப் பிடித்துப் பேயாய் உலுக்க, அருண் ஆறுதலாய், அவள் முதுகைத் தட்டி முகத்தை உயர்த்தினான்.

"தினேஷ் போகும்போது என்ன சொன்னான் தெரியுமா, சுசி?"

"என்னங்க சொன்னான்?"

"சார்! அடுத்த முறை என்னை என் அம்மா, பார்க்க வரும்போது, நீங்களும் அவுங்ககூட என்னைப் பார்க்க வருவீங்களா சார்..ன்னான். ஏன் சுசி, அடுத்தமுறை நீ அவனைப் பார்க்கப் போகும்போது, என்னையும் உன் கூட அழைச்சுக்கிட்டுப் போவியா?"

"நீங்க என்னங்க சொல்றீங்க? நீங்க என்ன கேக்குறீங்க?"

அதுவரை அருகில் அமர்ந்து, வெறும் கண்ணீரை உதிர்த்துக் கொண்டிருந்த சுசீலா, இறுதியாய், அருண் கேட்ட கேள்வியால், சுக்குநூறாய் உடைந்து, அவன் மார்பில் முகம் புதைத்துச் சிதறிப் போனாள்.

நெடுநேரம்வரை என்னென்னவோ பேசி, குமுறி, தன் மனச் சுமையைக் குறைத்துக் கொண்டிருந்த மனைவியை மெல்ல நிமிர்த்தி, அவளை ஒரு குழந்தையாய் அரவணைத்துக் கொண்டு மீண்டும் வீட்டிற்குள் நுழைந்தான் அருண்!



"உங்களுக்கும் அனிதா போன்ற ஒரு மகள் இருந்தால்
என் கஷ்டம் புரியும்! எதற்கெடுத்தாலும்
அழுகை, ஆர்ப்பாட்டம், முரட்டுப் பிடிவாதம்!
சாப்பிடுவதிலும் அப்படியே. கறிகாய் பிடிக்காது. சப்பாத்தியைக்
கொறித்துவிட்டு மீதியைத் தன் செல்ல நாய்க்குட்டிக்குப் போடுவாள்.
கடிந்துகொண்டால் மூக்கின்மேல் கோபம் வரும்—
சாப்பிடாமலேயே எழுந்து போய்விடுவாள்.

இப்படி ஓட்டியடிக்கும் அனிதாவைப்பற்றி என் கணவரிடம்
புகார் செய்தால் "அனிதா உன்னையே பிடிவாதத்தில்
கொண்டுவந்திருக்கிறாள்!" என்று சொல்லிச் சிரிக்கிறார்!

அதுவும் உண்மைதான்!

எனக்கும் நான் இஷ்டப்பட்டதுதான் கிடைக்கவேண்டும்.
துணிமணிகள் வாங்குவதானாலும் சரி, அனிதா அடம் பிடித்துக்
கேட்கும் பொருட்களானாலும் சரி,
எனக்குத் திருப்தியானதையே வாங்குவேன்.

நான் பாத்திரங்கள் வாங்கும்போது அவை சேலம் எவர்சில்வரில்
செய்ததுதானா என்று குறிப்பாகக் கேட்டு வாங்குவேன்.
சேலம் எவர்சில்வரில் செய்த பாத்திரங்களில் கரும்புள்ளிகளோ,
கறையோ பிடிக்காது. வருடக்கணக்கில் உழைத்தாலும் பளபளப்பு
போவதில்லை. வாழ்நாளுக்கும் உழைக்கக் கூடியவை.

பாத்திரப் பிரச்சினையை சுலபமாக சமாளிக்கலாம்
—ஆனால் அனிதாவை?"

சேலம் எவர்சில்வரினால்
தயாரிக்கப்பட்ட பாத்திரங்கள்
எல்லா பிரபலமான
பாத்திரக்கடைகளிலும் கிடைக்கும்.

சேலம் எவர்சில்வர்.
நம்பிக்கைக்குப் பாத்திரமான பாத்திரங்கள்.

சேலம் உருக்காலை

Sista's - SSP.365.85 TM G

* சலீம் தமீஜுதீன், நெல்லிக்குப்பம்.

? அக்டோபரிலிருந்து பஞ்சாயத்துத் தேர்தல் மீண்டும் டிசம்பருக்குத் தாவி விட்டதே?

! இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டுமா? வேண்டாம். அப்படிச் சொன்னால் எழுத முடியாத வார்த்தைகளைக் கொண்டுதான் பதில் சொல்ல வேண்டியிருக்கும்.

* எஸ். ஆர். லதா, அய்யம்பேட்டை.

? நமது முதல்வரின் தமிழ்ப் பற்றுக்கும், கலைஞரின் தமிழ்ப் பற்றுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

! முதல்வரின் தமிழ்ப்பற்று பக்கத்துவீட்டுப் பெண்ணின் மேல் கொண்ட காதல். கலைஞரின் தமிழ்ப் பற்று தனது மகள்மேல் வைத்திருக்கும் பாசம்.

* வி.எம்.கருணாகரன், சின்னதாமல்செருவு.

? ஊழலை ஒழிக்கத் துறவறம் பூண்டவர்களைத்தான் அமைச்சர்களாக்குவேன் என்றொரு திடீர் அறிவிப்பை எம். ஜி. ஆர். வெளியிட்டால்...?

! இப்போது கறுப்பு—சிவப்பு, நடுவில் வெள்ளை—பார்டர் போட்ட வேஷ்டி கட்டிக் கொண்டிருப்பவர்களெல்லாம் உடனடியாகக் காவி கட்டிக் கொண்டு விடுவார்கள். வேறு என்ன மாற்றம் வந்துவிடப் போகிறது?

* ஆர். அப்துல் சலாம், திருச்சி—20.

? வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும், புதுக்கவிதைகளுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டு என்று நினைக்கிறீர்களா?

! 'வேலையில்லாதவர்களெல்லாம் புதுக் கவிதை எழுதுகிறார்கள்' என்று நான் சொல்லுவேன் என்று எதிர்பார்த்துச் சிண்டு முடியப் பார்க்கிறீர்களா? ஊகூம் மாட்டேன்!

* ஜெ. முகமது பாருக், நெல்லிக்குப்பம்.

? நமது சபாநாயகர் அமெரிக்கச் சுற்றுப் பயணம் சென்றிருக்கிறாரே?

! ஆமாம். பல நாடுகளுக்கும் சென்று பல நாட்டவர்களுடன் பழகினால் மனம் விசாலப்படும். பல புதிய விஷயங்களையும், புதிய நாகரிகங்களையும் கற்றுக் கொள்ளலாமே. அதற்காகத்தான்.

* என். செந்தில்குமார், மயிலாடுதுறை—1.

? மதுவிலக்கை அமல்படுத்தினால் ஏற்படும் நஷ்டத்தில் பாதித் தொகையைத் தர மத்திய அரசு முன்வரும் பொழுது, மாநில அரசுகள் மதுவிலக்கைக் கொண்டுவரத் தயங்குவதேன்?

! நஷ்டத்தை ஈடுகட்டினால் மட்டும் போதுமா? 'லாப'த்தை யார் கொடுப்பார்களாம்!

* எஸ். எஸ். டி. ராஜன், சிறுதையூர்.

? அ. இ. அ. தி. மு. க. கொள்கைப் பரப்புச் செயலாளர் பதவி அமைச்சர் அந்தஸ்து கொண்டதா?

* பத்திரிகைகள் பற்றி.



* ரசித்த ஜோக்.

! அமைச்சர்களை சரிசமமாக உட்காரத் தயங்கும் அளவுக்கு அதிகாரம் கொண்ட பதவி அது.

* சீர்காழி இரா. சுவாமிநாதன், சீர்காழி.

? தாங்கள் நீராடுவது குளிர்ந்த நீரிலா? வெது வெதுப்பான நீரிலா அல்லது சுடு நீரிலா?

! வயிற்றெரிச்சலைக் கிளப்ப வேண்டாம். தண்ணீர்ப் பஞ்சத்தின் தலைவிரி கோலத்தைப் பார்த்தால் இனி கூவத்திலும் குளிக்க வேண்டியிருக்கும்போல் தெரிகிறது.

* எம். கல்யாண சுந்தரம், திருநரையூர்.

? 'சைலண்ட் மெம்பர்ஸ்' என்று வருணிக்கப்பட்ட அ. இ. அ. தி. மு. க. எம். பிக்களைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

! இப்படிப்பட்டவர்களை வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுத்துப் போட்டியிடச் செய்

* அந்தஸ்து என்ன?



கொ.ப.செ. பதவியின்



* திமர் அறிவிப்பு?



* சிந்திக்காமல்...



* ரத்தக் கண்ணீர்.



* தமிழ்ப் பற்று

தது கட்சியின் குற்றம். அவர்களுக்கு ஓட்டுப் போட்டு, அவர்களை வெற்றி பெறச் செய்தது மக்களின் குற்றம். பாராளுமன்றத்தில் பேசுகிற மகத்தானதொரு வாய்ப்புக் கிடைத்ததும் மௌனிகளாக இருப்பதென்பது குற்றத்திலும் குற்றம். இவர்களில் யாரை நொந்து கொள்வது?

* கே. சிகப்பி, காரைக்குடி—2.

? சமீபத்தில் தாங்கள் ரசித்துப் பார்த்த திரைப்படம் என்ன?

! ரத்தக் கண்ணீர்!

* ஆங்கரை ஆனந்த், ஆங்கரை.

? திண்டுக்கல் இடைத் தேர்தலின் போது முதலில் வெற்றி பெற்ற அ. இ. அ. தி. மு. க. விற்கும், தற்போது தாங்கள் கண்டு வரும் அ. இ. அ. தி. மு. க. விற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விரிவாகச் சொல்லவும்?

! விரிவாகச் சொல்ல வேண்டும் என்ற அவசியமே இல்லை. தி. மு. க. தவறுகளுக்கு வழிகாட்டியாக இருந்ததென்றால் இப்போது அ. இ. அ. தி. மு. க. அந்தத் தவறுகளுக்கெல்லாம் இலக்கணமாகவே திகழ்கிறது; அவ்வளவுதான்!

* ஏ. சீனிவாசன், புதுவை.

? அரசியல்வாதிகளைப் பற்றித்தான் இன்றைய பத்திரிகைகள் அதிகச் செய்திகள் தருகின்றன என்று ராஜீவ் காந்தி கூறியுள்ளது பற்றித் தராசின் கணிப்பு என்ன?

! 'க்ரைம்' செய்திகளைப் பிரசுரித்தால்தான் பத்திரிகைகள் பரபரப்பாக விற்பனையாகும். அதனால்தான்!

* என். இளங்கோவன், சித்தலவாய்.

? சமீபத்தில் தாங்கள் ரசித்த ஜோக் எது?

! அடுத்த கேள்வியைப் படியுங்கள்.

* க. சரவணன், மாநெல்லூர்.

? அன்று கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. இன்று கப்பலோட்டிய தமிழன் எம். ஜி. ஆர்.தான் என்று அமைச்சர் முத்துசாமி கூறியுள்ளாரே? நமது அமைச்சர்கள் சில சமயம் வரலாற்றுச் சிறப்பு மிக்க சிரிப்புத் துணுக்குகளை வெளியிடுகிறார்கள் அல்லவா?

! முதலில் சிரிப்பாக இருந்தாலும், வ. உ. சி. வாங்கிய கப்பல் வரிப் பணத்தில் அல்ல என்கிற விஷயம் தெரியாதவர் கூட அமைச்சராய் இருப்பது தாங்கிக் கொள்ள முடியாத அவமானமாய் இருக்கிறது.

* வித்யா வந்தன், சிதம்பரம்.

? தமிழ்நாட்டுப் பெண்கள் மனத்தில், கணவனை விட எம். ஜி. ஆரே அதிகமாக ஆக்ரமித்து இருக்கிறார் என்று பண்ருட்டியார் பேசியிருக்கிறாரே?

! அமைச்சர் பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக எப்படியெப்படியெல்லாம் பேசுகிறார்கள்! பாவம், பண்ருட்டியார். சிந்திக்காமல் பேசிவிட்டார், விட்டுத் தள்ளுங்கள்!

* இரா. கி. பட்டாபிராமன், குடியாத்தம்.

? ஓர் உண்மையான எழுத்தாளனுக்குத் தாயைப் பற்றி எழுதும் போது மார்பு சுரக்க வேண்டும் என்கிறாரே வைரமுத்து (இன்னொரு தேசிய கீதம்)?

! வைரமுத்துவை விரும்பிப் படிப்பவன் தான். ஆனால் இது என்னவோ சத்தியமாக எனக்குப் புரியவில்லை!

* கற்றுக் கொள்வாரா?





* புரியாத கருத்து

* ரூ. 10 பரிசு பெறுபவர்:

எம். கல்யாணசுந்தரம்,
4/85, திருநரையூர்,
நாச்சியார் கோவில் (அஞ்சல்),
612 602,
தஞ்சை மாவட்டம்.

அந்தஸ்து என்ன?



இதயக்கோயில்

மோகன் கையில் மைக்கைக் கொடுத்தால் மட்டும் போதாது. சுவாரஸ்யமான கதையும் வேண்டும் என்று தயாரிப்பாளர் உணர்ந்திருப்பது நமக்கு லாபம்.

சாதகம் பண்ணினால் மட்டும் போதாது. சாப்பாட்டுக்கு வழி செய்து கொள்ளவும் வேண்டும் என்று புரியாத சங்கரை, அவர் காதலி — கம் — முறைப் பெண் கௌரி சென்னைக்கு அனுப்புகிறாள்.

வீராணம் புகழ் குழாய்களில் குடியிருந்து ராகம் பாடி சினிமாவில் வாய்ப்புக் கிடைத்து, முதல் ரெக்கார்டிங்கிற்கு மோகன் சந்தோஷ முகத்தோடு போய்ச் சேருகிறார். ரெகார்டிங் தியேட்டரில் பாக்கெட்டிலிருந்து ஒரு கடிதம் விழ, கடிதம் அவரைச் சென்னைக்கு அனுப்பிய காதலியிடமிருந்து என்று தெரிந்து பரபரப்பாய்ப் படிக்கிறார். ஆனால் டூ லேட். பஸ் நிலையத்திற்கு அவர் போகு முன் அம்பிகா வேண்டாதவர்களிடம் சிக்கி...

இது நீளமான ஃப்ளாஷ் பேக்கில் முன் கதை.

அப்புறம் அந்தப் பிரபல, கலைஞன் குடிக்கு அடிமையாக, அவன் இசைக்கு அடிமையாகும் கல்லூரி மாணவி அவனை எப்படி நிஜத்திற்குக் கொண்டு வருகிறாள் என்பது பின் கதை.

முன் கதை நாயகி: அம்பிகா. பிற்பகுதிக்கு ராதா. கிராமத்துடுக்குத்தனத்திற்குத் தாவணி கட்டிய அம்பிகா என்றால் மாடர்ன் ட்ரெஸ் போட்ட துருதுருப்பிற்கு ராதா. படத்தில் ஒட்டாவிட்டாலும் சுவையான காமெடிக்குக் கவுண்டமணி.

மோகன் வீட்டில் தைரியமாய் நுழைந்து ஒவ்வொரு மது பாட்டிலாய்ப் போட்டு உடைத்து, மோகன் பளாரென்று கன்னத்தில் அடித்த பின்னும் தளராமல் மேலும் உடைத்து அவர் மனத்தை அசைக்கும் ஸீனில் ராதாவுக்கு கிரெடிட்.

அத்து மீறும் ராதாவிடம் பொங்கி எரிமலையாய் வெடித்து விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாகச் சமாதானமாகி நட்பாகிறாரே. அந்தக் காட்சியில் மோகனுக்கு மார்க் அதிகம்.

ராஜராஜனின் காமிரா இயற்கையின் பசுமைகளையும், வானத்தின் கலந்த நீலத்தையும் அருவியின் அழகான வெண்மையையும், பெய்யும் மழையின் சிலீரையும் வெகு அழகாகச் சிறைப்படுத்துகிறது.

படம் போகப் போகக் கொஞ்சம் ரப்பர் இழுத்தாலும், அவ்வப்போது தோள் கொடுத்துத் தாங்குவது மியூஸிக்.

மொத்தம் ஏழு பாடல்கள். அங்கங்கே பழைய சாயல் அடித்தாலும் அத்தனையும் இதமான இனிமையான இசை. வெல்டன், இளையராஜா. இன்னும் நெஞ்சை வருடிக் கொண்டேயிருக்கின்றன அந்தப் பாடல்கள்.



பணம் பத்தும் செய்யும்

ஊரெல்லாம் புழுத்திருக்கும் லஞ்சம் பற்றிப் படம். காமிரா அவ்வப்போது அசையாவிட்டால் நாடகம் என்று கூட வர்ணிக்கலாம்.

எந்த டிபார்ட்மெண்டில் என்ன வேலை ஆக வேண்டுமென்றாலும், பஞ்சாபகேசனை அணுகுங்கள். ஆனால் பஞ்சாபகேசன் நியாய வாதி. தான் மட்டும் சாப்பிடாமல் கவரில் போட்டு அத்தனை லெவல் மனிதர்களுக்கும் பட்டுவாடா செய்வார். பஞ்சாபகேசனாய் நம்ம கவுண்டமணி.

வெறும் வெடிச் சிரிப்புகள் மட்டும் போதாது என்று உணர்ந்து சீரியஸ் காட்சிகளில் சீரியஸாகவும், சோகக் காட்சிகளில் சோகமாகவும் ஜமாய்த்திருக்கிறார்.

அவருடைய மனைவியாய், யார் அது ஸ்ரீவித்யாவா! ரொம்ப நாள் கழித்து தமிழில் பார்க்கிறோமே, கொஞ்சம் நல்ல ரோலாய்ப் பண்ணியிருக்கக் கூடாது? கொஞ்சம் கூட சவாலில்லாத தஞ்சாவூர் பொம்மைப் பாத்திரம். வருத்தமாயிருக்கிறது, மேடம்!

எஸ். வி. சேகர் திடீர் என்று போலீஸ் சர்வீஸ் பாஸ் பண்ணி, காக்கிச் சட்டை அணிந்து கொண்டு லஞ்சத்தை ஒழிக்கப் புறப்படும் உத்தம புத்திரன். யார் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று கண்டு பிடிக்கக் கொஞ்சம் கரன்ஸி நோட்டுகளைக் கொடுத்தனுப்புவார்களாம். வேட்டை நாய் மாதிரி முகர்ந்து கொண்டு வந்து அப்பாவி மேஜரின் கையில் இருப்பதைப் பார்த்து அரெஸ்ட் செய்வார்களாம். அழுத்தமே இல்லாத திருப்பம்.

சி. பி. ஐ. என்று சொல்லிக் கொண்டு இரண்டு ஆட்கள் வீடு தேடி வர, அந்த ஐந்து நிமிடம் பதறிப் போய் அவர்களுக்கு ஏராள உபசாரம் செய்துவிட்டு, பீரோ கம்பெனி ஆட்கள் என்று தெரிந்ததும் கவுண்டமணி சீறுகிறாரே, பரவாயில்லை.

லஞ்சம் என்ற வார்த்தைக்கு அகராதி போட்டது போல் எத்தனை விதம் விதமான விளக்கங்கள்! சைக்கிள் கம்பியிலிருந்து சர்க்கஸ் புலி வரைக்கும் எத்தனை உதாரணங்கள்!

சாகும் போது கவுண்டமணி சொல்லும் ஒரு வசனம் அட்டகாசம்: 'என்னை எரிக்கும் போது கையில நூறு ரூபா வச்சி எரிடா. நான் பண்ணின பாவத்துக்கு எனக்கு நரகம் தான் கெடைக்கும். இருந்தாலும் சித்ரகுப்தனுக்கு ஸம்திங் கொடுத்து சொர்க்கம் போக முடியுதா பார்க்கறேன்.' (வசனம்: வி. வீ. சுந்தரம்).

எம். ஜி. ஆரின் கதையை மேடையில் கதாகாலட்சேபம் செய்யும் ஸீன் மகா நீளம். யாரைத் திருப்திப் படுத்த?

நிறைய இடி இடித்துவிட்டு மழை பெய்யாதது போல் ஓர் ஏமாற்றம், வெளியே வரும் போது.

— ஜெயமன் மதன்

வட்டமேஜை

பிராமணர்கள்தான் இளிச்சவாயர்களா?

* ஒருகுறிப்பிட்ட சமுகத்தினரை நேரிடையாகச் சுட்டிக் காட்டி நாடகத்தின் வாயிலாக மட்டம் தட்டுவது மிகவும் கண்டிக்கத்தக்கது. இதே இந்து மதத்தில் உள்ள ஒரு செட்டியார், முதலியார், கவுண்டர் போன்ற ஜாதிக்காரர்களை மையமாக வைத்து அவர்கள் இப்படி செய்வதை நேரடியாக நாடகத்தின் மூலம் கண்டிக்க முடியுமா? அல்லது முஸ்லிம், கிறிஸ்தவர்களை இப்படி மட்டம் தட்டி எழுதி நாடகம் போட முடியுமா? ஏன் பிராமண குலத்தையே மட்டம் தட்டிப் பிழைப்பை நடத்துகிறீர்கள்! ஓ... இளிச்சவாயர்கள் — அப்பாவிகள் பிராமணர்கள்தான் என்பது உலகறிந்த விஷயம் என்பதாலோ...?

ஈரோடு—10. மேஜர்தாசன்.

பிராமணர் சங்கத்தின் பணி இதுவல்ல!

* திரு. வெங்கட் நடத்திய நாடக நிகழ்ச்சியின் போது நிகழ்ந்த அசம்பாவிதங்களைக் கண்டு மிகுந்த மன வேதனையடைகிறேன். பிராமணர்கள் சங்கம் அமைத்தது இதற்கல்ல. அடுத்த வேளை உணவிற்கு என்ன செய்வது என்று தவிப்பவருக்கு உதவி, கல்விக் கூடங்களிலே சேர்க்க, படிக்க வைக்க—திருமண வயதை அடைந்தும், வரதட்சணைக் கொடுமைகளால் திருமணமாகாமல் வாடி நிற்கும் பல்லாயிரக்கணக்கான பிராமண சகோதரிகட்கு இயன்ற அளவு உதவவே சங்கம் அமைக்கப்பட்டது. அவர்தம் வாழ்வில் நம்பிக்கை தோற்றுவிக்கவே இவ்வமைப்பு. இந்த அடிப்படையில், என்னைப் போன்று ஆயிரமாயிரம்தொண்டர்கள்செயல்பட்டுவருகிறோம். அவற்றை விட்டு, உரிய முறைகள் பல இருக்கத் தேவையற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு, சங்கத்தை மாசுபடுத்த வேண்டாமெனத் தங்கள் பத்திரிகை வாயிலாகப் பணிவன்போடு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சமூக அமைப்பிலுள்ள தீங்குகளைப் போக்க விரும்பும் ஸ்ரீ வெங்கட்டிடம், நாசூக்காக வசனங்களைக் கையாளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கோட்டையூர். எஸ். பஞ்சநதம்.

வித்தியாசமான பார்வை!

* காஞ்சிபுரத்திற்குச் செல்பவர்கள் எல்லோரும், அண்ணாவின் வீட்டையும், அலங்காரப் ஜவுளிக் கடைகளையும், பிரபலமான கோவில்களையும் போட்டி போட்டுப் போட்டோ பிடித்து வரும் நாளில், நீர் ஒருவரே 'பொம்மைத் தொழிலாளர்' களைப் பேட்டி கண்டுள்ளீர்! பேட்டிவித்தியாசமாகமட்டுமின்றி, விவரமாகவும் இருந்தது. அட்டைப் படமும் அருமை.

சென்னை. பி. எஸ். கோவிந்தராஜன்.

முப்பெரும் விழா முப்பெரும் நஷ்டம்

* தி. மு. க. நடத்திய முப்பெரும் விழா கழகத்தைப் பொறுத்தமட்டில் மாபெரும் வெற்றியாகக் கருதப்படலாம். ஆனால் பொது மக்களுக்கு முப்பெரும் நஷ்டமாக முடிந்தது. பொது மக்களின் நேரம் விரயமாயிற்று; பொதுச் சொத்துக்கள் பாழாயின; விட்டுக்கும் ரயில் நிலையத்துக்கும் மற்றும் டாக்டரிடமும் அவசரமாகப் போக வேண்டியவர்கள் அவதிப்பட்டார்கள். தி. மு. க. என்றில்லை, எல்லாக் கட்சியினருமே பேரணி நடத்துகிறார்கள். தத்தமது பலத்தைக் காட்டப் பேரணி ஊர்வலம் நடத்துகிற இந்த அநாகரிகத்தைப் பல்வேறு கட்சித் தலைவர்களும் இணைந்து கைவிட்டத் தீர்மானிக்க வேண்டும். 21—ம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்நாளில் இப்படிப் பேரணி நடத்தினால்தான் மக்களை வசீகரிக்க முடியும் என்பது போன்ற மூட நம்பிக்கைகள் ஒழியட்டும்!

சென்னை 10. அனுசுயா.

(இக்கடிதம் பரிசு பெறுகிறது.)

ஆண் இனத்துக்கே துரோகம் செய்துவிட்டீர்!

அனுபவமில்லாத தராசு!

* காதல் தோல்வி ஆண்களுக்கு மரண அடியாகவும், பெண்களுக்குக் கொசுக்கடியாகவும் இருப்பதேன் என்ற கேள்விக்குத் தராசுவின் பதில் என் போன்ற இளைஞர்களுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாக உள்ளது. பெண்களுக்கு வக்காலத்து வாங்கி இனத்துரோகம் செய்துஉமது சிறு புத்தியைக் காட்டி விட்டீர். அந்த மரண அடியை அனுபவித்து இருந்தால் இது போல் பதிலளித்திருக்க மாட்டார் தராசு.

சென்னை—5. வடமலை முத்து.

காதி கிராமோத்யோக் பவனின் 'கருணை'



* நாங்கள் செய்யும் பொம்மைகளை, அண்ணா சாலையில் உள்ள காதி கிராமோத்யோக் பவனில் 1957—லிருந்தே விற்பனை செய்கிறார்கள். முக்கியமாக நவராத்திரிக் கொலு சமயத்தில் எல்லா விதப் பொம்மைகளையும் வாங்கி நியாயமான விலைக்கு விற்று எங்களுக்கு உடனுக்குடன் கணக்குத் தணிக்கை செய்கிறார்கள். காதி கிராமோத்யோக் பவன் எங்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்காக உதவி செய்கிறது. கல்கியில் பிரசுரமானது போல் எங்களுடைய பொம்மைகளை ஒவ்வொரு வருடமும் விலையைக் கூட்டி விற்பனை செய்வது இல்லை.

15.9.85 'கல்கி' யில் எழுதிய கட்டுரை மூலம் எங்களுடைய தொழிலுக்கே மிகவும் பங்கம் விளைவித்து விட்டீர்கள். காதி கிராமோத்யோக் பவன் தந்தி மூலமாகவும் கடிதம் மூலமாகவும் சுமார் ரூ. 15000/— மதிப்புள்ள நவராத்திரி பொம்மை ஆர்டர்களை வேண்டாம் என்று தெரிவித்துள்ளனர். எங்களுடைய வியாபாரத்தைக் கெடுத்து விட்டீர்கள்.

ஆகையால், காதி கிராமோத்யோக் பவனில் விற்கப்படும் பொம்மைகள் மிகவும் நியாயமான விலையில் விற்கப்படுகிறது என்பதைப் பிரசுரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

எஸ். சரவணபக்தர்.

காஞ்சிபுரம்.

(காதி கிராமோத்யோக் பவனில் விற்கப்படும் பொம்மைகளின் விலை ஆண்டுதோறும் கூட்டி விற்கப்படுகிறது என்று 'கல்கி'யில் வெளியான செய்தி தவறு என்றால் அதற்கான விளக்கத்தை ஆதாரங்களோடு கல்கி அலுவலகத்துக்கு எழுதாமல் அப்பாவியான சரவணபக்தருக்குக் கொடுக்கப்பட்டிருந்த ஆர்டரை அவசரம் அவசரமாகத் தந்தியடித்துக் கேன்ஸல் செய்த காதி கிராமோத்யோக் பவனின் செய்கைதான் நமக்கு விளங்கவில்லை; வியப்பாக இருக்கிறது.—ஆசிரியர்.)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran